www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
ஏப்ரல்.16-22,1995

# வாரமலர் தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 98



சித்திரையே வருக !
நம்மவர்கள் வாழ்விலே
பத்திரமாய்
மகிழ்ச்சியேனும்
முத்திரையைப் பதிக்க !
உள்ள ஆழத்தில்
அன்பென்னும் பூவெடுத்து
வாசக நெஞ்சங்களை
வருடி வாழ்த்துகிறோம் !

## இலங்கையில் மீண்டும் இந்தியப் படை?

சூழலைத் துருவும் எக்ஸ்ரே ரிப்போர்ட்



ராஜேந்திரியின் அரசியல் அவலம்

முன்னாள் ஜனாதிபதியின் காதல் வலை

எதற்கும் துணிந்த பூஜா பட்

## வைரமுத்து திருடினாரா?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## வசந்த முத்திரை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சித்திரைப் புத்தாண்டு
மலரும் வேளையில்
முரசின் இதய வாழ்த்துக்களையும்
நினைவில் வைத்திருங்கள்.

வேட்டோசைகள்
செவிகளை அதிரவைக்காத
சித்திரைப் புத்தாண்டு
உங்களையெல்லாம் நிச்சயம்
மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மகிழ்ச்சி நீடிக்க வேண்டுமானால்
சமாதானத்தின் மலர்ச்சி
தற்காலிகமானதாக அல்லாமல்
நிரந்தரமாக நிலைக்க வேண்டும்.

தமிழ்-சிங்கள மக்களது
ஒன்றுபட்ட விழாவாக
சித்திரைப் புத்தாண்டு
சிறப்புப் பெறுகிறது.

இந்த சிறப்புத் திருநாளில்
இனங்களின் ஒற்றுமைக்கு
உயர்வும்-உந்துதலும் தரும்
பொறுப்பான பணிகளைச் செய்ய
அரசியல் சக்திகள்
உறுதி பூண வேண்டும்.

ஐக்கியத்தை மக்கள்
அனைவரும் விரும்புகிறார்கள்.
சமாதானத்தையும்
மக்கள் யாவரும் நேசிக்கின்றனர்.

அரசியல் சக்திகளின்
துணிச்சலின்மையும்
பொதுப் பிரச்சனைகளில் கூட
ஒருமித்த கருத்தின்மையுமே
தீர்வுகளை-எட்டத்
தடையாக உள்ளன.

வரலாற்றுத் தவறுகளைத் திருத்தாமல்
வாக்குகளைச் சேகரிக்க,
வியூகம் வகுத்துக் கொண்டிருந்தால்
நாட்டின் எதிர்காலம்
தேக்க நிலையில் இருந்து
மீள்வது எக்காலம்?

அரசின் நடவடிக்கைகளில் கூட
அரசியல் தீர்வு விடயத்தில்
வேகத்தைக் காணமுடியவில்லை.
இது வேதனை தரும் நிலையாகும்.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை
தொடர்பாக-
அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள்
சொல்வதற்கும்-
உண்மையான நிலவரத்திற்கும்
இடையே எட்ட முடியாத
இடைவெளி காணப்படுகிறது.

பிரச்சனை இல்லை
இரு தரப்புக்கும் இடையே
பரம சந்தோச நிலை உள்ளது
என்று காட்ட அரசு நினைக்கிறது.

இந்த நினைப்புக்கு மாறாக
செய்திகளை அவை உள்ளவாறே
தெரிவித்தால் பத்திரிகைகள் மீது
பொறுப்பில்லை என்று குற்றம் சாட்டுவது
வியப்பான வேடிக்கை.

இட்டுக் கட்டிச் செய்திகள்
வெளியிடுவோரை
சுட்டிக்காட்ட வேண்டும்.
உரிய மறுப்பை தெரிவிக்க வேண்டும்.
அதை விடுத்து
பொதுவாகவே பத்திரிகைகள் மீது
குற்றம் சாட்டுவது சரியல்ல.

ஜனநாயகம், அரசியல் சுதந்திரம்
சமாதானம் என்பவற்றுக்காக
போராடும் போராளிகளாக
பத்திரிகைகள் செயற்படவேண்டும்.

அதே சமயம்,
செய்திகளை உள்ளது உள்ளபடி
மக்களுக்கு தெரிவிக்கும் பொறுப்பும்
பத்திரிகைகளுக்கு உண்டு.


பகிரங்கத் தன்மையோடு
பரஸ்பர புரிந்துணர்வோடு
பேச்சுக்கள் தொடர வேண்டும்.
சமாதானம் நிலைக்க வேண்டும்.
புதிய சித்திரை
வசந்த முத்திரை பதிக்க வேண்டும்.
இதுவே சகல மக்களதும்
எதிர்பார்ப்பும்-விருப்பமுமாகும்.

சித்திரை புத்தாண்டுக்கு
அலுவலக-அச்சக ஊழியர்கள்
விடுமுறை நாடி விருப்பம் தெரிவிப்பதால்
உங்களுக்கு ஒரு வருத்தமான செய்தி!
அடுத்தவார முரசு மட்டும்
உங்கள் கரம் சேராது.
பொறுத்துக்கொள்க. இடையிலே
ஒரு வாரம் மட்டுமதானே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## கப்ரின் வேதனையிலிருந்து காப்பது!

ஹஜ்ரத் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் அறிவிப்பதாவது: "மனிதன் செய்யும் அமல்களில் கப்ருடைய வேதனையை விட்டும் அவனைக் காப்பாற்றுவது அல்லாஹ்வின் திக்ரை விட வேறெதுவுமில்லை" என அண்ணல் நபி(ஸல்) அருளினார்கள்.

பொதுவாக கப்ருடைய வேதனை மிகக் கடினமானதாகும். ஹஜ்ரத் உஸ்மான் (ரழி) அவர்கள் கப்ரின் பக்கம் சென்றால் அதனைப் பார்த்து தாடி நனைந்திடும் அளவுக்கு அழுவார்கள். ஒருவர் அன்னாரிடம், "தாங்கள் கப்ரை கண்டு அழும் அளவுக்கு நரகத்தைப் பற்றி கூறப்படும் போது கூட அழுவதில்லையே?" என்று வினவ, "கப்ரானது மறுமையின் தரிப்பிடங்களில் முதல் தரிப்பிடமாகும். ஒருவர் அதிலிருந்து வெற்றியடைந்து விட்டால் மற்ற அனைத்து இடங்களிலும் வெற்றிபெறுவது எளிதாகிவிடும். அதில் வெற்றி பெறாதவருக்கு அதன் பிறகுள்ள இடங்களும் சிரமமாகவே இருக்கும்." என்று விடையளித்த பின் "கப்ரை விட பயங்கரமான எந்தக் காட்சியையும் நான் கண்டதில்லை." என்று நபி(ஸல்) கூறியதாகக் கூறினார்கள்.

கப்ருடைய வேதனை ஏற்படுவதற்குச் சில பாவங்கள் விஷேசமான சம்பந்தம் உடையவையாக இருப்பதைப் போலவே அவ் வேதனையை விட்டும் தப்பிப்பதற்கும் சில பிரத்தியேக வணக்கங்கள் இருக்கின்றன. 'தபாரகல்லதீ' சூராவை ஒவ்வோர் இரவிலும் ஒதி வருவது கப்ருடைய வேதனையை விட்டும், நரக வேதனையை விட்டும் தப்பிப்பதற்கு காரணமாகும்" என்று பல ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன. அல்லாஹ்வை திக்ரு செய்வதும் கப்ருடைய வேதனையை விட்டும் காப்பாற்றும் என்று மேற் கூறப்பட்ட ஹதீஸில் கூறப்பட்டது.

ஏறாவூர்-ஏ. ஆர். எம். றிஸ்வான்.

## கடவுள் மேல் சார்ந்திருத்தல்.

"கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்."

*(சங்.72:12)*

தேவையில் இருப்பவன் கூப்பிடுகிறான்; அவன் வேறு என்ன செய்ய முடியும்? இதை வாசிப்பவரில் தேவையில் இருப்பவர் உடனே கர்த்தரை நோக்கி கூப்பிடட்டும். ஏனெனில் இதுவே அவர் செய்யக் கூடிய ஞானமானசெயல்.

உங்கள் நண்பர்களிடம் உங்கள் தொல்லைகளைச் சொல்லி அழாதேயுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களுக்கு உதவி செய்வது கூட ஆண்டவர்துணை செய்வதினால்தான். நீங்கள் உடனே செய்யக்கூடியது கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதுதான். வேறு யாரிடமும் ஒடுவதால் பயன் ஏற்படாது.

"ஐயோ எனக்கு நண்பர்களும் உதவி செய்யக் கூடியவர்களும் யாரும் இல்லையே!" என்று நீங்கள் புலம்புகிறீர்கள். ஆண்டவரே நண்பரும் துணை புரிபவருமானவர் என்று நீங்கள் அவர் மேல் சாரலாம். இம்மைக்குரிய கிரியைகளுக்காகக்கூட நீங்கள் கடவுளை நோக்கி கூப்பிடலாம். ஏனெனில் அவர் பிள்ளைகளுக்கு வேண்டியுள்ள அந்தத் தேவைகளுக்காகவும் அவர் கவலைப்படுகிறார். ஆன்மீகத் தேவைகள் அழுத்தும் சுமை போன்றவை. அவைகளுக்காக நீங்கள் வேண்டிக் கொண்டால் ஆண்டவர் உங்கள் கூப்பிடுதலைக் கேட்டு உங்களை விடுவிப்பார். உங்களுக்குத் தேவையானவைகளையும் கொடுப்பார்.

உதவியற்றவரே, அவர் உதவியை ஆதாரமாகக் கொள்ளுங்கள். அவர் ஒரு போதும் உங்களை கைவிட மாட்டார்.

உயிரோடு இருப்பவரான ஆண்டவரிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்கு உதவியளிக்க மறுக்க மாட்டார். அவர் கிருபையையே உங்கள் வேண்டுதலாகக் கொள்ளுங்கள். இயேசு அரசரானவர் நீங்கள் மாள்வுற விட்டு விடுவாரா? இதை நீங்கள் மறந்துவிட்டீர்களா?

குணந்தி பிரபா-கனடா.

## கவிதைப்போட்டி இல-95

### பரிசுக்குரிய கவிதை

### எங்கே வைத்தீர்?

விடைபெற்ற ஆடைகளை
எங்கு வைத்தீர்?
என் வறிய தங்கைக்காய்
குடை ஒன்று தந்து-
கொள்வனவு செய்வேன்.

எஸ்.பி.முத்து-கொலன்னாவ.

**அவர்களோ?**

கோலக்குடை பிடித்து
கொவ்வை இதழ் விரித்து
காலிமுகத் திடல் செல்ல(க்)
காத்திருக்கும் மங்கையரோ?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**என்ன கடையோ?**

குடைகளுக்குள்ளே...என்ன
இருக்கு?
இளம் உள்ளங்களை
வாங்கும்
அடகுக் கடைகளா...?

கோவுஸ்ஸ ராம்ஜீ-எல்ல

**புரியவில்லையே?**

ஆடை குறைத்து
அங்கம் காட்டி
மோகப் பார்வையுடன்
தேக விளம்பரமோ?

சுப்ரமணியம் வாணீஸ்வரி
-அப்பர் கலஹா.

**வலைவிரிப்பு**

அழகிகளின்
அணிவகுப்போ
ஆடவருக்கு
வலை விரிப்போ?

கே.ரவி-அக்கறைப்பற்று-08.

**ஒத்திகை**

2000ம்
ஆண்டளவில்
இந்த உடையும்
வேண்டாமென்றா?
இப்போதே
ஒத்திகை!

சிவா மனோ ஹரப்புக்கலை.

**கோலங்கள்**

வானத்தில் உதித்துவரும்
ஞாயிறு,
எங்களின் கோலத்தைக் கண்டு.
கோபமடைந்து விடுவானோ?

நஸீபியா பஹூர்தீன்-புத்தளம்.



**எதற்காக**

ஆடைகுறைத்தது
கோடைக்காய்:
குடை விரித்தது
மழைக்காய்:
இடை மறைத்தது
எதற்காய்?
பார்வை அம்பின்
தடைக்கோ!

ராஜன் சுமதி-நீர்கொழும்பு.

**தணல்**

காளையரின் கண்களுக்கு
கார்மேகக் குளிரூட்டும்
கனவுக் கன்னியரே நீர்
குடை பிடிக்கும் கோலமென்ன
தாளமுடியா தணல் நெருப்பாய்
தேகமெல்லாம் தகிக்கிறதோ?

பிரேமராணி பேரின்பராஜா
கொழும்பு-13.

**பா(மீ)தி**

பார்வையால் தெரிந்தது
நீபாதி! நான் மீதி!
புன் சிரிப்பால் புரிந்தது
பணம் பாதி! பரிவு மீதி!
பாலுடம்பால் தெரிந்தது
சுவை பாதி! சுகம் மீதி!
பத்தாண்டு கழித்தே புரிந்தது
பாலான நோய் பாதி! பாவம் தான் மீதி!

கவிநாதன்-கொழும்பு-04.

**இப்படியா?**

கொழுத்தும் வெய்யிலின்
கொடுமை ஒருபுறம்,
கொட்டும் வியர்வையால்
புழுக்கம் மறுபுறம்
தாங்க முடியவில்லைதான்
அதற்காக, இப்படியா...?

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

**நாருரித்த கோலமிதோ**

நாகரீகம் வந்திங்கு
நாருரித்த கோலமிதோ
நாணமது நாணியிங்கு
நலிவடைந்து ஒதுங்கியதோ?

நிருத்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-98



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.04.95

– முகவரி –

கவிதைப் போட்டி இல: 98
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772,
கொழும்பு.

**"தடை தராமல் இருக்கட்டும்"**

குடைநிழலில் குதூகலம் தந்தாலும்
நடைகெடாமல் நாடு நகர
படையிலும் கொடிய பார்வையால்
தடை தராமல் இருக்கட்டும் அழகிகள்

வாழையூர்-வைதமுத்து.

**எது அழகு?**

"குடையழகா?
குளியலாடையின்
குறையழகா?"

தேவசுந்தரி ஆறுமுகம்-
திருமலை.

**கவனிக்கவும்.**

இங்கு
எயிட்ஸ்
விற்பனைக்கு உண்டு

எம்.என்.எம்.நவிரஜி-
அக்குறணை-03.

## வாசகர் சாலை

'தாய்' எங்கள் உள்ளங்களில் நிறைந்துள்ளது. இப்படியான கதைகளை தரும் முரசுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

மர்ஜுக் காதர், பாரிஸ் நயீம்-மருதமுனை.

**அன்பின் தினமுரசே!**


அரசியல் விடயங்களை உடனுக்குடன் கட்சி சார்பற்று வழங்குவதில் உனக்கு நிகர் நீதான்.

தே.ஜெனகன்-கொழும்பு-15.

**"தித்திக்கும் என்னாசை முரசே"**

உன் இறக்கைகளில் காவிவரும் சிறுகதைகள் என் இதயத்தை கவர்கின்றன. நீ இன்னும் சுவையான சிறுகதைகளுடன் என் இதயத்தை மகிழவைப்பாய் என்று உன்னை வாழ்த்துகின்றேன்.

ப சுபத்திரா-பசறை



"உந்தன் அழகு முகம் காண
ஆவலுடன் பாத்திருப்பேன்!
முகம் காணின் ஆனந்தம்
முகம் காணவில்லையெனின்-ஆழ்சோகம்"

வாசுதேவா-களுத்துறை.

**தாய் எங்கள் இதயத்திலே..**

அன்பின் புதிய நிலாவே..! நீ சுமந்து வரும் தாய் என்ற நாவல் அடுத்த திருப்பம் எப்போது என எம்மை ஏங்கவைக்கிறது. ரசிகனின் இலக்கிய நயம் ஏ வன்... சினி விசிட் பிரமாதமாக வீறு நடை போடுகிறது.

மோகனா-அர்ஜுன், அனிதா
ராஜேந்திரன்-இரத்தினபுரி.

ஒவ்வொரு வாரமும் நீ சுமந்து வரும் சிறுகதைகள் கவிதைகள் சுப்பர். கண் கவரும் சினி விசிட் பிரமாதம்.

சில்மியா நிசார்-தெலியாகொன்னை.

சினிவிசிட் பகுதியில் தென்னிந்திய சினிமா விடயங்களே அதிகம் வருகிறது. தயவு செய்து நம்நாட்டு சிங்கள சினிமாச் செய்திகளையும் ரூபவாஹினி நாடகச் செய்திகளையும் அவ்வப்பொது வெளியிட்டுதவுமாறு வேண்டுகிறேன்.

ஏ.முஹம்மது ஜலீல்-உக்குவெல.

கென்னடியின் காதலிகளை நேரில் காண்பது போலவே சித்தரித்து விட்டீர்கள். ரசிகனின் 'கிரைம் டயறியை' அடுத்து எதிர்பார்க்கும்.....
ஏ.மகேந்திரன்-நுவரெலியா.

ஒவ்வொரு வாரமும் உனது ஆக்கங்களை விரும்பி படித்து வருகிறேன்.
நீ சுமந்து வரும் ஆக்கங்களில் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' என்ற தொடர் கட்டுரை நாம் அறிந்திடாத பல செய்திகளை எமக்கு அள்ளித் தருகிறது.

கலேவல்பொல-முஹம்மட் ஷாமில்.

**நூறாவது வயது...?**

(இ)ரசிகர்களின் (இ)ரசனையாளர்
(இ)ரசிகனின்
(இ)ரகசியம் இனியும் வேண்டாம். தயவு
செய்து
(இ)ரசிகனை அறிமுகப்படுத்துங்களேன்
முரசின்
நூறாவது வயது போனஸாக!

செ.பத்மா, டமாஜினி, நவ்சாத்-கொழும்பு-10.

**அன்பான முரசே!**

நீ எத்தனையோ உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டாய். அதில் நானும் ஒருத்தி. உன் பாப்பாமுரசு, மகாபாரதம், அதிசய தகவல்கள் ஆகியன என்னைக் கவர்ந்து விட்டன. உன் சேவை என்றும் நீடிக்கட்டும்.

பர்வீன் நாகூர்-பொல்கஹவெலை.

ரசிகன் தரும் இலக்கிய நயம், தொடர் நாவல் தாய், ஏனைய அனைத்து அம்சங்களும் தேனிலும் இனிமையானதாக இருக்கிறது. மேலும் உன் சேவை ஓங்க என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

ஆர்.ஜெஸ்லின்-இறக்குவானை.

என்னய்யா
ராஜதந்திரியாரே!
'இரண்டு எழுத்தார்'
(உபயம் அய்யாத்துரை)
விடயத்தில் கரிசனம்
காட்டுகிறீரோ? விமர்சனக்
கரிசனம் காட்ட பலர்
இருக்கும் போது நீருமா?
வேண்டாமே!
வி.தம்பிராசா-கல்முனை.

**"முரசுக்கு கைகுலுக்கு...!**

"மேலதிக மகிழ்ச்சிகளுடன்" முரசுக்கு எங்கள் "இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்" வாசமுடன் சேரட்டும்!

ஒரு புறம், இலக்கிய நயம்! மறுபுறம், பல(ா) வகை தொடர் மூலம்! அன்புக்குரிய, அபிமான 'ரசிகன்' கலக்குது பார் இவர் ஸ்டைலு! என்று 'சொக்க' வைக்கிறார். ஆம், நாமும் ரசிகனின் தோள்தட்டு கிறோம்!...மேலும் 'மகாசூலம்' தொடர் வேகம், அதிஅற்புதம்!...

வாஹிட் ஏ.குத்தூஸ்-பதுளை.

**அன்பென்று கொட்டு முரசே!**

உன் ஆக்கங்கள் அத்தனைக்கும் நிகரேது? துன்பங்கள் வரும் வேளையில், உன் முகம் கண்டு என் மனம் மகிழ்வுறும்.

சந்திராணி தங்கதுரை-சவளக்கடை-07.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அரச தூதுக்குழு குறித்து புலிகள் வியப்பு!

# பூநகரிக் கோரிக்கையில் புலிகள் ஒரே பிடி!

(அரசியல் நிருபர்)

**அரசியல் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று அரசு விடுத்த கோரிக்கையை புலிகள் அமைப்பினர் நிராகரித்துள்ளனர்.**

**அரசியல் பேச்சும் அன்றாடப் பிரச்சனைகள் பற்றிய பேச்சும் ஒரே நேரத்தில் நடைபெறலாம் என்று அரசு யோசனை தெரிவித்தது. உடனடியாக அது சாத்தியமில்லை என்று புலிகள் கூறிவிட்டனர்.**

## மீண்டும் வலியுறுத்தல்

கடந்த முதலாம் திகதி (01.04.95) ஜனாதிபதியால் புலிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு 07.04.95 அன்று புலிகளின் தலைவர் பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

சென்ற மாதம் 28.03.95 அன்று ஜனாதிபதிக்கு பிரபாகரன் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களையே 07.04.95 திகதி அனுப்பிய தனது கடிதத்திலும் பிரபாகரன் வலியுறுத்தியிருந்தார்.

பூநகரிப் பாதை திறப்பு, கிழக்கில் தமது போராளிகள் ஆயுதங்களோடு நடமாடுவது போன்ற கோரிக்கைகள் குறித்த தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரபா மீண்டும் வற்புறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 19.04.95 வரை அரசுக்கு தாம் விதித்துள்ள 'காலக்கெடு'வுக்கு காரணமான பிரச்சனைகளையே 4ம் கட்டப் பேச்சிலும் புலிகள் முன்வைத்துள்ளனர்.

## புலிகள் இணங்கவில்லை

4ம் கட்டப் பேச்சில் அரசியல் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்க அரசு விரும்பியிருந்தது.

அவ்வாறு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவது பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை தவிர்க்க உதவும் என்று அரச தரப்பால் கருதப்பட்டது.

ஆனால், புலிகள் தரப்பு அதற்கு இணங்கவில்லை.

தாம் வலியுறுத்தியுள்ள முக்கிய கோரிக்கைகளை முதலில் நிறைவேற்ற வேண்டும். அவற்றை நிறைவேற்றாமல் அரசியல் பேச்சுக்கு சென்றால் அந்தக் கோரிக்கைகள் வலுவிழந்துவிடும் என்று புலிகள் கூறுகின்றனர்.

## பாரிஸ் கூட்டம்

இம்மாதம் பிரான்ஸ் தலைநகரான பாரிஸ் நகரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூடுகின்றன.

அந்த நாடுகளின் பிரதிநிதிகள் சிலர் சமீபத்தில் யாழ் சென்று அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

அரசுக்கு வழங்கும் உதவிகளை அதிகரிக்க வேண்டாம் என்று அந்தப் பிரதிநிதிகளிடம் புலிகள் தரப்பால் கூறப்பட்டது.

இந்த நிலையில் பாரிஸ் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு அதிக உதவி பெறும் வாய்ப்பை ஏற்படுத்த புலிகள் முன்வர மாட்டார்கள். அதனால்தான் 4ம் கட்டப் பேச்சிலும் அரசால் உடனடியாக தீர்வு காண முடியாத உடனடிப் பிரச்சனைகள் பற்றிய கோரிக்கைகளை புலிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

## தயக்கம்

4ம் கட்டப் பேச்சில் அமைச்சர்கள் கலந்துகொள்ளுவார்கள் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

சில அமைச்சர்களது பெயர்களும் அடிபட்டன. எனினும் குறிப்பிட்ட அமைச்சர்கள் பேச்சுவார்த்தைக்கான தூதுக் குழுவில் செல்ல விருப்பம் காட்ட வில்லை என்று தெரிகிறது.

இதேவேளை ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெந்தியும் தூதுக்குழுவில் இடம்பெறுவதில் விருப்பம் காட்டவில்லை என்றும், ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரிலேயே சென்றதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

## குழுவினர் மாற்றம்

புலிகளோடு பேச்சுவார்த்தை ஆரம்பித்த பின்னர் அரசாங்கம் அனுப்பும் தூதுக் குழுக்களில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

தமிழ் பேசும் மக்களது நம்பிக்கையைப் பெற்றவர் என்ற ரீதியில் திரு.லயனல் பெர்ணான்டோவை தூதுக்குழுவில் அரசாங்கம் இடம்பெறச் செய்தது.

புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் ஆசிரியர் சங்கம் திரு.லயனல் பெர்ணான்டோ மீது குற்றச்சாட்டு சுமத்திய பின்னர் அவர் தூதுக்குழுவில் இருந்து விலகிக் கொண்டார்.

இலங்கை வங்கித் தலைவரான திரு.ராஜன் ஆசிர்வாதம் வடபகுதியைச் சேர்ந்தவர். ஒரு தமிழர் என்ற அடிப்படையில் அரச தூதுக் குழுவில் சென்று வந்தார்.

"நாம் பேச்சு நடத்துவது வங்கிப் பிரச்சனை பற்றியல்ல" என்று புலிகளது ஆலோசகர் திரு.பாலசிங்கம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி யளித்தார்.

அத்தோடு திரு.ராஜன் ஆசிர்வாதமும் தூதுக் குழுவில் இருந்து கழன்று கொண்டார்.

திரு.பாலபட்டபெந்தி மீதும் பிரபாவின் கடிதம் ஒன்றில் காரசாரமான விமர்சனம் தொடுக்கப்பட்டிருந்தது. அதனையடுத்தே தூதுக்குழுவில் செல்ல அவரும் தயக்கம் காட்டியதாக தெரிய வந்தது. எனினும் ஜனாதிபதியின் விருப்பம் காரணமாக அவர் செல்ல வேண்டி ஏற்பட்டது.

## புதியவர்கள் பேச்சு

4ம் கட்டப் பேச்சுக்கு முடிவெடுக்கும் அதிகாரம்கொண்ட பிரதிநிதிகளை அனுப்புமாறு பிரபாகரன் ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

4ம் கட்டப் பேச்சுக்கு அரசு அனுப்பிய தூதுக்குழு அவ்வாறானதாக இருக்கவில்லை.

## தூதுக்குழுவில் நடுநிலையாளர்கள்?

அரச தூதுக்குழுவை 'அதிகாரமற்ற குழு' என்று புலிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

"அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ, டாக்டர் ஜெயதேவ உயன்கொட போன்றவர்கள் தம்மை நடுநிலையாளர்கள் என்று முன்பு கூறியவர்கள். அவர்கள் இப்போது அரச தூதுக்குழுவில் வந்திருப்பது எமக்கு பெரும் ஆச்சரியம் தருகிறது" என்று புலிகளது பிரமுகர் தமிழ் செல்வன் தெரிவித்துள்ளார்.

"நிரந்தரப் போர் நிறுத்தத்தில் அரசுக்கு அக்கறை இல்லை" என்றும் தமிழ் செல்வன் தெரிவித்துள்ளார். தமது காலக்கெடுவான ஏப்ரல் 19க்கு முன்னர் தமது கோரிக்கைகள் குறித்து முடிவு தெரியவேண்டும் என்றும் புலிகள் அரச தூதுக்குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

'காலக்கெடு' குறித்து அரசு அலட்சியமாக இருக்கக்கூடாது. ஏனைய தமிழ் அமைப்புக்களைப் போலவோ, அரசியல்வாதிகளைப் போலவோ புலிகள் ஏமாற மாட்டர்கள் என்று புலிகளது பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஏப்ரல் 19 'காலக்கெடு' இறுதிநாள் தீர்வின்றேல் நிச்சயம் போர் மூளும்."

## காரிகாலன் சொன்னதாகப் பரா தகவல்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.பரராஜசிங்கம் புலிகளது பிரமுகர் கரிகாலனைச் சமீபத்தில் சந்தித்தார்.

சந்திவெளிக்கருகில் திகிலவெட்டை என்னுமிடத்திற்கு புலிகளால் கூட்டிச் செல்லப்பட்ட திரு.பரராஜசிங்கம் அங்கு சுமார் ஒன்றரை மணி நேரம் காக்க வைக்கப்பட்டார்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக செயற்பட்டால் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதை நேரடியாகத் தெரிவிக்கவே திரு.பரராஜசிங்கம் அழைக்கப்பட்டதாக புலிகளது வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கனடா தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு தொலைபேசி மூலமாக பேட்டியளித்த திரு.பரராஜசிங்கம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"ஏப்ரல் 19ம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்ளத் தவறினால் போர் மூளுவது நிச்சயம் என்று கரிகாலன் கூறினார்.

நான் அதற்கு, தயவு செய்து அவசரப்பட்டு விடாதீர்கள். முன்னரும் இப்படித்தான் நடந்தது. சமாதானச் சூழ்நிலையை சீரழித்தவர்கள் என்று உங்களுக்கு கெட்ட பெயர் வந்துவிடும். இப்போதும் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று சர்வதேச அழுத்தம் உச்ச அளவில் உண்டு. மறுபடியும் நீங்கள் அவசரப்பட்டு போருக்குத் திரும்பினால் சர்வதேச அபிப்பிராயம் உங்களுக்கு எதிராகத் திரும்பிவிடும்.

இப்போது உங்களுக்கு நல்ல பெயர் நிறைய உண்டு. அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். என்று சொன்னேன்."

இவ்வாறு திரு.ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. தெரிவித்துள்ளார்.

# அரபாத் அல்ல பிரபாகரன் அலரி மாளிகை அறிந்துகொள்ளட்டும்

**விடுதலைப் புலிகளது தலைவர் பிரபாகரனை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துடன் ஒப்பிட்டு சிலர் கருத்து வெளியிடுவதுண்டு.**

**அரபாத்துடன் தமது தலைவரை ஒப்பிடுவதை புலிகள் அமைப்பினர் விரும்பவில்லை.**

**புலிகளது உத்தியோகபூர்வ இதழான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் ஒரு முழுப்பக்க கவிதை வெளியாகியுள்ளது.**

**வியாசன் என்ற பெயரில் அந்தக் கவிதை எழுதப்பட்டிருக்கிறது. கவிதை நடை புதுவை இரத்தினதுரையின் பாணியில் இருக்கிறது. அதிலிருந்து சில பகுதிகள் பின்வருமாறு.**

மட்டக்களப்பில் சுற்றி வளைப்பு
தலைநகரில் தமிழர் கைது
பொன்னாலையில் கடலில் போனவர் கைது
வவுனியாவில் புதிய கெடுபிடி.
என்ன இது?
கையெழுத்திட்ட ஒப்பந்தம் என்னாச்சு?

பெரிய அளவில் தொடர்கிறது
தமிழர் வதை
எப்படிப் பொறுக்கலாம்?

புலிகள் பேச்சுக்குப் போனதை
இழிவாகக் கருதியா இந்த எடுத்தெறிவு?
'பலவீனப்பட்டதாலேதான் பணிவு'
என்று நினைத்தா இந்த உதாசீனம்?

ஆயுதப் போரில் அலுப்புத்தட்டி
தந்ததை வாங்கித் தலை குனிந்து கொள்ள
பிரபாகரன் 'அரபாத்' இல்லை யென்பதை
அலரி மாளிகைக்கு அறிவித்துக் கொள்கிறோம்.

கரும்புலியணியைக் கலைத்து விட்டோமென்று
அவர்களுக்கு
கனவில் சொன்ன கடவுள் யார்?
ஏறிமிதிக்கும் இளம் புலி வீரரை
வேறு வேலைக்கா விட்டுள்ளோம்?
இல்லையே
போருக்குத் தயாராக
சீருடையிற்தானே திரிகின்றனர்.

எச்சரித்துக் கொள்கிறோம்.
புயல் அடிக்கும்
பூகம்பம் வெடிக்கும்.
மின்னல் வெட்டி முழக்கம் பிறக்கும்.

தங்கையே!
தமிழர் கரும்பனைகள் என்பதை
கண்ணில் படுமிடத்தில் குறித்துக்கொள்.
போர்க் களத்திலா சந்திக்க விருப்பம்?
என்ன செய்வது?
சத்தியத்துக்காக நாங்கள் கத்தி எடுக்கிறோம்.
தலை முறைக்காக நாங்கள்
விலை கொடுக்கப் புறப்படுகின்றோம்.
தர்மம் வெல்லும்
சத்தியம் வெல்லும்.
சம்பவாமி யுயே! யுகே!!

இவ்வாறு அந்தக் கவிதையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர் தாக்குதல்?

இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் அத்துமீறிப் பிரவேசிப்பதாகப் புலிகள் யாழ்ப்பாணத்தில் குற்றம் சாட்டியுள்ளனர்.

சமீபத்தில் வடமாராட்சி மீனவர்கள் இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டதாகவும் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# கனடா தேர்தல் - யாழ்ப்பாண பெண்மணி களத்தில்!

## கனடியரான இலங்கைத் தமிழர்களும் வாக்களிப்பர்!

*கனடா ஒன்ராரியோ மாகாணத்தில் நடைபெற இருக்கும் மாகாண சபைத் தேர்தலில் இரு தமிழர்கள் முதன் முறையாக வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள். லிபரல் கட்சி சார்பில் போட்டியிடும் கிருஷ்ணசாமி பார்த்தீபனும், புதியஜனநாயகக் கட்சி சார்பில் பெண்மணியான திருமதி ஜானகி பாலகிருஷ்ணனும் வேட்பாளராக களத்தில் குதித்துள்ளனர்.*

*புதிய ஜனநாயக கட்சிதான் ஒன்ராரியோ மாகாணத்தில் ஆட்சியில் இருக்கிறது. லிபரல் கட்சி எதிர்க்கட்சியாகவும் மத்திய அரசாங்கக் கட்சியாகவும் இருக்கிறது திருமதி ஜானகி யாழ் வேம்படி கல்லூரியின் பழைய மாணவியும், கட்டுப்பத்தை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவியுமாவார். பின்னர் மகாவலி அதிகாரசபையில் பணிபுரிந்தார். 1980ம் ஆண்டு அளவில் கனடா வந்தவர். றொரண்றோ அணுசக்தி மின்நிலையத்தில் பொறியியலாளராக பணியாற்றுகிறார். பல சமூக தொண்டர் நிருவனங்களில் பணியாற்றி வருகிறார். இவர் டொன்மில்ஸ் என்ற தொகுதியில் வேட்பாளராக எவ்வித போட்டியும் இன்றி ஏகமனதாக தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.*

*லிபரல் கட்சியின் கிருஷ்ணசாமி பார்த்தீபன் இருபத்தைந்து வருடங்களாக கனடாவில் வசிக்கிறார். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய மனைவியான ரீட்டா பார்த்தீபன் Ontrario Welcome House என்ற பல்லின மக்களுக்கு சேவைசெய்யும் அரச நிறுவனத்தில் பணிபுரிகிறார். இவர் இலங்கைத் தமிழர்கள் கனடாவிற்கு அகதிகளாக வந்தபோது பல வகையிலும் உதவி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.*

*இலங்கைத் தமிழர் பெரும்பாலானோர் இவரது வேட்பாளர் தெரிவுக்கு ஆதரவாக வாக்களித்தும் பிரசாரம் செய்ததும் இவர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டதிற்கு காரணமாகும். எனவே டொன்மில்ஸ் தொகுதியில் திருமதி ஜானகியும், ஸ்காபுறோ எல்ஸ்மேர் தொகுதிக்கு பார்த்தீபனும் ஒன்ராரியோவுக்கான மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். கனடாப் பிரஜாவுரிமை பெற்ற அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.*

# "வெட்டுப் புள்ளி பாதிப்புக்கு நிவாரணம். யானைப் பசிக்கு தரும் சோளப் பொரி"

யாழ் மாவட்ட மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி முறையால் ஏற்பட்டுள்ள பாதிப்பை போக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

தம்மைச் சந்தித்த யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகளிடமே ஜனாதிபதி அவ்வாறு தெரிவித்திருந்தார்.

இச் செய்திகள் வடபகுதி மக்களிடம் நல்லபிப்பிராயத்தை தோற்றுவித்துள்ள அதேசமயம் புலிகளது 'ஈழநாதம்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் ஒன்றை தீட்டியுள்ளது.

08.04.95 அன்று ஈழநாதம் பத்திரிகை தீட்டியிருந்த ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

"93-94ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் வெட்டுப் புள்ளி முறையால் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மாணவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று சிறீலங்கா ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதுவும் யானைப் பசிக்கு சோளப் பொரி போடுவது போன்ற நடவடிக்கைதான்.

ஒரு சிலரின் பிரச்சனையைத் தீர்ப்பதாக உறுதி கூறிவிட்டு தமிழ் சமூகத்தின் பிரச்சனைகள் யாவற்றையும் தீர்த்து வைத்து விட்டதாகக் கூறுவதாகும். ஆனால் இவ்வாறான இரட்டை இராஜதந்திர வழிமுறை மூலம் ஜனாதிபதி சந்திரிக்காவால் இனப்பிரச்சனைக்கு ஒரு போதும் தீர்வு காணமுடியாது. ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும் பட்சத்திலேயே இனப்பிரச்சனை தீர்வு சாத்தியமாகும்"

இவ்வாறு ஈழநாதம் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. "சந்திரிக்காவின் இரட்டை அவதாரம்" என்ற தலைப்போடு தலையங்கம் வெளியாகியுள்ளது.

அன்றாடப் பிரச்சனைகளும் முக்கியமானவை என்று புலிகளும் கூறிவருகின்றனர். வெட்டுப் புள்ளி முறையும் அன்றாடப் பிரச்சனைகளில் ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இருக்கும்போது 'ஈழநாதம்' பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கம் முரண்பாடாக உள்ளது.

# மகாபாரதம் (அங்கம் 75) எம்.ரி.வி.ஒளிபரப்பில் மாற்றம்

ஏப்ரல் 6-15 திகதியிடப்பட்ட 97வது தினமுரசில் மகாபாரதம் (அங்கம் 75) கதை-வசனம் இடம் பெற்றிருந்தது. 09.04.95 இரவு எம்.ரி.வி.அலை வரிசையில் அங்கம் 75 ஒளிபரப்பப்படவில்லை. இவ்வங்கம் 16.04.95 இரவு ஒளிபரப்பாகும். எமது 98வது முரசில் அங்கம் 76 பிரசுரிக்கப்பட்டுள்ளது. 23.04.95 ஒளிபரப்பின் போது 98வது முரசு உங்கள் கைகளில் இருக்கட்டும். எமது 99வது முரசில் மகாபாரதம் அங்கம் 77 பிரசுரமாகும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## முக்கிய அறிவித்தல்

சித்திரைப் புது வருட விடுமுறையை முன்னிட்டு எதிர்வரும் வாரமான ஏப்ரல் 23-29 திகதிக்கான முரசு மட்டும் உங்கள் கரம் சேராது. ஒரு வாரம் மட்டும் சின்னதாய் நமக்குள் ஒரு இடைவெளி.

## பூநகரி முகாம் பாதுகாப்பு அதிகரிப்பு?

4ம் கட்டப் பேச்சிலும் பூநகரி இராணுவ முகாமை அகற்றும் விடயத்தை புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

4ம் கட்டப் பேச்சின் பின்னரும் புலிகள் அரசுக்கு விதித்த காலக்கெடு தளர்த்தப்படவில்லை.

இதேவேளை பூநகரி இராணுவ முகாமின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளது கோரிக்கையை அரசு மறுத்துவருவதால் பூநகரி முகாம் மீது புலிகள் குறிவைக்கலாம் என்று படைத் தரப்பினர் கருதுகின்றனர்.

எனினும், தற்போதைக்கு பூநகரி முகாமைத் தாக்கும் எண்ணம் புலிகளுக்கு இல்லை என்று தெரிகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மீள் குடியேற்றத்தை தடுக்க இனவாதச் சதி!

## தமிழ் குடும்பங்களை வெளியேற்ற போலி ஆவணங்கள்!

(திரு மலையிலிருந்து சஞ்ஜீவன்)

1972ம் ஆண்டுதிருகோணமலை பிளாண்டன் பொயின்ற் இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டபோது, அம்முகாமைச் சுற்றி குடியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களுக்கு அரசு தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் என உறுதி கூறப்பட்டு அரச உத்தியோகத்தர்களால் இலிங்கநகர் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டன. தொடர்ச்சியாக ஏற்பட்ட கலவரங்களால் முன்னர் குடியிருந்த மக்களும், பின்னர் அரச உத்தியோகத்தர்களால் குடியேற்றப்பட்ட மக்களும் வீடு வாசல்களை விட்டு வெளியேறினர்.

அவ்வாறு வெளியேறிச் சென்ற மக்கள் இன்று-தற்போதைய அமைதியான சூழ்நிலையில், வாழ்வின் எதிர்கால நம்பிக்கையுடன் மீளக்குடியேறுகின்றனர். மேற்படி மக்களின் மீள் குடியேற்றத்தைத் தடுக்க சில இனவாத சக்திகள் முயன்றுவருகின்றன. அவ்வாறு தடுக்க,மேற்படி காணிகள் இராணுவத்திற்குச் சொந்தமானவை எனக் காரணம் கூறுகின்றனர்.

ஆனால் இக் காணிகள் இராணுவத்திற்குச் சொந்தமானதாகக் கருத சட்டரீதியாக எவ்வித ஆவணங்களும் இல்லை. இந்த நிலையிலும் சில விசமிகள் திட்டமிட்டு போலியான ஆவணங்களைத் தயாரித்துள்ளதுடன் அப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களாகவிருந்த மரங்கள், வீடுகள் என்பவற்றை முற்றாக அழித்து விட்டனர்.

ஏற்கெனவே இரண்டு போலி ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அதாவது: ரி.டி.பீரிஸ் என்பவரால் 10.04.1979ம் ஆண்டு சட்டரீதியாக 22 பிரிகேட்டுக்கு லெப்.டிங்கிரிபண்டா என்பவரூடாக மேற்படி காணிகளின் ஆவணங்கள் கையளிக்கப்பட்டதாக ஒரு ஆவணம் உள்ளது.

அதே போல 04.04.1979ல் 22 பிரிகேட்டுக்கு கையளித்ததாக வேறு ஒரு ஆவணம் கூறுகின்றது. இவ்விரண்டு ஆவணங்களும் முரண்பாடாகவுள்ளன. அத்துடன் திருகோணமலையில் 22 பிரிகேட் 26.06.1989ம் ஆண்டே வந்தது. அவ்வாறாயின் 22 பிரிகேட் இங்கு வருவதற்கு முன்னரே மேற்படி காணி போலியாகக் கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். அதற்கு முன்னர் இராணுவப் பொறியியல் பிரிவுப் பாடசாலை மட்டுமே திருக்கோணமலை பிளாண்டன் பொயின்ற் பகுதியில் இயங்கி வந்தது.

அத்துடன் மேற்படி ஆவணங்களில் மொத்த நிலத்தின் அளவு 47 ஏக்.00 ரூட்,30 பேர்ச் என்றும், அதில் 39ஏக், 01 ரூட், 23 பேர்ச் இராணுவப்பகுதியென்றும், 26 ஏக்.00 ரூட் 39 பேர்ச் கொழும்பு டொக்கியாட்டிற்குச் சொந்தமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் மொத்தக் காணியின் அளவு 65 ஏக். ரூட், 18 பேர்ச் ஆகவிருக்க வேண்டும். இதுவும் குழப்பமானதாகவுள்ளது.

அத்துடன் 14.10.1979ம் ஆண்டு 22 பிரிகேட்டிற்கு வழங்கப்பட்டதாகவும் வேறு ஒரு ஆவணம் கூறுகிறது.

திரு.செனவிரட்ண ஆளுநராகவிருந்த போது புதிதாக 13 குடும்பத்தினருக்கு அப்பகுதியில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அத்துடன் திரு.தணிகாசலம் என்பவரது குடும்பத்திற்கு வீடு ஒன்று அரசால் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டதுடன் அப்போதைய இணைப்பதிகாரியின் முன்னிலையில் அப்போதைய அரசாங்க அதிபர் அவ் வீட்டை வைபவரீதியாகக் கையளித்தார்.

21.09.1991ல் 500 குடும்பங்களுக்கு இலிங்கநகர் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், அத்துடன் குடியிருப்புகளுக்குப் பக்கத்தில் இராணுவப் பயிற்சிகள் மேற் கொள்ள வேண்டாம் என்றும், மேலும் இராணுவப் பயிற்சிகளை சன நடமாட்டம் இல்லாத பகுதிகளில் சென்று மேற்கொள்ளுமாறும் அப்போதைய ஆளுநர் இணைப்பதிகாரிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இராணுவத்திற்குக் காணி கையளிக்கப்பட்டதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் "கசற் அறிவித்தல்" அரசால் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கி கவனிக்குமா?

கடந்த கால வன்செயல்களினால் அழிக்கப்பட்ட உயிர், உடமைகளுடன் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளும் பெரும்பாலாக அழிந்து விட்டது. இதனால் அடகு நகை மீட்பதில் மிகுந்த சிரமத்தை உரிமையாளர்கள் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

மீட்கப்படாது, காலாவதியாக இருக்கும் அடகு நகைகளை மீட்பதற்கு மக்கள் வங்கியால் அடகு பற்றுச் சீட்டின் இலக்கங்களையும், விபரங்களையும் குறித்த உரிமையாளருக்கு முன் அறிவித்தல் (நினைவூட்டல் கடிதம்) தரும் முறையை முன்னர் வங்கியாளர்கள் கடைபிடித்ததை நினைவூட்ட விரும்புகிறேன்.

அதே போன்று தற்போதும் இதேமுறையை கைக்கொண்டால், பற்றுச் சீட்டின்றி நகை மீட்க முடியாத பல நகை உரிமையாளர்கள் நன்மை அடைவார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க முரசினூடாக வேண்டுகிறேன்.

-தேவகடாட்சம் தனலக்ஷ்மி - மல்லிகைத்தீவு-

## திருத்தாத பாதை

புத்தளம் மாவட்டத்தின் கொத்தாந்தீவு என்னும் கிராமத்திற்கு அருகாமையில் உள்ள கட்டைக்காடு என்னும் கிராமத்தின் பிரதான பாதையை திருத்துவதற்கு கிறவல்(பொறல்) பாதையோரத்தில் பறிக்கப்பட்டது.

ஆனால் இன்று வரை இப்பாதையின் திருத்த வேலை ஆரம்பமாகவில்லை. இதனால் இப்பாதையால் வாகனங்களோ, துவிச்சக்கர வண்டிகளோ செல்ல முடியாத நிலை.

ஆகவே, இப்பாதையை திருத்துவதற்கு கூடிய விரைவில் கவனம் எடுக்கும்படி ஊர் மக்கள் தினமுரசு மூலம் வேண்டுகிறார்கள்.

கொத்தாந்தீவு-யுனூத்.

## மாறுபட்ட சோதனை விதிகள். மக்கள் பட்டுவரும் அவதிகள்.

(ஏறாவூர் நிருபர்)

கொழும்பிலிருந்து கல்முனை, காரை தீவு, பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளுக்கு அம்பாறை வழியாகப் பயணம் செய்யும் தமிழர்கள் தற்சமயம் புளுகுணாவ என்னும் பொலிஸ் சோதனைச் சாவடியில் தமது தேசிய அடையாள அட்டைகளிலுள்ள சகல விபரங்களையும் பதிந்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

இது விடயமான உத்தரவு தமது பொலிஸ் மேலதிகாரியிடமிருந்து வந்திருப்பதாக அச்சோதனைச் சாவடியிலுள்ள பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவ் வழியால் தமிழ்-முஸ்லிம் பயிற்சியாளர் குழுவொன்றை கொழும்புக்கு அழைத்து வந்த-கிழக்கில் செயற்படும் வெளிநாட்டு உதவி அமைப்பொன்றின் உயரதிகாரி ஒருவர் "கிழக்கில் எவ்விடத்திலும் இத்தகைய நடவடிக்கைகள் இல்லை.இது தமிழர்களின் தலைவிதி" என்றும் தெரிவித்தார்.

## மந்தகதியில் பிரதேசச் செயலகப் பணிகள்

(திருமலை நிருபர்)

கிண்ணியாப் பிரதேசச் செயலகம் மந்தகதியில் தனது பணிகளை மேற் கொள்வதாகக் கிண்ணியா மக்கள் குறைபடுகின்றார்கள்.

ஒரு சிறிய பணியை முடிப்பதற்குக் கூட மக்கள் வாரக் கணக்கில் இழுபட வேண்டியிருக்கிறதாம். ஒரு படிவம் பெறுவதானாற் கூட "இன்று வா.... நாளை வா"என்று அலைய வைத்து விடுகிறார்களாம்.

நேரடியாகப் பிரதேசச் செயலாளரைச் சந்தித்து நிவாரணந் தேடக் கூடியவர்கள் விடயத்தில் மட்டும் ஒழுங்காக நடந்து கொள்ளும் கிளாக்மார் சாதாரண சனங்களை அலைய வைப்பது ஏன் என்று விளங்கவில்லை என்கிறார் அனுபவப்பட்ட ஒருவர்.

இவர் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரவிண்ணப்பப் படிவம் கோரி 06.03.95ல் அலையத் தொடங்கி 27.03.95ல் தான் அப்படிவத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


அதிகாரப் பரவலாக்கம் என்பது இது தானோ?

## சுவீடன் நிறுவனம் கட்டித்தந்த பாடசாலை திறப்பது எப்போது?

சுவீடன் நாட்டின் pum/சீடாற நிறுவனத்தால், சுமார் 14 இலட்சம் பெறுமதியான செலவில் பொகவந்தலாவ அரசினர் வைத்திய சாலைக்குக் கட்டிக் கொடுத்த சிறுவர் வைத்திய சாலை, இரண்டு வருடங்களாகியும் இன்னும் இயங்கவில்லை.

இதனால் இச்சிறுவர் வைத்தியசாலையின் கட்டிடமும், அதனுள்ளிருக்கும் தளபாடங்களும் கவனிப்பாரற்றிருப்பதால் இன்னும் சிறிது காலத்தில் இவை பயனற்றதாகி விடுமே என்று மக்கள் வேதனைப்படுகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் மேலும் ஒரு இலட்சம் ரூபா பணத் தொகையை, மேற் சொன்ன நிறுவனம் வைத்தியசாலையின் நிருவாகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இது சம்பந்தமாக உதவி புரிந்த நிறுவனத்தாரிடமும் வைத்திய அதிகாரியிடமும் தொடர்பு கொண்டபோது, இச்சிறுவர் வைத்தியசாலையில் கடமை புரிய தகுந்த ஊழியர்களை நியமிக்கப்படவில்லை என்று அறிய முடிகின்றது. எனவே இச்சிறுவர் வைத்திய சாலையை இயங்கவைப்பதில் சுகாதார அமைச்சு அக்கறை செலுத்துமா? என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவ.

## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28




## தட்டிக்கழிக்கப்படும் கட்டிட வசதி.

(காரைதீவு நிருபர்)

சுமார் 4000 மாணவர்கள் கல்விகற்கும் கல்முனை கார்மேல் தேசிய பாடசாலையில் கட்டிட தட்டுப்பாடு நிலவுகிறது. அங்குள்ள மாணவர்களில் சிலர் பாடசாலை விறாந்தையிலும், பவிலியனிலும், அருகிலுள்ள ஒன்றுகூடல் அறையிலும் படிப்பினை தொடருகின்றனர். 1991 இல் கட்டிமுடிக்கப்பட வேண்டிய பல கட்டிடங்கள் பூரணப்படுத்தப்படாமலிருப்பதே இதற்குரிய காரணமென பாடசாலை வட்டாரம் தெரிவித்தது.

## பஸ்சேவை — அவலம்

கம்பஹா மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றாக விளங்கும் நிட்டம்புவையில் இருந்து கொழும்பு வரையிலான பஸ் சேவையும் கொழும்பிலிருந்து நிட்டம்புவ வரையிலான சேவையும் திருப்திகரமாக இல்லாததால் அன்றாடம் தலைநகருக்கு தொழிலுக்காகச் செல்லும் பிரயாணிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

தற்போது நிட்டம்புவ-கொழும்பு போக்குவரத்துச் சபை பஸ்சேவையும் தனியார் பஸ் சேவையும் ஒன்றிணைக்கப்பட்டிருப்பினும் உரிய நேரத்தில் போதியளவு பஸ்கள் சேவையிலீடுபடாததால் பெரும்பாலானோர் பாதிக்கப்படுகின்றனர்.

(கம்பஹா நிருபர்)


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## உயிர் இழந்த உள்நாட்டு தொலைத் தொடர்பு சாதனம்

## சாதனத்தை சாகவைத்தது விஷமிகளின் வேலை?

கல்முனையில் உள்நாட்டு தொலைத் தொடர்பு சாதனம் ஒன்று பொதுவான இடத்தில் வைக்கப்படாதது இப்பகுதி மக்களுக்கு பெரும் குறையாக இருந்து வந்தது.

ஆனால் இக்குறையை தற்போது ஆட்சி பீடம் ஏறிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு சில மாதங்களில் நிறைவேற்றி வைத்தமை பாராட்டுக்குரியது.

இத் தொலைத் தொடர்பு சாதனம் கல்முனை றவுண்ட் போட் என்று அழைக்கப்படும் இடத்தின் அருகாமையில் பொருத்தப்பட்டது.

இதனால் வர்த்தகர்களும், ஏனையோரும் குறைந்த செலவில் தொலைத் தொடர்புகளை மேற் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. அன்றாடம் அதிகமானோர் இத் தொலைத் தொடர்பு சாதனத்தை பயன் படுத்தி வந்தனர்.

இப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாய் கிடைத்த இத் தொலைத் தொடர்பு சாதனம் இப்போது பழுதடைந்து செயல் இழந்து விட்டது. மிகக் குறுகிய காலத்தில் இப்படியான ஒரு நிலை ஏற்படக் காரணம் என்ன?

விஷமிகளின் வேலையா இது? சொற்ப நேர தொலை பேசி பேச்சுக்கு அதிக கட்டணம் அறவிடும் இப்பகுதி தனியார் தொலைபேசி சொந்தக்காறர்களுக்கு சவாலாக அமைந்த இந்த சாதனத்தை மீண்டும் இயங்க வைக்க வேண்டாமா? அதிகாரிகளே அக்கறை செலுத்துங்கள்.

எம்.சி.கலீல்-கல்முனை.

## விசாரணை வேண்டும்!

கம்பஹா மாவட்டத்திலுள்ள சில முஸ்லிம் பள்ளிவாசல்களில் நீண்ட காலமாக நிலவும் நிர்வாகச்சீர்கேடு, நிதி மோசடி ஆகியன தொடர்பாக விரைவில் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இப்பிரதேசவாசிகள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களிடம்'தினமுரசு' வாயிலாக வேண்டுகோள் விடுக்கின்றனர். ஒரு சில பள்ளிவாசல் நிருவாகிகள் வெளிநாடுகளிலிருந்து கட்டிட நிதிக்காக கிடைத்த பெரும் தொகை பணத்தை மோசடி செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(கம்பஹா நிருபர்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

# இலங்கையில் மீண்டும் இந்தியப் படை?

இந்திய விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தியிருந்தார்.

புலிகள் தொடர்பாக ஜனாதிபதி சற்றுச் சூடாகவே இருக்கிறார் என்பது நிருபர்களின் கேள்விகளுக்கான சடச்சுட பதில்கள் மூலம் தெரிந்தது.

ஆட்சிக்கு வந்த புதிதில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் சந்திரிக்கா புலிகள் பற்றித் தெரிவித்த கருத்துக்கள் குளிர்ச்சியானவை.

புலிகளை தள்ளிவிடவும் முடியாது, தட்டிக் கொடுக்கவும் முடியாது என்ற நிலையில்தான் ஜனாதிபதியின் சமீபத்திய பேட்டி அமைந்திருந்தது.

அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் கூட ஜனாதிபதியின் பத்திரிகையாளர் மாநாட்டு கேள்வி பதில்களில் பலவற்றை தணிக்கை செய்திருந்தன.

இதுதான் செய்திச் சுதந்திரமா? அல்லது அவர் அப்படிச் சொல்லவில்லை என்று அரச தரப்பு மறுக்க வேண்டி ஏற்பட்டால் தமது தலைகள் உருளும் என்ற பயமா? என்று புரியவில்லை.

அரச தரப்புதாம் வெளியிடும் கருத்துக்கள் சர்ச்சையாகும் போது பத்திரிகைகள் மீது பழி போடுவது மிக ஒழுங்காக நடக்கும் காரியமாகிவிட்டது.

"புலிகள் ஈவிரக்கமற்றவர்கள்" என்று ஜனாதிபதி கூறியதோடு புலிகள் ஒரு ஆயுதக் குழு என்ற தனது கருத்து சரியானதே என்றும் வாதிட்டார்.

உண்மையில் 'ஆயுதக் குழு' என்ற பதப் பிரயோகம் புலிகளால் மட்டுமல்ல, ஏனைய தமிழ் அமைப்புக்களாலும் முன்னர் நிராகரிக்கப்பட்ட ஒன்றுதான்.

'ஆயுதக் குழு', 'ஆயுதக் குழுக்கள்', 'தமிழ்க் குழுக்கள்' என்ற வார்த்தைப் பிரயோகங்களது அர்த்தம் தெரியாமலேயே சிலர் அவற்றைப் பயன்படுத்துவதும் உண்டு.

வேறு சிலர் திட்டமிட்டே பொருள் தெரிந்து பயன்படுத்துவதும் உண்டு.

அமைப்பு வடிவம் இல்லாமல் ஒரு சிறு எண்ணிக்கையான நபர்கள் சேர்ந்து செயற்படுவதை குழு என்று கூறலாம்.

குழுக்களால் பெரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்தி விடவும் முடியாது. ஆங்காங்கே சில தாக்குதல்கள் அல்லது குழப்பங்களை ஏற்படுத்தலாம். சில சமயத்தில் ஆளும் தரப்புக்கு தலைவலியாகக்கூட சில குழுக்கள் இருக்கக்கூடும்.

பிரதானமான தமிழ் அமைப்புக்கள் எதனையும் குழுக்கள் என்று அழைக்க முடியாது.

குறிப்பாக புலிகளைப் பொறுத்த வரை தற்போதும் விடுதலை இயக்கமாக, மத்தியப்படுத்தப்பட்ட தலைமையோடு அரசியல்-இராணுவ அமைப்பாக இருக்கின்றனர்.

ஒரு வார்த்தைப் பிரயோகத்தில் என்ன வந்தது? என்று கேட்க முடியாது.

தாம் ஒரு தேசிய விடுதலை இயக்கம், தம்மை ஆயுதக் குழு என்று அழைப்பது தவறு என்று புலிகள் கூறியிருப்பதில் தவறில்லை.

புலிகளை ஒரு ஆயுதக் குழு என்றழைத்தால் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் கூட கௌரவக் குறைச்சல் ஏற்படலாம்.

ஏனெனில், நாட்டின் ஜனாதிபதி ஒரு குழுவின் தலைவரோடு போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார் என்றாகிவிடும்.

எனவே, இந்த விடயத்தில் சொன்னது சொன்னதுதான் என்று ஜனாதிபதி பிடிவாதமாக நியாயப்படுத்தியது சரியல்ல.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் புலிகளால் உன்னிப்பாக நோக்கப்பட்டது.

இந்திய விஜயத்தின்போது திருமதி சோனியாவையும் ஜனாதிபதி சந்தித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, முன்னர் இந்தியா சென்றிருந்த போது திருமதி சோனியாவை சந்திக்க விரும்பினார்.

ஆனால், அவரைச் சந்திக்க சோனியா விரும்பவில்லை.

சோனியா- சந்திரிக்கா சந்திப்பு பத்திரிகைகளிலும் பிரபலப்படுத்தப்பட்டது. இருவரும் சந்தித்து புன்னகைத்த புகைப்படம் புலிகளை நிச்சயம் முகம் சுளிக்க வைத்திருக்கும்.

இந்திய அரசுத் தரப்பு, பிரபாகரன் தொடர்பாக கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்திருந்தார்.

அதே சமயம் இந்தியப் பத்திரிகைகள் "பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும்" என இந்திய அரசு கோரிக்கை விட்டதாக தெரிவித்திருந்தன.

எனினும், பிரபாகரன் இலங்கை அரசின் கையில் இல்லை. பிரபாகரன் எங்கிருக்கிறார் என்பதே தெரியாத அரசாங்கத்திடம் "அவரை ஒப்படையுங்கள்" என்று இந்தியா கோரிக்கை விடுவதில் என்ன பயன்?

இந்தியப் படையால் கூட முன்னர் பிரபாவை நெருங்குவதற்கு முடியவில்லை.

பேச்சுவார்த்தையின் ஆரம்பம் முதல் இன்று வரை அதனைக் கவனித்து வரும் இந்தியாவுக்கு ஒரு விடயம் தெளிவாகியிருக்கும்.

அரசும் - புலிகளும் ஏற்கனவே திரைமறைவில் முறைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இனிப் பகிரங்கமாக முறித்துக் கொள்வதுதான் பாக்கியிருக்கிறது.

இந் நிலையில் அரசின் சமாதான முயற்சிகளை முழுதாக ஆதரிப்பதென்றும், தேவையான உதவி தரப்படும் என்றும் இந்திய அரசு நமது ஜனாதிபதியிடம் உறுதியளித்திருக்கலாம்.

இந்திய அரசைப் பொறுத்த வரையில் புலிகளை பலவீனப்படுத்துவதும் சமாதான முயற்சியில் ஒரு கட்டடம்தான்.

இந்திய அரசு எவ்வாறான உதவிகளை வழங்கும் எனபதுதான் கேள்விக்குரியது.

மீண்டும் ஒரு முறை தனது படையை அனுப்ப இந்தியா தயாராக இருக்காது.

இரண்டு தடவை இந்தியா இராணுவ ரீதியாக இலங்கையில் தலையிட்டிருக்கிறது.

1971 ல் ஜே. வி. பி. கிளர்ச்சியை ஒடுக்க சிறிமாவோ அரசுக்கு இந்தியா நேரடியாக உதவியது.

1987 ல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலமாக தலையிட்டது.

1971 இல் செய்த தலையீடு இலங்கை அரசோடு நட்புறவை இறுக்கமாக்கவும், இந்தியாவின் பலம் தொடர்பான பிரமிப்பை தக்க வைக்கவும் உதவியது.

1987 இல் செய்த தலையீடு தெரியாத்தனமாக சேற்றுக்குள் காலைவைத்துவிட்டு எப்படி வெளியே எடுப்பது என்று திண்டாடிய நிலையில் முடிந்தது.

எனவே மீண்டும் இந்தியா நேரடியாக தலையிடும் என்று சொல்வதற்கில்லை.

ஆனால், அரசியல் விமர்சகர்கள் சிலர் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

**'சார்க்' நாடுகளது அமைதிப்படை என்ற பெயரில் இலங்கை அரசுக்கு உதவி வழங்க தீர்மானம் எடுக்கலாம்.**

**அவ்வாறு 'சார்க்' நாடுகளின் அமைதிப்படை இலங்கை வருமானால் அதில் இந்தியா முக்கியமான பங்கை செலுத்தலாம்.**

அவ்வாறு செய்வதால் இந்தியத் தலையீடு என்ற குற்றச்சாட்டும் எழாது.

இவ்வாறு தெரிவிக்கப்படும் அபிப்பிராயத்தை நடக்க முடியாதது என்று அலட்சியம் செய்ய முடியாது.

போர் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுவில் சார்க் நாடுகளை புலிகள் ஓரம் கட்டியதும் அந்த நாடுகளிடையே புலிகள் தொடர்பான அனுதாபத்துக்கு இடமில்லாமல் செய்து விட்டன.

**புலிகளின் அரசியல் தந்திரோபாயத்தில் ஏற்பட்ட மிகப் பாரிய தவறு இது.**

**அயல் நாடுகளை தள்ளி வைத்து விட்டு மேற்குலக நாடுகள் சிலவற்றைத் தமது நேசத்துக்குரிய நாடுகளாக புலிகள் பகிரங்கப்படுத்தியது புத்திசாலித்தனமல்ல.**

**புலிகளின் இந்த தந்திரோபாயத் தவறு அரசுக்கு சாதகமாக அமைந்துள்ளது.**

இந்தியா விடயத்தில் கூட நிரந்தரமாக முறித்துக்கொண்ட உறவு என்ற ரீதியில் புலிகள் செயற்படுவதும் எவ்வகையிலும் புலிகளுக்கு இலாபகரமானதல்ல.

அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் கூட ஜனாதிபதி சந்திரிக்காவின் சமாதான முயற்சிகளை ஆதரிக்கின்றன.




'விடுதலைப் புலிகள்' வெளியிட்ட 'கார்டூன்'

தற்போதைய நிலையில் சர்வதேச ஆதரவு சந்திரிக்காவின் பின்னால் திரண்டு நிற்கிறது.

இந்நிலையில் புலிகள் சடுதியாக சமாதான முயற்சிகளை முறித்தால் பாதகம் அதிகம் அவர்களுக்குத்தான்.

'சார்க்' நாடுகளது அமைதிப்படை ஒன்று இலங்கையில் கால் வைத்தால்கூட வெளியுலக ஆதரவும் அதற்குச் சாதகமாகவே அமையும்.

இரண்டில் ஒன்று பார்ப்பது என்று களத்தில் இறங்கும் இலங்கை- இந்தியா ஆகிய இரண்டு மூர்க்கமான எதிரிகளை புலிகள் 'சார்க்' நாடுகளின் அமைதிப்படை என்ற பெயரில் எதிர்க்கொள்ள நேரலாம்.

'சார்க்' அமைதிப்படை என்பது சாத்தியமில்லாமல் போனால் கூட இலங்கை அரசுக்கு இந்தியா சகல விதத்திலும் இராணுவ தளபாடங்கள் மற்றும் ஆலோசனைகள், தார்மீக ஆதரவு என்பவற்றை வழங்குவதற்கு பின் நிற்கப் போதில்லை.

இவற்றையெல்லாம் புலிகளும் கருத்தில் கொள்ளாமல் இல்லை.

ஆனால், புலிகள் தமது இராஜதந்திர தவறுகளை திருத்திக் கொள்வதற்கு பதிலாக இலங்கை அரசை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி விட்டால் மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள்.

தமக்கு சர்வதேச நண்பர்களை தேடிக் கொள்வதற்கு முயலாமல், இலங்கை அரசை அதன் நண்பர்கள் சந்தேகத்தோடு நோக்கினால் போதும் என்றளவில் புலிகளது காய் நகர்த்தல்கள் அமைந்துள்ளன.

காலக்கெடு விதித்தமையும், அதனை நீடித்தமையும் இலங்கை அரசுக்கு தாம் போதிய வாய்ப்பை கொடுத்தோம் என்று நாளை கூறுவதற்காகவே என்பது தெளிவு.

அதே சமயம் இலங்கை அரசு நியாயமாக நடந்து கொள்கிறது என்ற கருத்து ஏற்படும் வாய்ப்பை வழங்க புலிகள் தயாராக இல்லை.

அரசியல் பேச்சு நடத்த நாம் ஒன்றும் பின் நிற்கவில்லை என்று புலிகள் கூறினார்கள்.

4ம் கட்டப் பேச்சுக்கு அரசால் திகதி நிர்ணயிக்கப்பட்டவுடன் அரசியல் பேச்சை ஆரம்பிக்க இது தருணமல்ல என்று பிரபாகரன் கடிதம் எழுதியிருந்தார்.

அரசியல் சதுரங்கத்தில் ராணிக்கு 'செக்' வைக்க அன்றாடப் பிரச்சனை பற்றி பேச்சே சுலபமான வழி என்று புலிகள் நினைக்கிறார்கள்.

புலிகள் விதித்துள்ள காலக்கெடுவும், பேச்சில் முன்னேற்றம் சொல்லிக் கொள்ளும்படி அமையாமையும் அரசுக்கு சங்கட நிலைதான்.

பாரிஸ் கூட்டம் நடக்கும் போது இலங்கை அரசு அங்கே போய் புலிகளோடு தமது உறவு நல்ல நிலையில் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

ஏனெனில், சர்வதேச ரீதியாகவும் அரசுமீது குற்றம்சாட்டி புலிகளது பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"மீண்டும் போர் தொடங்குமா?" என்ற கேள்வியை பாரிஸில் கூடும் உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகள் மத்தியில் நிலைக்க வைக்கவே ஏப்ரல் 19 வரை காலக்கெடு என்று புலிகள் அறிவித்தனர்.

**அன்றாடப் பிரச்சனையை வைத்து அரசுக்கு சர்வதேச அரங்கில் நெருக்கடியை கொடுக்க புலிகள் முதலில் நகர்த்திய காய்தான் ஏப்பிறல் 19 காலக்கெடு.**

அதே சமயம் ஏற்கனவே முரசில் மிகச் சரியாகவே முன்னறிந்து கூறியது போல், பாரிஸ் கூட்டம் நெருங்கும் சமயத்தில்தான் அரசும் புலிகளோடு பேசுவதற்கு நாள் குறித்தது.

பத்தாம் திகதி பேச்சு நடத்திவிட்டு 'உறவில் முன்னேற்றம்' என்று சொல்லலாம் என்று அரசு நினைத்திருக்கலாம்.

அதனையுணர்ந்தே புலிகளும் பிடிகொடாமல் தமது நகர்வை மேற்கொண்டனர்.

பேச்சுக்கு பின் நிற்பதாக காட்டாமல் பேசப்பட்ட விடயங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை, என்று அறிவிப்பதுதான் புலிகளது உத்தி.

அதனால், "வாருங்கள், ஆனால் 'காலக்கெடு' விதிக்கப்பட காரணமாக இருந்த அன்றாடப் பிரச்சனைகள் பற்றிப் பேசலாம்" என்று பிரபா அறிவித்தார்.

ஆக, மொத்தத்தில் சதுரங்க ஆட்டம் தொடர்கிறது. விட்டுக் கொடுக்கும் மனநிலையை விட வெற்றிபெறும் எண்ணமே மேலோங்கியிருக்கிறது.

சதுரங்க ஆட்டம் எவ்வளவு காலம் தொடரும் என்பது ஒரு புறமிருக்க, புலிகள் வடக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு தெளிவாகச் சொல்வது இதுதான்:

**"சமாதானச் சங்கின் சுருதி கலைகிறது**
**மீண்டும்....**
**"கொத்திப் பேய்**
**சொத்தி முருங்கில் ஏறுகிறது"**
**........................**
**தெற்கில் தேர்தல் திருவிழாவின் போது**
**'சின்ன மேளம்' சிரித்துக்கொண்டது;**
**பக்க வாத்தியங்கள் பல்லவி வாசித்தன.**
**........................**
**பலருக்கு பழையது மறந்து போனது**
**இன்று**
**உண்மை முகத்திலடிக்கும் போது**
**அம்மாவும், அம்மம்மாவும்**
**சும்மா என்பது தெரியவந்தது.**
**புத்தனுக்கு 'அரச நிழலில்' ஞானம் விடிந்தது.**
**தமிழனுக்கு 'அனுபவ நிழலில்' அறிவு பிறந்தது.**
**தமிழனே! என்னடா செய்யப் போகிறாய்?**
**கழற்றி வைத்த போருடையை**
**எடுத்து மாட்டு!**
**வீர வாளுக்கு வேலை வந்துவிட்டது!**
**கசாப்புக் கடை மேசையிற் கூட**
**கருணை பிறக்கலாம்**
**பேச்சுவார்த்தை மேசையில் மட்டும்**
**உரிமை கிடைக்காது.**
**இது புதிய வேதம் ....."**

இது 'விடுதலைப் புலிகள்' என்னும் பத்திரிகையில் பங்குனி மாதம் வெளிவந்த கவிதை. பிரபாவின் நேரடிப் பார்வையில் வெளியாகும் பத்திரிகை அது.

புலிகளது கவிதைகள், பிரசாரங்கள், கார்டூன்கள் மற்றும் கருத்தரங்கு உரைகள்-யாழ் குடாநாட்டு மக்களிடம் 'இனிப் போர் மூளாது' என்ற நம்பிக்கையை சத்தமாக ஒற்றியெடுத்து வருவது மட்டும் உண்மை.

# அதிரடி அய்யாத்துரை



**யா**ழ் குடாநாட்டில் ரெண்டு எழுத்தார் மீண்டும் போர்க்கால பரபரப்போடு ஓடுப்பட்டுத் திரியினமாம். பச்சை நிற வாகனங்களும் ஓடித்திரியுதாம். வெடி குண்டுப் பரிசோதனைகளும் பரவலாய் நடத்திப் பார்க்கினமாம். அதிலை ஏற்பட்ட விபத்திலை ரெண்டு எழுத்தார் சிலர் பலியாகியும் இருக்கினமாம்.

**ரெ**ண்டு எழுத்தாரின் ஆலோசகர், தலைவரது வேண்டுகோளின் படி உற்சாகபானப் பாவனையைச் சில வருடங்களாக நிறுத்தியிருக்கிறார். தனது நண்பரான 'குடி மக்களை' கண்டால் "நீங்கள் கொடுத்து வைச்சனீங்கள்" எண்டு சொல்லிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளுறாராம்.

**கி**ழக்கு சிங்கத்தாரை ரெண்டு எழுத்தார் சந்திக்க அழைக்க, அவர் தனியப் போக யோசித்து, கூட ஒரு வெகுஜனப் பிரதிநிதியையும் கூட்டிக் கொண்டல்லோ போனவர். கூட அழைத்துப் போனது சாட்சிக்கோ அல்லது தனக்குக் கிடைப்பது தன் சகாவுக்கும் கிடைக்கட்டும் எண்ட நோக்கத்திலையோ? காலனின் அழைப்பெண்டால் கலக்கம் வரத்தானே செய்யும்! காத்திருந்த ஒன்றரை மணிநேரமும் திக் ..... திக்...... திக்...... தானாம். வேணுமெண்டுதான் காத்திருக்க வைத்தவையாம். திரும்பி வந்த பிரதிநிதியள் நைசாக தங்களைக் கிள்ளிப் பாத்துக் கொண்டிருப்பினம்.

**ப**லம் உள்ளவை எச்சரித்தால் பயம் உள்ளவை அதற்குச் சொல்லும் அர்த்தம், 'நட்புரீதியான பேச்சு....' ஆயுத பலத்திற்கு ஏற்ப அர்த்தமெல்லாம் எப்படி மாறுது பாத்தியளோ? நான் எதைச் சொல்லுறன் எண்டு உங்களுக்குத் தெரியும் எண்டு நினைக்கிறன். 'அடிக்குண்டோ மறுக்கும் வாய்'. நான் பழமொழியை மாற்றிப் போட்டன். ஹி ...... ஹி ...... ஹி ......

**த**ந்தை செல்வாவுக்கு நினைவு தினக் கூட்டம் நடத்த திருவானமலைக் கிளை தீர்மானிச்சிருக்கு. தங்கமானவரை அழைக்காட்டி கூட்டத்திற்கு ஆட்கள் போக மாட்டினம் எண்டு 'தங்க' வட்டாரம் சவால் விட்டிருக்கு. எல்லாம் கிடக்க, கிழக்கின் முன்னாள் சொல்லின் செல்வரை அழைக்கவும் ஒரு திட்டம் இருக்குதாம். 'சொல்லின் செல்வர் சொல்லில் பிழைக்கலாமா?' எண்டு அவர் கட்சி தாவிய நேரத்திலை கோசம் போட்டதை மறந்து போச்சினமாக்கும். இதுதானுங்கோ அரசியல்.

**க**னடாவிலையும் எங்கள் நாட்டவர் ஒரு தமிழ் மகன் தேர்தலிலை குதிச்சிருக்கிறாராம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த குடி கனடாவிலையும் பறக்க விட நினைக்குதோ தேர்தல் கொடி? நல்லது செய்தால் சரிதான்.

**வெ**ளிநாடுகளிலை உள்ள நம்மவர்கள் நடத்தும் தமிழ் பேப்பருகளுக்கு கொழும்பிலிருந்து சிலர் எழுதுகினம். 'ஈழகேசரி' எண்டு ஒரு பேப்பர். அதிலை ஒரு செய்தி, "வாசு புலிகளைச் சந்தித்தமையால் தமிழ் அமைப்புக்களான ஜனநாயகக் கட்சியும், விடுதலைக் கழகமும் அவருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்" எண்டு அரசு பாதுகாப்பு கொடுத்திருக்காம். அட, இந்தச் செய்தி எனக்குத் தெரியேல்லையே எண்டு விசாரிச்சுப் பார்த்தனான். நெத்தியடியாக எனக்கு வாசு சொன்ன பதில் "நான் கொழும்பில் தங்கியிருப்பதே ஜனநாயகக் கட்சி வெகுஜனப் பிரதிநிதி ஒருவரது பாராளுமன்ற விடுதி அறையில்தானே". சிலர் வெளிநாட்டு பேப்பருக்குத்தானே எழுதுறம் எண்டு நினைச்சு ரீல் விடுற கதைகள் இன்னும் நிறைய இருக்கும் பாருங்கோ.

**கி**ழக்கு பல்கலைக்கழக விசயத்திலை பீட மாற்றம் எண்டு முடிவே எடுக்கவில்லை எண்டு சம்பந்தப்பட்டவை சொன்னவையாம். சில பத்திரிகைகளையும் கண்டிச்சவையாம். சரிபாருங்கோ, போராட்டம் நடக்கும் போது தகவல் தவறு எண்டு ஏனாம் சம்பந்தப்பட்டவை மறுக்காமல் இருந்தவை? எல்லாம் குழப்படிசாமி.

**அ**ண்ணல் காந்தியைப் பற்றி வைரமுத்து எழுதிய கவிதை ஒன்று. சிந்திக்கலாம் அல்லது சிரிக்கலாம், சிலர் சினக்கலாம்.

**"அப்படியொன்றும் உன்னை**
**அடியோடு மறக்கவில்லை**
**அண்ணலே......!**
**இன்னும்**
**நகரத்துப் பெண்களிடம்**
**உனக்கு**
**நல்ல செல்வாக்கு இருக்கிறது...**
**உன்னைப் பின்பற்றி**
**அரையாடை கட்டுவது**
**அவர்கள் தாம் இப்போது"**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்






# அரசின் அறிவிப்பும் அடையாள எதிர்ப்பும்!

அற்புதன் எழுதுவது

இந்த அரசியல் தொடர் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வருகின்றன. தொடர் முடியும்வரை காத்திருந்து கருத்துச் சொல்ல சிலருக்கு பொறுமையில்லை. துள்ளுகின்றனர். புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுவதாக கூறுகிறார்கள். இது வரலாறு கட்சிப் பிரசாரம் அல்ல. புலிகள் இன்று அதி சிறந்த அரசியல் இராணுவ அமைப்பாக மாறியிருப்பது நிஜம். இந்த உயரத்தை அவர்கள் எப்படி எட்டிப் பிடிக்க முடிந்தது?
இதற்கு எந்தவொரு கட்சி சார்பாகவும் விடை காண முற்பட்டால் உண்மை கிடைக்காது. அவரவர் தம்மை நியாயப்படுத்தவே காரணம் தேடுவார்கள். புலிகளை நேசிப்பவர்களும் சரி, எதிர்ப்பவர்களும் சரி புலிகளது வரலாற்றில் இருந்து நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.
புரட்சி பேசிய இயக்கங்களால் குறைந்த பட்சம் தமிழ் மக்களது நம்பிக்கையைக் கூட பெற முடியாமல் போனது ஏன்?
ஆட்பலத்தில் புலிகளை விட முன்னணியில் நின்ற அமைப்புக்கள் கூட இன்று பலவீனமானது எப்படி?
புலிகள் பற்றிய விமர்சனங்களுக்கு அப்பால் புலிகளுக்கு மாற்றீடாக வேறு எந்தவொரு தமிழ் அமைப்பும் தம்மை தயார்ப்படுத்த முடியாமல் போனதுதானே இன்றைய நிலவரம் பளிச்சென்று சொல்லும் உண்மை. தியாகங்கள் புலிகளுக்கு மட்டுமே சொந்தமல்ல என்பதை சத்தியம் என்று ஏற்றுக்கொள்ளலாம்.
ஆனால், தியாகங்களை பலமான அமைப்புக்களை உருவாக்கும் உரமாக மாற்றத் தவறியது யார் குற்றம்? ஏன்? எப்படி?
பல்வேறு கேள்விகள், சந்தேகங்கள் என்பவற்றுக்கு ஓரளவாவது விடை தெரியும் விதத்தில் இத்தொடர் அமையும்.
குறுக்கிட்டதற்கு மன்னியுங்கள், இனித் தொடர்ந்து 'வாசியுங்கள்.

83 ஜூலையின் பின் இந்தியாவுக்கு தம்மை பலமான அமைப்புகளாகக் காட்டுவதில் தான் பிரதான இயக்கங்கள் போட்டியிட்டன.

## சத்தியப் பிரமாணம்

83 ஜூலைக் கலவரம் இந்திய உதவியை போராளி அமைப்புக்களுக்குச் சாதகமாக்கியது.

ஆயுதப் போராட்டம் மீதும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பாரிய நம்பிக்கையை தோற்றுவித்தது.

இதே வேளையில் ஜே. ஆர். அரசு புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டது.

சகல அரசாங்க ஊழியர்களும் பிரிவினைக்கு எதிராகவும், அரசியலமைப்புக்கு விசுவாசமாகவும் சத்திய பிரமாணம் செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்தது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் விரும்பினால் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளலாம். அதன் அர்த்தம் சத்தியப் பிரமாணப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதல்ல என்று புலிகள் கூறினார்கள்.

சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்தால் ஆயிரக்கணக்கான தமிழ் ஊழியர்கள் தமது வேலைகளை இழக்க வேண்டி ஏற்படும். அதனால் அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்படும். எனவே சத்தியப் பிரமாணம் எடுப்பதை தாம் எதிர்க்கப் போவதில்லை என்று புலிகளது சார்பாக பிரபாகரனது பெயரில் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது.

சத்தியப் பிரமாணத்தை எதிர்க்க வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எஃப். முடிவு செய்தது.

இந்தியாவுக்கு புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் பத்மநாபா செய்த முடிவு அது.

சத்தியப் பிரமாணத்தை தடுக்க முடியாவிட்டாலும் அதற்கு அடையாள எதிர்ப்பையாவது தெரிவிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கெங்கும் சத்தியப் பிரமாண படிவங்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

கிழக்கின் முக்கியமான உறுப்பினர்கள் சிறையிலே இருக்கிறார்கள். தற்போது அங்கே உள்ளவர்களால் நடவடிக்கைகளில் இறங்க முடியுமா? என்று யாழ் பிராந்திய கமிட்டி பத்மநாபாவிடம் கேட்டது.

"முடியும்" என்று விட்டு இந்தியா சென்று விட்டார் பத்மநாபா.

சத்தியப் பிரமாணம் செய்யும் திகதி வந்தது. யாழ் குடாநாட்டில் ஆயுதங்களோடு அரச அலுவலகங்களில் புகுந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் மக்கள் விடுதலைப் படை (பி.எல்.ஏ.) சத்தியப் பிரமாண படிவங்களை பறித்தெடுத்தது.

## பொலிஸ் ஜீப் மீது தாக்குதல்

ஒரே நாளில் அரச அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் ஏழு பேர் மட்டுமே பங்கு கொண்டனர் என்பதுதான் ஆச்சரியம்.

அரசுக்கு சொந்தமான ஜீப் வண்டிகள் மற்றும் வாகனங்கள் குண்டுவைத்தும் தீயிட்டும் கொளுத்தப்பட்டன.

யாழ் நகருக்குள் தனது ஜீப்பில் வந்து கடை ஒன்றுக்கு சென்றார் பொலிஸ் அதிகாரி. அவர் திரும்பி வந்து ஜீப்பில் ஏறிய போது "அசையாதே அப்படியே இரு" என்றனர் இளைஞர்கள்.

பொலிஸ் அதிகாரியை ஜீப்புக்குள் வைத்தே பெற்றோல் ஊற்றப்பட்டது. அவர் மன்றாடினார். கதவைத் திறந்துவிட அவர் தெருவில் தவழ்ந்து சென்றார்.

அவர் வந்த ஜீப் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளில் ரமேஷ், சுபத்திரன், மோகன், சுதன், குமார், இந்திரன், இளங்கோ ஆகியோர் பங்கு கொண்டனர்.

அடையாள எதிர்ப்பு என்ற வகையில் மக்களின் கவனத்தை ஈர்த்தமை மட்டுமே ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிற்கு கிடைத்த வெற்றி. ஆனால், பத்மநாபா உறுதியளித்தபடி கிழக்கில் சத்தியப்பிரமாண எதிர்ப்பு நடவடிக்கை எதுவும் நடைபெறவேயில்லை.

## மட்டக்களப்பு சிறையுடைப்பு

83 ஜூலைக் கலவரத்தின் பின்னர் நடைபெற்ற மற்றொரு முக்கியமான சம்பவம் மட்டக்களப்பு சிறையுடைப்பாகும்.

வெலிக்கடை சிறைப் படுகொலைக்கு பின்னர் முக்கியமான தமிழ் அரசியல் கைதிகள் மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

60 க்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பில் வாவி சூழ்ந்த பகுதியான ஆணைப்பந்தி என்னுமிடத்தில் சிறைச்சாலை அமைந்திருந்தது.

சிறையை உடைத்து போராளிகளை மீட்க வேண்டும்என்று திட்டமிட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் தலைவர்களில் ஒருவராகவும், மக்கள் விடுதலை படை தளபதியுமாக அப்போதிருந்த தேவானந்தா, மட்டக்களப்பு பிராந்திய தலைவராக இருந்த சிவா, மத்திய குழு உறுப்பினராக இருந்த மணி, மற்றும் அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினர்களான குமார், வடிவேலு, சிறீஸ்கந்தராஜா ஆகியோர் உட்பட 15 பேர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள்.

மட்டக்களப்பில் சத்துருக்கொண்டான் எனுமிடத்தில் கால்மார்க்ஸ் நூற்றாண்டு தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஒரு கருத்தரங்கு நடத்தியது.

அந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு இரண்டு விரிவுரையாளர்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அழைத்தது.

அதில் ஒருவர் வரதராஜப்பெருமாள், இன்னொருவர் மகேஸ்வரராஜா.

கருத்தரங்கில் கலந்து கொள்ள முதலில் வரதன் மறுத்தார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதால் கிடைக்கும் வருமானத்தை இழக்க முடியாது. ஏற்கனவே பட்ட அனுபவங்கள் போதும் என்று கூறினார்.

ரமேஷ், தயாபரன் ஆகியோர் வற்புறுத்தி அனுப்பி வைத்தனர். கருத்தரங்கில் பொலிஸ் நுழைந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களோடு சேர்த்து இரண்டு விரிவுரையாளர்களையும் கைது செய்தது.

அவர்களும் மட்டக்களப்பு சிறையில்தான் இருந்தனர்.

அச்சமயத்தில் பத்மநாபாவும் கருத்தரங்கில் இருந்த போதும் அவர் தப்பிவிட்டார்.

## எப்போது விடுதலை?

புளொட் அமைப்பில் மாணிக்கம் தாசன், பரந்தன் ராஜன், வாமதேவன், பாரூக், டேவிட்ஐயா ஆகியோரும்,

'தமிழீழ விடுதலை இராணுவம்' என்றும் அமைப்பைச் சேர்ந்த பனாகொடை மகேஸ்வரனும் அவரது இயக்கத்தைச் சேர்ந்த சிலரும், மட்டக்களைப்பைச் சேர்ந்த பரமதேவாவும் மட்டக்களப்பு சிறையில் இருந்தவர்களில் முக்கியமானவர்கள்.

இவர்களில் பலரை தானாகவே முன்வந்து அரசு விடுதலை செய்யும் என்ற நம்பிக்கை அறவே இருக்கவில்லை.

சிறை உடைப்பு திட்டத்தை இவர்கள் அனைவருமே முன்னின்று வரவேற்றதற்கு அதுவும் ஒரு காரணம் எனலாம்.

சிறை உடைப்பு நடவடிக்கையை வெளியில் இருந்து மேற்கொள்ளும் பொறுப்பு குணசேகரனிடமும், சிறையின் உள்ளே டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புலிகள் மறுப்பு

சிறை உடைப்பை மேற்கொள்ள புலிகளது உதவியையும் பெற ஈ.பீ.ஆர்.எல்.எஃப் மத்திய குழு உறுப்பினர் குணசேகரன் விரும்பினார்.

மட்டக்களப்பு சிறையில் , புலிகளது ஆதரவாளர்களான விரிவுரையாளர் நித்தியானந்தன், நிர்மலா, வணபிதா சிங்கராஜர் ஆகியோரும் சிறையில் இருந்தமையால் இரு அமைப்பும் இணைந்து நடவடிக்கையில் இறங்கலாம் என்று குணசேகரன் விரும்பினார்.

முதலில் ஒப்புதல் தெரிவித்த புலிகள் அமைப்பினர் பின்னர் மறுத்து விட்டனர்.

அதன் பின்பு புளொட் அமைப்பினரோடு சேர்ந்து நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்யப்பட்டது.

'புளொட்' அமைப்பின் தலைவர்களில் ஒருவரான வாசுதேவாவுடன் பேசி இரு அமைப்பினரும் நடவடிக்கைக்கான ஏற்பாடுகளை பகிர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சிறையின் உள்ளே டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கம் தாசன், பரந்தன் ராஜன் ஆகியோர் நடவடிக்கைப் பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டனர்.

## திட்டம் தயாரானது

அரை மணிநேரத்திற்கு ஒரு தடவை இராணுவ ரோந்து இருக்கும். பொலிஸ் அடிக்கடி வந்து பாதுகாப்பைப் பார்வையிட்டுச் செல்லும்.

இவற்றுக்கிடையே தப்பிக்க வேண்டும். பார்வையாளர்கள் என்ற போர்வையிலும், வேறு சில உதவிகள் மூலமாகவும் சிறைக்குள் சில ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன.

சிறைக்காவலர்களை மடக்கும் பொறுப்பை டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கம் தாசன் போன்றோர் எடுத்துக் கொண்டனர்.

வயதான கைதிகளான டேவிட் ஐயா போன்றோருக்கு மடக்கப்படும் சிறைக்காவலர்களுக்கு வாயில் பிளாஸ்டர் ஒட்டும் பொறுப்புக் கொடுக்கப்பட்டது.

சிறைக்கதவு வழியாக தப்பிச் செல்ல முடியாவிட்டால் பின் சுவர் வழியாக செல்ல வேண்டும். அந்தச் சுவரை உடைத்து வழி ஏற்படுத்தும் பொறுப்பு வரதராஜப் பெருமாளிடம், ஈரோஸ் உறுப்பினர் அழகிரியிடம் கொடுக்கப்பட்டது.

## சந்தேகம்

இடையிலே ஒரு சந்தேகம். தமக்குத் தெரியாமல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் தப்பித்து சென்று விடுவார்களோ என்று புளொட் உறுப்பினர்களுக்கு சந்தேகம்.

அதே சந்தேகம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்களுக்கும்.

இதனால், இரவு நேரங்களில் இரு அமைப்புக்களையும் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் கண்காணித்தனர்.

இது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் ஒன்றில் பனாகொடை மகேஸ்வரனை பரந்தன் ராஜன் அடித்து விட்டார்.

சிறை உடைப்புக்கு திட்டமிட்ட நாளும் வந்து விட்டது.

செப்டம்பர் 23, 1983. இரவு 8 மணி சிறைக்காவலர் அந்தனிப்பிள்ளை என்பவர் கைதிகளுக்கு தேநீர் கொடுப்பதற்காக சினிமாப் பாடல் ஒன்றைப் பாடியபடி வந்தார்.

"என்ன தம்பிகளா எப்படியிருக்கிறீர்கள்?" என்று குசி மூட்டில் வந்தவரை "அண்ணே வாங்கோ" என்று மடக்கிப் பிடித்தனர் போராளிகள்.

அவரது வாயில் ' பிளாஸ்டர்' ஒட்டப்பட்டது. அதனையடுத்து ஏனைய சிறைக் காவலர்களும் மடக்கப்பட்டனர்.

குறித்த நேரத்தில் சிறைக்கு வெளியே வாகனங்கள் வந்து சேர்ந்தன. தப்பிய போராளிகள் வாகனங்களில் ஏறிக் கொண்டனர்.

## சிறையில் நிர்மலா

இவர்கள் வெளியே வாகனத்தில் போய் ஏறியதை பின்புறச் சுவரை இடித்துக் கொண்டிருந்த வரதராஜப் பெருமாளும், அழகிரியும் அறியவில்லை.

இதே வேளை வண பிதா சிங்கராஜர் கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம் ஆகியோர் தங்களால் தப்ப முடியாது என்று ஏற்கனவே கூறியிருந்தனர்.

தப்பிச் செல்வதால் ஏற்படும் நெருக்கடிகளை எதிர்நோக்க அவர்களது உடல் நிலையும் ஒத்துழைக்காது என்பது முக்கிய காரணம்.

போராளிகள் தப்பிச் செல்லும் போது வண பிதா சிங்கராஜர் அவர்களை வாழ்த்தி விட்டு பிரார்த்தனையில் ஈடு பட்டார்.

நிர்மலா பெண்கள் பகுதியில் வைக்கப்பட்டிருந்தார். அவரது சிறைக் கூண்டைத் திறந்து மீட்கும் பொறுப்பு வாமதேவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வாமதேவன் தான் தப்பும் அவசரத்தில் நிர்மலாவை மறந்துவிட்டார்.

சுவரை உடைத்துக் கொண்டிருந்த வரதனுக்கும், அழகிரிக்கும் ஒரு சந்தேகம்; சிறைக்குள் 'எந்தச் சத்தத்தையுமே காணவில்லையே' இருவரும் ஓடி வந்து பார்த்தனர்.

சிறையிலிருந்து தப்பியவர்கள் அனைவருமே போயே விட்டார்கள்.

இருவரும் திகைத்துப்போனார்கள்.

(தொடர்ந்துவரும்.)



# மட்டக்களப்பு சிறை உடைப்பு

அரசியல் தொடர்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# வடக்கு – கிழக்கின் எதிர்காலச் சந்ததியினருடன் 'விளையாடும்' ஆட்சியாளரின் கல்விக் கொள்கை!

அலசுவது – இராஜதந்திரி

இருபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பெரும் ஊர்வலம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இந்த ஊர்வலம் ஓர் இறுதி ஊர்வலத்தை தழுவியதாக அமைந்திருந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் அனைவரும் வடபகுதி மாணவர்களே. பிரேதத்தைச் சுமந்து செல்லும் பாடையொன்றைச் சுமந்தவண்ணம் அந்த ஊர்வலம் இடம்பெற்றது.

பாடையில் ஒரு 'கொடும்பாவி' சடலம் போன்று கிடத்தப்பட்டிருந்தது. அக்கொடும்பாவிச் சடலத்துக்குரியவர் வேறுயாருமல்ல; அன்றைய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மொஹமட் அவர்களின் கொடும்பாவியே அதுவாகும்.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் வழியாகக் கொண்டு செல்லப்பட்ட அந்தப்பாடையில் இருந்த கொடும்பாவி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் வைத்துக் கொளுத்தப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசின் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மொஹமட்டின் கொடும்பாவி யாழ்ப்பாண மாணவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி விடயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே தரப்படுத்தல்முறை விளங்கியிருந்தது. பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதற்குத் தகுதி பெற்ற மாணவர்கள் பலரும் தரப்படுத்தல் முறையினால் உயர்கல்வி பெறும் வாய்ப்பை இழந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

அரசியல் ரீதியான புறக்கணிப்புகளுக்கு மத்தியில் கல்வித் துறையிலும் தரப்படுத்தல் மூலம் கைவைக்கப்பட்டதையடுத்தே வடபகுதி மாணவர்களும் தீவிரவாத சிந்தனைகளுக்குட்படலானார்கள்.

மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கள் சுமுகமாகவும், உறுதியானதாகவும் இருந்த தருணத்திலேயே தரப்படுதல்முறை அவர்களது கல்வி வளர்ச்சியில் தடங்கல்களைக் கொண்டு வந்திருந்தது.

இன்று வடபகுதியில் இளம்பராயத்தினர் ஆயுதப்போராட்டத்தில் குதித்துள்ளமைக்கும் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை ஏற்படுத்திய தாக்கங்களும் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

அன்று அதிகாலைப் பொழுதில் எழுந்து தமது தோட்டப் பயிர்களுக்கு நீர் இறைத்து, தமது உற்பத்திப் பொருட்களையும் சந்தைகளில் சேர்த்து பின்னர் பாடசாலை சென்று கல்வியையும் பயின்று தமது ஈடேற்றத்தில் வடபகுதி மாணவர்கள் அக்கறை காட்டியிருந்தனர்.

அத்தகைய மாணவர்களுக்கு தரப்படுத்தல்முறை ஒரு பேரிடியாகவே இருந்தது. இன்று இருபது வருடங்களுக்குப் பின்னர் வடபகுதி மாணவர்களின் கல்வி நிலை முற்றிலும் பாழாக்கப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

கடந்த ஒரு தசாப்தகால யுத்த நிலவரங்கள் வடபகுதி மாணவர்கள் மீது உளரீதியாக பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன. பாடசாலைக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டும் பாடசாலைக் கல்விமுறை சீர்கெட்டும் போயுள்ளது.

குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு பதுங்கி ஒளிவதுடன் தமது கல்வியில் கவனஞ் செலுத்துவதையும் மாணவர்கள் கைவிட்டிருக்கக் காணப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் கல்விபயில்வதற்கு மின்வெளிச்சமின்றி இருக்கின்றது. அதேவேளை குப்பி விளக்கில் எண்ணெய் வார்த்து ஒளியைப் பெறவும் போதியளவு எரிபொருளின்றி இருக்கின்றது.

கூடவே சிறந்த ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு மற்றும் காகிதாதிகள், பாடசாலை உபகரணங்களுக்கான பற்றாக்குறை என்பனவும் வட பகுதி மாண்வர்களைப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளன.

இத்தகைய இடையூறுகள், தடங்கல்களுக்கு மத்தியிலும் வடபகுதி மாணவர்கள் தமது கல்வியை நல்ல மனஉறுதியுடன் மேற்கொண்டிருக்கக் காணப்படுகின்றனர்.

தென்னிலங்கையின் அரசியல் வாதிகள், புத்திஜீவிகள் கூட இன்றைய யுத்த நிலவரங்களுக்கு மத்தியிலும் கல்வி மீது யாழ்குடாநாட்டு மாணவர்கள் கொண்டுள்ள அபரிமிதமான ஆர்வத்தைப் பாராட்டியவர்களாக இருக்கின்றனர்.

தெற்கே உள்ள பல்கலைக்கழகங்கள் சிறிய சச்சரவுகளுக்கே மூடப்படும்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கொடிய யுத்த நிலவரங்களுக்கு மத்தியிலும் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஒரு போதும் மூடப்பட்டிருக்கவில்லை என்ற பெருமையைப் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

மாணவர்கள் மற்றும் யாழ் பல்கலைக்கழக கல்விமான்களின் உறுதியான மனநிலையே எத்தகைய சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் யாழ் பல்கலைக்கழகத்தை தலை நிமிர்ந்து நிற்கச்செய்துள்ளது.

இருந்தபோதிலும் தென்னிலங்கை ஆட்சியாளர்களின்-வடபகுதி மாணவர்கள் குறித்த கல்விக்கொள்கை அதிருப்தியளிப்பதாகவே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கின் இன்றைய இளஞ் சந்ததியினர் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் விதத்தில் ஆயுத ரீதியிலான போராட்டத்தில் நம்பிக்கை வைத்தவர்களாக இருக்கின்றனர்.

இளம்பராயத்தினரிடையே தோன்றக்கூடிய மனக்கிளர்ச்சியென்பது பஞ்சில் தீப்பிடிப்பதற்கு நிகரானதாகும்.

ஏற்கெனவே போரினாலும், மற்றும் பல்வேறு சமூகவியல் பிரச்னைகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மாணவர்கள் தொடர்ந்தும் விரக்தி நிலைக்குத் தள்ளப் படுவதைத் தவிர்க்கும் வழிவகைகளையே இன்றைய ஆட்சியாளர்கள் கைக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

இந்நிலையில் வடபகுதி மாணவர்கள் தற்போது பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியிலும்-பல்கலைக்கழக அனுமதிக்குரிய புள்ளிகளைப் பெற்ற போதிலும், ஓரிரு புள்ளிகள் வித்தியாசத்தில் பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெறும் தகுதியை இழந்தவர்களாக வடபகுதி மாணவர்கள் காணப்படுகின்றனர்.



## சமாதான – சகவாழ்வின் உயிர் நாடியாகும் இனப்பிரச்னைத்தீர்வு

**திருத்தம்**

சென்ற வாரம் வெளியான ராஜதந்திரியின் அலசலில் அச்சுக் கோர்ப்பில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளது தற்போதைய கோரிக்கைகள் எவ்வகையிலும் சமாதான நடவடிக் கைகளுக்கு குந்தகம் விளைவிக்கா தவையாகவே இருக்க காணப்படுகின்றன என்று எழுதியிருந்தார். அது 'குந்தகம் விளைவிப்பனவையாக' என்று தவறுதலாக இடம்பெற்று விட்டது.

இன்றைய காலகட்டத்தில் வடபகுதி மாணவர்களின் அயராத உழைப்பு, விடாமுயற்சி என்பவற்றையே சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் அடிப்படையில் அவர்களின் பெறுபேறுகளை எடைபோடுவதே நியாயமான நடவடிக்கையாக விளங்கமுடியும்.

இந்நிலையில் இன்றைய வடக்கு,கிழக்கு நிலவரத்துக்குத் தூபமிட்டுள்ள காரணிகளில் கல்வி குறித்த கொள்கைகளும் ஒன்றாகும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளவேண்டியவர்களாகின்றனர்.

எனவே இன்றைய வடக்கு-கிழக்கு நிலவரத்தை தகுந்த வகையில் கையாள வேண்டுமானால் அப்பிரதேச மக்களின் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களையும் ஆட்சியாளர்கள் மிக அவதானமாக அணுகவேண்டியவர்களாகின்றனர்.

ஏனெனில் இன்று வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் இளஞ்சந்ததியினர் தமது எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன், ஒரு பரந்துபட்ட அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்கு அவர்களது கல்விமுறை ஆரோக்கியமானதாகவும், இடையூறுகளற்றதாகவும் இருக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கு நிலவரம் ஒரு பரந்துபட்ட அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தியிருக்கக் காணப்படுகின்றது. இந்த அதிகாரப் பரவலாக்கம் என்பது வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் கல்வி, பொருளாதார, அரசியல் மற்றும் பிரதேச தனித்துவங்களைப் பேணிப்பாதுகாப்பதாகவே அமைய வேண்டியிருப்பது அவசியமானதாகின்றது.

எனவே வடக்கே பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் மற்றும் கிழக்கில் பல்கலைக்கழக நடைமுறைகள் குறித்து உறுதியான தீர்வுத்திட்டங்களை ஆட்சியாளர்கள் முன்வைக்கவேண்டியவர்களாகின்றனர்.

இதேவேளை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் குறித்த அம்சங்கள் ஒரு புறமிருக்க, தெற்கே ஆட்சியாளர்கள் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக தற்போது தமது கவனத்தைச் செலுத்தியிருக்கக் காணப்படுகின்றனர்.

அரசியலமைப்பு மாற்றம், மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ரத்துச் செய்தல், வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுதல் என்பனவே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த முக்கிய தேர்தல் வாக்குறுதிகளாகும்.

ஆனால் சந்திரிகா அரசு மேற்குறிப்பிட்ட வாக்குறுதிகள் தொடர்பாக தற்போது மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அசமந்தப் போக்குடையதாகவே இருக்கின்றன.

எங்கும், எதிலும் தாமதமே தலைதூக்கியிருக்கக் காணப்படுகின்றது. ஜனாதிபதி சந்திரிகாவின் அலுவல்கள் மற்றும் அவரது நிகழ்ச்சி நிரல்கள் முதற்கொண்டு அனைத்து நடவடிக்கைகளிலும் தாமதப் போக்கு நிலவுவதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அண்மையில் தாம் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின்போது ஜனாதிபதி சந்திரிகா இலங்கை இனப் பிரச்னை தீர்வு குறித்து மிகுந்த நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்னையைக் கையாளுவதில் தமது அரசாங்கம் தீவிர கவனஞ் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது தவிர வெளிநாட்டு-உள்நாட்டு முதலீட்டாளர்களையும் விரிவான முறையில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தூண்டும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா உறுதிமொழிகளை வழங்கிவரக் காணப்படுகின்றார்.

இருந்தபோதிலும் நாட்டில் ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலைகள் நீடிப்பதற்கு அவர்கள் தமது தேர்தல் வாக்குறுதிகளை காலந்தாழ்த்தாது நிறைவேற்ற வேண்டியது இன்றியமையாததாகின்றது.

கடந்த ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா மாபெரும் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் அவருக்குக் கிடைத்த இப்பெருவெற்றி ஜனாதிபதி ஆட்சிமுறையையும், அரசியலமைப்பையும் மாற்றுவதற்கும், வடக்கு-கிழக்குப் பிரச்னையை தீர்த்து வைப்பதற்கும் நாட்டு மக்கள் வழங்கிய ஆணையாகவே விளங்கியிருக்கக் காணப்படுகின்றது

இந்நிலையில் அரசியலமைப்பு மாற்றம், மற்றும் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு என்பன குறித்த விடயங்களில் தமது நிறைவேற்று அதிகாரப் பதவிக்காலத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டியவராகின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகள் தாமதமடைவதற்கு அரசாங்கமே காரணமாகும் எனக் கூறி வருகின்றனர். மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகள் உரிய ஒத்துழைப்பை வழங்குகிறார்களில்லை என்பது அரசதரப்பினரின் வாதமாக இருக்கின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் நாட்டின் எதிர்கால அமைதி, சுபீட்சம் என்பன இனப் பிரச்னைத்தீர்விலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து தகுந்த தீர்வுத்திட்டங்களை முன்வைக்காது முதலீட்டாளர்களுக்கும், வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் இலங்கையின் ஆட்சியாளர்கள் வழங்கும் உறுதி மொழிகள் காலப்போக்கில் அர்த்தமற்றவையாகவே மாறக்கூடிய சூழ்நிலைகள் உருப்பெறும்.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குரிய தீர்வென்பதே இன்று நாட்டின் சமாதான-சகவாழ்வுக்கான உயிர் நாடியாக இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு குறித்த நடவடிக்கைகளில் ஏற்படக் கூடிய தாமதங்கள், தப்பெண்ணங்கள் என்பன மீண்டும் அனல் காற்றையே வீசச் செய்வதாக இருக்கும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



சென்றவாரத் தொடர் ③

## காதல் மன்னன்

# ஜோன் எப்ஃ. கென்னடி

## ருசிகரமான உண்மைகள்

கார்ட்டர் தம்பதியினர் ஆதாரங்களைத் திரட்டுவதைத் தடுக்க கென்னடியும் அவரது தந்தையும் பல்வேறு தடைகளைப் போட்டனர்.

ஜோசப் கென்னடி, கார்ட்டர் தம்பதியினரை சந்தித்தார்.

"என் மகன் சபலக்காரன் தான். இனிக் கண்டித்து வைக்கிறேன்."

"கண்டித்தால் மட்டும் போதாது. ஜனாதிபதி பதவிக்குக் கண்டிப்பாக போட்டி யிடக் கூடாது."

என்றனர் கார்ட்டர் தம்பதியினர்.

"இது சரியல்ல. அருமையான வாய்ப்புக்கு குறுக்கே நிற்காதீர்கள். இது உங்களுக்கும் நல்லதல்ல."

மறைமுக எச்சரிக்கை பயன் கொடுக்கவில்லை. கார்ட்டர் தம்பதியினர் நீதிமன்றத்திற்கு சென்றனர்.

ஆதாரங்கள் இல்லையென்று கூறி அவர்கள் தொடுத்த வழக்கை தள்ளுபடி செய்தார் நீதிபதி.

1958இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கென்னடியின் கழுத்தை அலங்கரித்தது வெற்றிமாலை.

அமெரிக்காவின் இளம் ஜனாதிபதிக்கு வெள்ளை மாளிகைதான் வாசஸ்தலம்.

வெள்ளை மாளிகையில் ஜாக்குலின் இருக்கும்வரை கென்னடி உத்தம புருஷர்.

ஜாக்குலின் சமூக சேவைகளில் ஈடுபட்டு அடிக்கடி வெளியூர்களுக்கு பறந்து விடுவார்.

அடுத்த நிமிடமே கென்னடி உத்தம புருஷர் வேசத்தை களைந்துவிட்டு, உல்லாச பிரியராகிவிடுவார்.

□□

1961 டிசம்பர் மாதத்தில் ஒருநாள் ஜாக்குலின் வெளியூர் சென்றுவிட்டாள்.

கென்னடி தன் அந்தரங்க உதவியாளரை அழைத்தார். காதோடு சொல்லப்பட்டதகவலோடு உதவியாளர் விரைந்து சென்றது மேரி பிஞ்செட் வீட்டிற்கு.

கென்னடியின் காதலி பமேலா குடியிருந்த வீட்டு உரிமையாளர் மேரி பிஞ்செட் உடனடியாகக் கென்னடிக்குத் தேவைப்பட்டாள்.

"தங்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்து வரச்சொன்னார் ஜனாதிபதி!"

"எதற்கு?"

அவளின் கேள்வி உதவியாளரிடம் நமட்டுச் சிரிப்பை உற்பத்தி செய்தது.

"விருந்தாளியாக வந்து தங்கச் சொல்கிறார்."

மேரி பிஞ்செட்டுக்கு இன்ப அதிர்ச்சி! வெள்ளை மாளிகைக்குள் செல்வது என்றால் அது எத்தனை பெரிய வாய்ப்பு!

உலகமே வியக்கும் இளம் ஜனாதிபதியே 'விருந்துக்கு வா-விருந்தாக வா' என்று அழைப்பது என்றால் அது எத்தனை சிறப்பு!

மேரி பிஞ்செட் ஏற்கெனவே ஒரு ஓவியனைக் காதலித்துக் கொண்டிருந்தாள்.

காவிய நாயகன் கென்னடியே அழைக்கும் போது ஓவியனின் காதலா பெரிது? காதலைத் தூக்கி ஓரத்தில் போட்டுவிட்டு வெள்ளை மாளிகைக்கு ஓடினாள் மேரி பிஞ்செட்.

மேரி பிஞ்செட்டுக்கு போதைப் பொருள் கலந்த சிகரெட் புகைப்பதில் அலாதிப் பிரியம்.

வெள்ளை மாளிகையில் உல்லாசமான கட்டிலறையில் தன் உடலைப் பரிமாறுவதற்கு முன் சிகரெட்டை பரிமாறினாள் மேரி பிஞ்செட்.

"அப்படி என்னதான் இதிலே இருக்கிறது?"


கென்னடி சிகரெட்டை தீமூட்ட முன்னர், கேட்டார்,

"சில சுகங்கள் சொன்னால் புரியாது. சுவைத்தால்தான் புரியும்."

கண்சிமிட்டினாள் மேரி பிஞ்செட். கென்னடி புகைத்துப் பார்த்தார்.

அந்தரத்தில் மிதப்பது போல இருந்தது. இன்னும் ஒன்று புகைக்க வேண்டும் போல் இருந்தது. இரண்டாவது சிகரெட்டை உதட்டில் வைத்து தீமூட்டி விட்டாள் மேரி பிஞ்செட்.

புதிய அனுபவம். போதை தலைக்கேற பொத்தென்று கட்டிலில் வீழ்ந்தார் கென்னடி.



ஜூடித் காம்பல்

**பாதாள உலக சக்கரவர்த்தி சாம் தன் காதலி கனவுக்கன்னி நடிகை ஜூடித்தை கென்னடியிடம் அனுப்பினான்**

மேரி பிஞ்செட் பதறிப்போனாள். அவளுக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை.

'உயிருக்கு எதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ?' பயத்தில் அவள் உறைபனியாகிக் கொண்டிருக்க,

கென்னடி சட்டென்று கட்டிலில் இருந்து எழுந்து அவளை எட்டிப் பிடித்தார்.

"சொர்க்க சுகம். அனுபவம் புதுமை. நன்றி மேரி பிஞ்செட். இன்னொரு சிகரெட் கொடு."

"வேண்டாம். தாங்க மாட்டீர்கள்."

"தாங்குவேன் கொடு. பிறகு பார் நீதான் தாங்க மாட்டாமல் திணறப் போகிறாய்."

மூன்றாவது சிகரெட்டையும் புகைத்து முடித்தார் கென்னடி.

□□

'போதை வஸ்து தடுப்பு தொடர்பான உயர்மட்ட மாநாடு-

ஜனாதிபதி கென்னடி தொடக்கி வைத்தார்.

பத்திரிகைகளில் முன்பக்கச் செய்தி! செய்தியைப் படித்த மேரி பிஞ்செட் அடக்க முடியாமல் சிரித்து விட்டாள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் போதை பொருள் கலந்த மூன்று சிகரெட்டுக்களை கென்னடி புகைத்து முடித்தது அவள் மனக் கண்ணில் இருந்து மறைய மறுத்தது.

□□

கென்னடியின் நெருக்கமான நண்பர் ஃபிராங் சினட்ரா.

ஃபிராங் சினட்ரா கென்னடிக்கு மட்டும் நண்பரல்ல.

சட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவும் போதை பாதாள உலக சக்கரவர்த்தி சாம் கியன்சனாவுக்கும் மிகவும் வேண்டப்பட்டவன் ஃபிராங் சினட்ரா.

"ஃபிராங்! நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்."

"சொல்லு சாம். என்ன காரியம்?"

தனக்கு அருகில் இருந்த பிரபல இளம் நடிகை ஜூடித் காம்பெல் மீது பார்வையைத் திருப்பினான் சாம் சியன்சனா.

கச்சிதமான உடல். கவர்ச்சியான உதடுகள். காந்தங்களான கண்கள். பல்லாயிரம் ரசிகர்களின் கனவுத் தேவதை. சாம் சியன்சனாவின் காதல் தேவதை அவள்தான் ஜூடித் காம்பெல்.

ஜீடித் காம்பெல் மீது பார்வையைச் செலுத்தியபோதே பாதாள உலகச் சக்கரவத்திக்கு ஏக்கப் பெருமூச்சு வந்துவிட்டது.

பெருமூச்சை வெளியேற்றிவிட்டு ஃபிராங் சினட்ராவிடம் திரும்பினான்;

"ஃபிராங்! இவளை நீ கென்னடியிடம் அறிமுகம் செய்ய வேண்டும்"

ஃபிராங் முகத்தில் லேசான அதிர்ச்சி. அதனைப் புரிந்து கொண்டு சாம் சிரித்தான்.

"இறால் போடப் போகிறேன். ஆனால் இது அழகான இறால். என்ன செய்வது சுறா தேவைப்படுகிறதே! ஓ.கே. எப்போது அறிமுகப் படுத்துகிறாய்?"

"நாளைக்கே! ஜூடித் ஓகேயா?"

"இப்போதானாலும் அவள் ஓ.கே!"

□□

ஜூடித் அறிமுகம் செய்யப்பட்டாள் அமெரிக்கா ஜனாதிபதி கென்னடியிடம்.

கை குலுக்கும் போதே கென்னடி கனவு காணத் தொடங்கிவிட்டார்.

வெள்ளை மாளிகை கட்டிலறை நடிகை ஜீடித் காம்பெல்லின் உடலுக்கும் தஞ்சம் தந்தது.

அடிக்கடி தொலைபேசியில் பேசுவாள் ஜூடித்.

"ஜாக்குலின் போய்விட்டாள். அதனால்..."

"நான் வர வேண்டும். கேட்பதைத் தர வேண்டும்."

வாக்கியத்தை முடித்துவிட்டு மதுக் கிண்ணம் மறு முனையில் சிரிக்கும்.

1960 முதல் 1962 வரை ஜனாதிபதி மாளிகையில் பிரத்தியேக விருந்தாளியாக பருவவிருந்து படைத்துக் கொண்டிருந்தாள் ஜூடித்.

அமெரிக்க உளவு நிறுவனம் ஜூடித், பாதாள உலக சக்கரவத்தியின் காதலி என்று கண்டுபிடித்தது.

ஜனாதிபதியை எச்சரித்தது. "உண்மையாகவா? ஜீடித் சாமின் காதலியா?"

கென்னடி சந்தேகமாய் கேட்டார்.

உளவுப் பிரிவுத் தலைவர் ஜே.எட்கர் ஹூவர் உறுதியாகச் சொன்னார்.

"ஆம். உளவுத்துறை பொய் சொல்லாது. நூறுவீதம் நீங்கள் நம்பலாம்."

ஜூடித் காம்பெலுக்கு ஜனாதிபதி மாளிகைக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது.

ஜூடித் தடையால் வெகுண்டாள். 'விடுவோனா பார்' என்று திட்டம் வகுத்தாள்.

(தொடர்ந்து வரும்)

## தருவது — ரசிகன்

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✚ விந்தைகள்

## வயிறு வெடிக்குமா?

வயிறு வெடிக்குமா? வெடிக்கும் ஆனால், பலர் நினைப்பது போல ஏதோ பலூன் வெடிப்பது போல வெடிக்காது. வயிற்றுக்குள் உள்ள குடல் பகுதியில் கோளாறு ஏற்படும் போது தசை நார்கள் பலூன் போல ஊதிப்போய் வெடிக்கக்கூடும்.

இதுபோன்ற கோளாறு சிறுவர்களுக்கோ நடுத்தர வயதினருக்கோ வராது. மிகவும் வயதானவர்களுக்கு ஏற்படும் கோளாறு இது. வயது ஆக ஆக, உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். அது இல்லா விட்டால் இந்த நோய் வந்துவிடும். அதுவும் கோளாறு முற்றி வீக்கம் வெடிப்பது என்பது நூற்றுக்கு ஒரு சதவீதம் பேருக்கு வேண்டுமானால் ஏற்படலாம்.

இந்த கோளாறுக்கு பெயர் 'டைவர்டிகுலா' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். குடல் வால் பகுதியில் இருந்து மலக்குடல் வரை சுருண்டு சுருண்டு காணப்படும். குடல் பகுதி தசைச்சுவர்களில் தொய்வை ஏற்படுத்தும். இதற்குக் காரணம் பலவீனம் தான். உடலில் எதிர்ப்புச் சக்தி இருக்கும் வரை எந்தக் கோளாறும் ஏற்படாது. எதிர்ப்புச் சக்தி இழந்து விட்டால் தசைச் சுவர்கள் பலவீனமாகி இந்தக் கோளாறு ஏற்படுகிறது.

எண்பது வயதுக்கு மேல் உள்ளவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் இந்தக் கோளாறினால் பாதிக்கப்படுகின்றனர். இருந்தாலும், மோசமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குடல்வாலில் இருந்து மலக்குடல் வரையிலான பகுதிதான் பெருங்குடல். உணவு சத்துக்கள் பிரிக்கப்பட்டு உடலின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதும் கழிவுகள் இந்த குடல் பகுதியின் மலக்குடல் வழியாக வெளியேற்றப்படுகிறது.



இதனால், குடலின் எல்லாப் பகுதியும் முழு இயக்கத்தில் இருந்து கொண்டே இருக்கும். வயது ஆக ஆக, இந்த இயக்கத்தில் தளர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால் குடல் தசைச்சுவர்களில் பலவீனமான இடத்தில் லேசான வீக்கம் ஏற்படும். இந்த வீக்கமான பகுதி தசை சுவரின் தசைகளால் ஏற்பட்டு. அது பை போல தொங்கிக் கொண்டிருக்கும்.

குடல் வழியாக கழிவுகள் போகும் போதும், வெளியேறும் போதும் இந்தப் பையில் சேர்ந்து விடுகிறது. இதில் இருக்கும் பாக்டீரியா மூலம் வீக்கம் மோசமான நிலைக்கு உள்ளாகிறது. சீழ் பிடிக்கவும் வாய்ப்புண்டு.

இப்படி கழிவுகள் அதிகமாக சேர்ந்து இந்த வீங்கிய பகுதி பெரிதாகும் போது சில சமயம் அழுத்தம் அதிகமாகி, இது வெடிக்கவும் செய்யும். அப்போது கழிவுகள் வயிற்றின் அடிப்பாகத்தில் பரவும். இப்படி பரவும் போது வீக்கம் பரவவும் வாய்ப்பு உண்டு. இதற்கு அடுத்த கட்டம் இரத்தப் போக்கும் ஏற்படும்.

இதெல்லாம் நாள் கணக்கில், மாதக்கணக்கில் கூட படிப்படியாக மோசமாக வாய்ப்புள்ளது. திடீர் என ஏற்படாது. அதனால், அந்த நிலை ஏற்படாமல் உடனடியாக கவனித்து சரி செய்து விடலாம்.

பாக்டீரியா தொற்றுக் கிருமிகளால் குடல் பகுதிகளில் ஆங்காங்கு கட்டியும், பிளவையும் ஏற்படுத்தி குடல் புண் வரவும் கூடும். இது டாக்டரின் பரிசோதனையில் கண்டு பிடித்து விடலாம். ஒரே ஒரு அறிகுறி-குடல் பகுதி சில மோசமாக பாதிக்கப்பட்டால் சுருங்கி குடல் பாதை குறுகிவிடும். அப்போது உணவு உட்கொள்ளவோ, ஜீரணம் ஆவதோ பாதிக்கப்படும். உணவை விழுங்குவதுகூட சிரமமாக இருக்கும். அடி வயிற்றில் வலி ஏற்படும். அல்சர் போன்ற எரிச்சலும் உருவாகும்.

சிலருக்கு ஜூரம், குளிர், வாய்கசப்பு, வாந்தி போன்ற அறிகுறிகளும் ஏற்படும்.

இந்த கோளாறு ஆரம்ப கட்டமாக இருக்கும் போது டாக்டர் சுலபமாக தீர்த்து விடுவார். கொஞ்சம் மோசமான கோளாறாக இருந்தால், மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதுடன் 24மணி நேரமும் சிலநாள் வரை திரவ உணவுதான் சாப்பிட வேண்டும். அப்போது தான் வீக்கம் குறையும். மிக மோசமான கோளாறுக்கு சத்திர சிகிச்சை தான் ஒரே வழி.

## வியர்வை நாற்றத்தை உடனே விரட்டலாம்.

வியர்வை என்பது என்ன? வெறும் தண்ணீர் உப்பு கலவைதான். வியர்வை வருவது நமது உடல் ஆரோக்கியமாக உள்ளதன் அறிகுறி. உடலில் இருந்து வெளியேறும் வியர்வை தோலின் மேற்பரப்பில் வரும்போது தோலில் உள்ள கழிவுப்பொருள்கள், பாக்டீரியா கழிவுகள் சேர்கின்றன. தோலினுள்ளே உள்ள சுரப்பிகள்தான் வியர்வையை சுரந்து உடலின் வெப்பத்தை சீராக்குகின்றன.

வியர்வை நாற்றம் போக தினமும் குளித்து உடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். காக்கா குளியல் இல்லாமல் உடல் உறுப்புகள் அனைத்தையும் முழுமையாக கழுவிசுத்தம் செய்ய வேண்டும். இப்படி செய்வதால் உடலில் உள்ள பாக்டீரியா கழிவுகள், சுற்றுச்சூழல் அசுத்தம் ஆகியவை தோலில் இருந்து அகற்றப்படும். அப்படி அகற்றப்பட்ட பின் வியர்வை வரும்போது நாற்றமெடுக்க வாய்ப்பு இல்லை.

இப்படி சுத்தமாக வைத்திருந்தாலும் சிறிதளவு நாற்றம் வர வாய்ப்புண்டு. இதைத்தடுக்க சிலவகை மருத்துவ ரீதியான சென்ட் உபயோகிக்கலாம்.

சென்ட் அல்லது நறுமண சோப்புகள் பயன்படுத்தும்போது கவனம் தேவை. எந்த பகுதியில் சென்ட் போட்டாலும் அந்த பகுதியை சுத்தமாக கழுவ வேண்டும். அக்குள் பகுதியில் சுத்தப்படுத்திய பின்னர்தான் சென்ட்டை பயன்படுத்த வேண்டும்.

காலையில் குளித்த பின்னும், வெளியில் கிளம்பும்போதும் சென்ட் பயன்படுத்தலாம். இரசாயனம் கலந்தவை




என்பதால் உடலின் எல்லா பகுதிகளிலும் சென்ட் பயன்படுத்தக் கூடாது.

மருத்துவ ரீதியான கலவைகளும் வியர்வை போக்க உள்ளன. டாக்டரின் ஆலோசனைப்படி இதை பயன்படுத்தலாம். சிலவகை கிருமிநாசினி மருந்தை நாமாக பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக குழந்தைகள், பெண்கள் நறுமண சென்ட் பயன்படுத்தும்போது கவனம் தேவை. சொறி, சிரங்கு போன்ற சில கோளாறுகளை ஏற்படுத்தும் கண்ட கண்ட சென்ட்கள் மார்க்கெட்டில் உள்ளன. அவற்றை கவனமாகப் பார்த்து தவிர்த்து விடவும்.

சென்ட் போட்டும் வியர்வை அதிகமாக உள்ளது என்றால் உடனே டாக்டரை பார்ப்பது நல்லது.

# தொங்குது பார் 'ட்ரெயிலரு'





தவறி விழும்போது மனிதர்களால் மட்டும்தான் எதையாவது பற்றிப் பிடித்து தொங்க முடியுமா? என்ன ஆச்சரியம்! மேம்பால வீதியில் சென்று கொண்டிருந்த நீண்ட 'ட்ரக்டர் ட்ரெயிலர்' வண்டி, எஞ்ஜின் கோளாறினால் தடம்புரண்டு தொங்கிக் கொண்டுள்ளது. அதிர்ஷ்டவசமாக சாரதி சிறுகாயங்களுடன் தப்பிக் கொண்டார். கீழ் வீதியில் பயணித்தோருக்கும் ஒருவித ஆபத்தையும் விளைவிக்கவில்லை. தொங்காமல் நேராக விழுந்திருந்தால் பலர் தொலைந்திருப்பார்கள். கனடாவின் 'ரொரண்டோ' நெடுஞ்சாலையொன்றில் இவ்விபத்து நிகழ்ந்தது. 'ட்ரெயிலரானது பாலத்தின் மேலே'.

# தகவல் பெட்டி

## கட்டுக்கட்டாய்ச் 'சீட்டு' கட்டி முடித்தார் வீடு!

23000 துருப்பாட்டச் சீட்டுக்களால் 70 மணி நேரத்தை விரயம் செய்து 16 அடி 01 அங்குல உயர வீடு கட்டி உலக சாதனை படைத்தார் 20 வயது பிரைன்பேர்க். அமெரிக்காவின் பொஸ்ரன் நகர உலக வர்த்தக மையத்தில் இச்சாதனை நிகழ்த்தப் பட்டது. பொன்னான நேரத்தை இழந்தாலும் புகழ் சேர்த்துவிட்டார் மனிதர். பாராட்டுக்களும் மலைபோல் குவிந்துவிட்டனவாம். அவற்றை வைத்தும் வீடு கட்டாவிட்டால் சரிதான்.




# சிறைக் கதவம் திறந்தது

கறுப்பழகியை பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டால் சிறைக்குள் பூட்டப்பட்டார் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன். தற்போது தண்டனையை முடித்துவிட்டு வெளியே வந்துவிட்டார்.

சிறைக்குள் மைக் டைசன் செய்த மூன்று முக்கிய காரியங்கள்,

01. இஸ்லாம் மதத்தை தழுவியது.
02. மருத்துவக்கல்லூரி மாணவி மோனிகாவை சிறைக்கு அழைத்து திருமணம் செய்தது.
03. தனது உடலை திடகாத்திரமாக வைத்துக் கொண்டது.

மீண்டும் களத்தில் குதிக்கப்போகும் மைக் டைசன் தனது குரு டொங்கிங்கினால் சிறையிலிருந்து அழைத்து வரப்படும் காட்சிதான் படத்தில்.



நம்மூரில் தண்ணீர்தான் குழாய் வழியே வீடு தேடிவரும். மேலைத் தேச நாடுகள் பலவற்றில் சமையலறை வாயுவும் குழாய் வழியாக சமையலறைக்கு வந்து சேரும். சமையலின் நடுவே 'காஸ்' தீர்ந்துவிட்டதே என்று ஓடித்திரியும் தேவை இருக்காது.

அத்தகைய 'வாயுக்குழாய்' ஒன்றின் முனையை விலைகுறைந்த மூடி போட்டு அடைத்துவிட்டார் ஒரு 'மெக்கானிக்'.

வாயுக்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால் 750,000 டொலர் பெறுமதியான மாபெரும் கட்டிடம் நாசம். உள்ளே இருந்த தளபாடங்களும் காலி! தப்பு சிறிது. இழப்பு பெரிது!

நான்கே 'டொலர்' பெறுமதியான பிளாஸ்ரிக் மூடியால் 'காஸ்லைன்' குழாயை அடைத்ததால் வந்த விளைவு.

# சின்னதாய் ஒரு தப்பு



98

# தாய்லாந்தில் ராசய்யா

'ராசய்யா' படத்தின் படப்பிடிப்பு முடிந்து திரையிட தயாராகும் போது ஒரு சந்தேகம். 'பிரபு தேவா' நடித்த காதலன் படம் கலக்கிய கலக்கலை 'ராசய்யா' தரமுடியுமா. ரசிகர்கள் பெரிதாக எதிர்பார்க்களே, என்ன செய்யலாம்? உடனே 30 விமானரிக்கற்றுக்களை தாய்லாந்துக்கு செல்ல பதிவு செய்து விட்டனர். பிரபுதேவா, ரோஜா உட்பட முப்பது கலைஞர்கள் தாய்லாந்துக்கு பறந்து போய் ஆடிப்பாடி புதிய காட்சிகள் எடுக்கப்பட்டன. செலவு பற்றி கவலையில்லை. திருப்திதான் முக்கியம் என்கிறார்கள் 'ராசய்யா' படத் தயாரிப்பாளர்கள்.



பாண்டியராஜன்-ஊர்வசி படம்-தாய்க்குலமே தாய்க்குலமே

## மூக்கை சிந்தி, துணியை குறைத்து...

'கருத்தம்மா' பட நாயகி ராஜஸ்ரீ தனக்கு ஏன் புதிய வாய்ப்புகள் வரவில்லை என்று கடுமையாக யோசித்துப் பார்த்தார். விளைவு: ஓடினார் தனியார் மருத்துவமனைக்கு. தனது மூக்கை பினாமிடிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். அத்தோடு துணியைக் குறைத்து படு கவர்ச்சியாகப் போஸ் கொடுத்து எடுத்த புகைப்படங்களையும் 'நன்றாகப் பார்த்து நாடி வருக' என்ற ரீதியில் தயாரிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கிறார்.

முகப்பில் பூஜாபட் பிரசாந்த்

## பிரியாவுக்கு வாய்ப்பு

கமல் தெலுங்கில் தயாரிக்கும் படத்தில் பிரியாராமன் கதாநாயகியாக நடிக்கிறார். ஏற்கெனவே ரஜனி தயாரித்த 'வள்ளி' படத்தில்தான் பிரியா ராமன் அறிமுக மானார். இப்போது கமலின் தயாரிப்பிலும் நடிக்கிறார். அர்ஜுனுக்கு ஜோடியாகத்தான் பிரியாராமன் நடிக்கப்போகிறார்.





## அதிக சூடு, கொஞ்சம் சிரிப்பு!

'செங்கோட்டை' படத்தில் அர்ஜுன்-ரம்பா காதல் காட்சிகள் தாஜ்மஹாலின் பின்னணியில் எடுக்கப்பட்டன. படப்பிடிப்பு நடந்தபோது கொளுத்தும் வெய்யில், கொதிக்கும் மணல். ரம்பா மணலில் மல்லாக்கப் படுக்க வேண்டும். படுத்தார் வெய்யில் சூடு முதுகை வாட்டி எடுத்த போது கமராவுக்காக கஷ்டப்பட்டு சிரித்து நடித்தாராம்.



## ஆட்டோ இ...

'பாலம்', 'புதிய காற்று', 'மூன்றாம்படி' ... ஆகிய படங்களை இயக்கியவர் கார்வண்ண... ஆட்டோவில்தான். "இந்த ஆட்டோ எம்.ஜி... பெருமையுடன் கூறுகிறார். படித்த பட்ட... கிடைக்காமல் ஆட்டோ ஓட்டி சம்பாதித்... எம்.ஜி.ஆர். கொடுத்த பரிசு அது.

## ஒரு தரம் ஒரே தரம்

தான் இயக்கும் படங்களில் ஒரு காட்சியிலாவது தலையைக் காட்டாவிட்டால் கே.எஸ்.ரவிக்குமாருக்கு திருப்தி இருக்காது. தற்போது அவரது இயக்கத்தில் ரஜினி-மீனா நடிக்கும் 'முத்து' படத்திலும் எப்படியாவது ஒரு காட்சியிலாவது தலையைக் காட்டும் திட்டத்தில் இருக்கிறாராம்.

* ரஜினி, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்கும் படத்திற்கு முதலில் 'முத்துமணி' எனப் பெயரிடத் தீர்மானித்தனர். பின்னர் 'வேலன்' என்று பெயரிட்டனர். தற்போது அதையும் மாற்றி 'முத்து' என்று பெயரிட்டுள்ளனர்.

ராஜாரவீந்தர்-அனுஜா படம்-புதல்வன்

## ஓடினார் - ...

ஓட்டப் பந்தய வீராங்கனையாக இருந்தவர் ... விட்டு சினிமா உலகுக்கு ஓடிவந்தார். 'அஸ்வி... நாயகியாக நடித்தார்.

அஸ்வினிக்கும் இயக்குநர் மவுலிக்கும் இடை... வந்தன.

இப்போது அஸ்வினி திருமணம் செய்து ... ஓடிவிட்டார்.

திருமணத்திற்கு முன்னர் அஸ்வினி க... தெலுங்குப் படம் 100 நாளைத் தாண்டி... ஆடாக 'திருட்டு ராணி 420' என்ற பெயரி... செய்து வருகிறார்கள். மே மாதத்தில் தி...

## மினி சினி

* பாண்டியராஜன் நடிக்கும் 'கம்மா இருங்க மச்சான்' படத்தைத் தயாரித்து வரும் ஜோதி பிரசாத, 'ஐ லவ் யூ' என்ற புதிய படத்தைத் தயாரிக்கவுள்ளார். கதாநாயகனாக ராம்கி நடிக்கிறார்.

* விஜயசாந்தி தெலுங்கில் 'அடவிராணி'(காட்டுராணி) என்ற படத்தில் நடிக்கவுள்ளார். ஆபிரிக்க காடுகளில் படமாக்கப்படவுள்ள இந்தப் படத்தை பிரபல தெலுங்கு இயக்குநர் ஏ.கோதாண்டராமரெட்டி இயக்குகிறார்.

* 'தாய்மாமன்' படத்தை அடுத்து குருதனபால் இயக்கத்தில் சத்தியராஜ் நடிக்கும் படத்திற்கு 'மாமன் மகள்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை 'கட்டுமரக்காரன்' படத்தை தயாரித்த ஏ.ஜி.சுப்ரமணியம் தயாரிக்கிறார்.

* மம்முட்டி-சுகன்யா மலையாளத்தில் ஜோடியாக நடித்த 'சாகரமே சாட்சி' படத்தை இயக்கிய சிபிமலையில், சுகன்யா கதாநாயகியாக நடிக்கும் புதிய மலையாளப்படமொன்றை இயக்கவிருக்கிறார்.

* தெலுங்கில் சிரஞ்சீவி நடித்த 'கரானா மொகுடு' என்ற படம் தமிழில் 'அர்ஜுன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வரவுள்ளது. சிரஞ்சீவிக்கு ஜோடியாக நக்மா-வாணி விஸ்வநாத் நடித்துள்ள இந்தப் படம் மலையாளத்தில் 'ஏ ஹீரோ' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

* விஜயகாந்தின் ஜோடியாக 'திருமூர்த்தி' படத்தில் அறிமுகமாகியுள்ள ரவாலியின் சகோதரி ஹரிதா 'மூக்குத்தி காசி'யில் சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.

* ஆர்.வி.உதயகுமாரின் இயக்கத்தில் கார்த்திக் நடித்து வரும் 'நந்தவனத் தெரு' படத்தில் டி.ஏ.ரஞ்சித் என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். இவர் ஒரு திரைப்படக் கல்லூரி மாணவர்.

* இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் மனைவி ... நடிகர் ரகுமானின் மனைவி ... உடன் பிறந்த சகோதரிகள்.

## யந்தூரும்...

குற்றவாளிகளை சட்டம் தப்பவிடும்போது ... அதைப் போல அண்ணன் தம்பியும் ... இளம் பெண், குற்றவாளிகளை பந்தாடு... படத்தின் பெயர் 'ஜட்ஜமெண்ட்'. கதாநா... விஜயசாந்தியேதான். தெலுங்கில் வெற்றி... அதே பெயரில் மொழிமாற்றம் செய்யப்...



## குயிலி எங்கே?

குயிலி என்றொரு நடிகை இருந்தாரல்லவா? நாயகன் படத்தில் 'நிலா அது வானத்து மேலே' பாடலுக்கு ஆடி அசத்தியவர். அவர் இப்போது திரைப்பட விநியோகத் தொழிலில் இறங்கிவிட்டார்.

தெலுங்கு, ஒரியா என்று பல மொழிகளில் புகுந்து துணியைக் குறைத்தும் மார்க்கெட் உயரவில்லை.

அதனால் மொழிமாற்றும் பட விநியோகத்துறையில் பொத்தொன்று குதித்து விட்டார்.

'ஒரு காலத்தில் கதாநாயகியாக மட்டுமே நடிப்பேன்', என்று கூறியவரின் கதியைப் பார்த்தீர்களா?

பாவம் குயிலி.

### கஸ்தூர கவர்ச்சி

'கோலங்கள்' படத்தில் ஜெயராம்-குஷ்புவுடன் கஸ்தூரியும் நடிக்கிறார். அல்வா அட்டகாசமான கவர்ச்சி போஸ் எல்லாம் கொடுத்து நடித்துள்ளாராம். வேறு வழி?



ராஜ்கிரண்-சங்கீதா படம்-எல்லாமே என் ராசாதான்



அருண்பாண்டியன் படம்-துறைமுகம்

அட ஜிக்கு மாக்கு
வேம்புக் கையழகா
பச்சை மிளகாய் உருவழகா
அட ஜிக்கு மாக்கு ஜிக்கு.
...ர்த்தம் சொல்வோருக்கு
...யிரம் செல்லாக்காசு
பரிசு... கிடைக்கும்.

# ‘ர்ாசிக்காரன்’ தயாராகிறான்

‘வசந்த மாளிகை’ போன்ற தமிழ் படங்கள் உட்பட தெலுங்கு, கன்னட படங்கள் பலவற்றை பிரம்மாண்டமாகத் தயாரித்தவர் டி.ராமநாயுடு.

கடந்த மூன்று வருட காலமாக தமிழ் பட தயாரிப்பை நிறுத்திவைத்திருந்த டி.ராமநாயுடு மீண்டும் தமிழ் பட தயாரிப்பில் இறங்கியிருக்கிறார்.

வி.சி.குகநாதன் இயக்கத்தில சித்திரை புத்தாண்டு தினத்தில் புதிய படத்தின் துவக்க விழா ஆரம்பமாகிறது.

‘ராசிக்காரன்’ என்று படத்திற்கு பெயரிட்டுள்ளார்கள்.

கதாநாயகன் ரஞ்சித். கதாநாயகி கனகா.

பாடல்கள், மு.மேத்தா, வைரமுத்து. இசை, சந்திரபோஸ்.

# நடந்த கதை திரைக்கதையாகிறது.

இந்தியாவில் கல்கத்தா நகரில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை வைத்து கதை உருவாக்கி படம் எடுக்கிறார்கள். ரகுமான்-நிரோஷா ஜோடி நடிக்கும் அந்தப் படத்தின் பெயர் ‘வசந்தம்’. சினிமா நடிகையாக நடிக்கிறார் நிரோஷா. நகைச்சுவை நடிகராக ‘ரவிமாறன்’ என்னும் புது முகமும் அறிமுகமாகிறது.

# காதல்+திகில்=டெலிபோன்மணி

‘பொன்விலங்கு’, ‘சிந்து நதிப்பூ’ ஆகிய படங்களில் நடித்தவர் ரஞ்சித். தற்போது ‘ராசிக்காரன்’ படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். ரஞ்சித் நடிக்கும் மற்றொரு படத்தின் பெயர் ‘டெலிபோன் மணி’. ரஞ்சித்தின் ஜோடியாக அஹானா நடிக்கிறார். கொஞ்சம் திகில், கொஞ்சம் காதல் இரண்டும் கலந்து கதையை உருவாக்கியுள்ளார் சமன்ராஜ். படத்தை இயக்குவதும் சமன்ராஜ்தான். எனக்கு இது புது அனுபவம். ஆனாலும் திருப்தியாக செய்வேன் என்கிறார் தன்நம்பிக்கையோடு.

# பாடல்கள் 9

விஜய் நடித்துவரும் படங்களில் ஒன்று ‘சந்திரலேகா’. விஜயகுமாரின் மகள் வனிதா கதாநாயகியாக நடிக்கிறார்.

படத்தில் பாடல்கள்தான் பிரமாதம். 9 பாடல்கள் இடம்பெறுகின்றன. கவிட்சர்லாந்து நாட்டிலும் படப்பிடிப்பு நடைபெறவுள்ளது. இசை, இளையராஜா. பாடல்கள் வாலி, நம்பிராஜ்.



பிரபுதேவா-ரோஜா



அர்ஜுன்-ரம்பா
படம்-செங்கோட்டை

# அரவிந்தசாமிக்கு மவுசு

‘பம்பாய்’ படத்தின் பரபரப்பு அதன் கதாநாயகன் அரவிந்தசாமிக்கு மவுசை அதிகரிக்கச் செய்துள்ளது. விநியோகஸ்தர்கள் தயாரிப்பாளர்கள் அரவிந்தசாமி தெலுங்கில் நடித்த படம் ஒன்றை தேடிப்பிடித்து தமிழில் மொழி மாற்றம் செய்கிறார்கள். மலை ஏறும் வீரனாக அரவிந்தசாமி நடித்துள்ளார். அவருக்கு ஜோடி நக்மா. இசை மரகதமணி.

‘நக்மா’ நடித்த தெலுங்குப் படங்களும் தமிழில் வேகமாக மொழிமாற்றப்பட்டு வருகின்றன.

மார்க்கெட் உள்ள போதே மொழி மாற்றி வெளியிட்டால்தானே நாலு காசு சம்பாதிக்கமுடியும்.

# ...இயக்குநர்

...மீபத்தில் திரைக்கு வந்த ‘தொண்டன்’ ...ணன். இவர் படப்பிடிப்புக்கு வருவது ...ஆர். பரிசாகத் தந்தது’ என்று ...தாரியாக சார்வண்ணன் வேலை ...ந்தவர். அதனை அறிந்த அமரர்

# ...ஓடுகிறது

...அல்லிநகர் நாச்சப்பா. பந்தய களத்தை ...’ உட்பட பல படங்களில் அடி தடி

...டையே ‘ஒரு இது’ என்று கிசு கிசுக்கள்

...கொண்டு சினிமா உலகை விட்டும்

...கடசியாக நடித்த ‘மிஸ் 420’ என்ற ... ஓடிக்கொண்டிருக்கிறது. கூட்டோடு ...ல் அதனை தமிழில் மொழி மாற்றம் ...திரைக்கு வரக்கூடும்.

# ...மாலை

...அடி, உதை கொடுக்க வேண்டும். ...தவமாட்டார்கள் என்றும் நம்பும் ...றாள். கதைச் சுருக்கம் இதுதான். ...வேறு யாராக இருக்க முடியும். ...பெற்ற ‘ஜட்ஜ்மெண்ட்’ தமிழிலும் ...டுள்ளது.

## கிசு-கிசு-நியூஸ்

# தூக்கத்தில் புலம்பல்

‘சங்க’ நடிகை தூக்கத்தில் புலம்புகிறாராம். சாமியார் ஒருவரிடம் அழைத்துப் போகச் சொல்லி சிலர் ஆலோசனை சொன்னார்களாம். ‘பிரேமன்’ ஸ்டைலில் சாமியார் ஏதாவது செய்ய நானை அது வெளியே தெரிந்தால் வம்பாகிவிடும் என்று அந்த ஆலோசனையை ‘சங்க’ நடிகையின் தாய்க்குலம் நிராகரித்து விட்டதாம். இளம் கதாநாயகன் ஒருவரது நினைவில்தான் நடிகை தூக்கத்திலும் புலம்புகிறார் என்று தகவல்.

# வீட்டிலே பிரச்சனை

வீர மன்னனின் பெயரைக் கொண்ட அரிவான் ராசி நடிகருக்கும் நடிகை அனுஷாவுக்கும் இடையே நல்ல புரிந்துணர்வாம். தனது படங்களில் நடிகையை சிபாரிசு செய்கிறாராம் அரிவான் ராசிக்காரன். இது அவரது இல்லத்து அரசிக்கு தெரியவர பெரிய பிரச்சனையாகிவிட்டதாம்.

# சவாலே சமாளி

பாலசந்தர் பிரபுவை வைத்து ‘டூயட்’ எடுத்தார். எதிர்பார்த்தளவு கூட்டணி ஜமாய்க்கவில்லை. இப்போது சிவாஜி-பிரபு-பாரதிராஜா கூட்டணி ‘பசும்பொன்’ படத்தில் இணைந்திருக்கிறது. ரசிகர்களது எதிர்பார்ப்பை ஈடுசெய்தே தீருவது என்று சவாலாகக் கருதி தீவிரமாக உழைக்கிறார் பாரதிராஜா. சிவாஜிக்கு சிறிய ‘ஒப்பரேசன்’ செய்யப்பட்டுள்ளதால் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை கடைசியாக எடுக்கலாம் என்றிருக்கிறார் பாரதிராஜா.

# வெங்கடேஷ் இந்தியில்

தெலுங்கில் ‘எமலீலா’ என்ற பெயரில் வெற்றி பெற்ற படம் இந்தியில் ‘தக்தர் வாலா’ என்ற பெயரில் தயாராகி வருகிறது. இரண்டிலும் கதாநாயகன் வெங்கடேஸ். வெங்கடேசுக்கு இந்தியில் இது இரண்டாவது படம். ஜோடி. ரவீனா டாண்டன். ‘எமலீலா’ படம் தமிழில் கார்த்திக்-சங்கவி ஜோடி நடிக்க ‘லக்கிமேன்’ என்ற பெயரில தயாராகவுள்ளது.

# சூரியநாயகனில் மம்முட்டி

தமிழ்-தெலுங்கு இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் தயாராகும் படம் ‘சூரிய நாயகன்’. மலையாள சூப்பர் நடிகர் மம்முட்டி பொலிஸ் உயர் அதிகாரியாக நடிக்கிறார். சுமன், நக்மா ஆகியோரோடு காட்டுவாசியாக நாசர் நடிக்கிறார். இசை: மரகதமணி. மே மாதம் படத்தை திரையிடத் திட்டமிட்டு படப்பிடிப்பு சூடு பிடித்திருக்கிறது.







வெங்கடேஷ்-ரவீனாடாண்டன்
படம்-தக்தர் வாலா

# எதற்கும் துணிந்த பூஜா

‘பூஜாபட்’ நடிகைகளில் பரபரப்பை ஏற்படுத்தி வருபவர்.

“ஆண்களோடு பழக மட்டுமல்ல உதைக்கவும் தெரியும்”, என்று அவர் கொடுத்த பேட்டி பல தயாரிப்பாளர்களை மட்டும் அல்ல நடிகர்கள் சிலரையும் நடுங்க வைத்திருக்கிறதாம். “என் விருப்பம் இல்லாமல் எந்த ஆணும் என்னை‘டச்’ பண்ணமுடியாது. என்னை தொடத்தக்க ஆண்மகன் முதலில் என் மனதைத் தொடவேண்டும்.” என்று பூஜாபட் பேட்டி கொடுத்து கலக்கியிருக்கிறார்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

## உடலுக்கு ஏற்ற உடைத் தெரிவு!

### ஆடை சிறக்க, அழகு ஜொலிக்கும்

பெண்கள் தங்கள் உடல் நிறத்திற்கு ஏற்ற வர்ணத்தில் உடை உடுத்தப்பழகிக் கொண்டால் மிகச் சாதாரண தோற்றமுடைய பெண்களும் கட்டழகிகளாகக் காட்சி தர முடியும்.

அதிகக் கறுப்பு நிறமுடைய பெண்கள் முற்றிலும் வெண்மை நிறமுடைய உடைகளை அணியக் கூடாது. அது கறுப்பு நிறத்தை அதிகப் படுத்திக் காண்பிக்கும்.

இளநீலம், ரோஸ் நிறம், ஒரேஞ்ச் போன்ற இலேசான வர்ணங்களைக் கொண்ட உடைகளை அணிவது, கறுப்பு நிறமுடைய பெண்களின் தோற்றத்தில் அழகைச் சேர்க்கும்.

மாநிறம் கொண்ட பெண்கள் தூயவெள்ளை ஆடைகளை அணிந்தால்



எடுப்பாகவும், எழிலாகவும் இருக்கும்.

நல்ல சிவப்பு நிறமுடைய பெண்கள் அழுத்தமான வர்ணத்தில் உடைகள் உடுத்தினால் நன்றாக இருக்கும்.

பெண்கள் எத்தகைய தோற்ற முடையவர்களாக இருந்தாலும் மக்கள் திரளாக வரக்கூடிய திருமண விழாக்கள், கோயில் போன்ற இடங்களுக்குச் செல்லும் போது கண்களைப் பறிக்கும் விதத்தில் பகட்டாக உடையணியாமல் இருப்பது நல்லது. அது மனோதத்துவ ரீதியில் குறைவான மதிப்பீட்டைப் பிறருக்குத் தோற்றுவிக்கும்.

மிகக்குறைவான உடைகளை உடல் அங்கங்கள் தெரிய அணிவதை விட உடல் முழுவதும் மூடிய உடை அணிவது ஒரு கௌரவமான மனநிலையைப் பிறருக்கு உண்டாக்கும். உடல் உறுப்புக்கள் தெரியும் விதத்தில் உடையணியும்போது காண்போருக்கு சட்டென ஒரு கவர்ச்சியைத் தோற்றுவிக்கக் கூடும். ஆனால் அந்தக் கவர்ச்சி சீக்கிரம் சலிப்பாக மாறிவிடும்.

மிகவும் உயரமான தோற்றமுடைய பெண்கள் அகலக்கரையும், படுக்கை கோடுகளும் கொண்ட அழுத்தமான வர்ணமுடைய சேலைகளை உடுத்தினால் உயரம் குறைவாக இருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கும்.

சேலையின் வர்ணத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வர்ணமுடைய பிளவுஸ் அணிந்தாலும் உயரத் தோற்றத்தைக் குறைத்துக் காட்டும்.

மொடேர்ன் உடைகளை உடுத்தும் பருமனான பெண்கள் கொசுவம் உள்ள கொலர், லூசாகத் தைத்த உடைகள், அகலப் பூக்களைப் போட்ட காற்சட்டை ஆகியவை களைத் தேர்ந்தெடுத்து அணியக் கூடாது. அவை தோற்றத்தை மேலும் பருமனாகக் காண்பிக்கும்.

நவீன பாணியில் உடுத்தும் பெண்கள் நேர்க்கோடுகளைக் கொண்ட உடைகளை அணிந்தால் உயரத்தைக் குறைத்துக் காண்பிக்கும்.

உங்கள் உடல் தோற்றம் மிக உயரமாக இருந்து, குதிகால் உயர்ந்த பாத அணி அணிவதைப் பழக்கமாக்கிக் கொண்டவராக இருந்தால், பாத அணி வெளியில் தெரியாத வண்ணம் புடவையைத் தழைய அணிந்தால் உயரம் தெரியாது.

சிறு சிறு புள்ளிகள், சிறு அளவில் பூக்கள் அச்சிடப்பட்ட உடைகளை அணிந்தாலும் உயரத் தோற்றத்தைக் குறைத்துக் காண்பிக்கும்.

## தையல் இயந்திரம் இருக்கிறதா?


### தவறாமல் இதைப்படியுங்கள் முதலில்!

தையல் இயந்திரத்தை தூசி சேரவிடாமல் அடிக்கடி துணியால் துடைக்க வேண்டும். உபயோகிக்காத சமயங்களில் மூடியே வைக்க வேண்டும்.

எண்ணெய் விடும்போது நூல், ஊசி, பொபின், பொபின் உறை இவற்றை அகற்றி விட வேண்டும்.

கால் மெஷினுக்கு பெல்ட்டை சக்கரத்திலிருந்து கழற்றி விட்டு பின்பு உள்பாகங்களில் எண்ணெய் விட வேண்டும்.

அடிக்கடி தையல் இயந்திரத்திற்கு எண்ணெய் விட வேண்டும். தொடர்ந்து உபயோகத்திலிருக்கும் மெஷினுக்கு வாரம் ஒரு முறையும், அதிக உபயோகம் இல்லாத மெஷினுக்கு மாதம் ஒரு முறையும் எண்ணெய் விடுவது நல்லது.



ஒரு சிறு பிரஷ் அல்லது பல்துலக்கும் பிரஷ் கொண்டு இடுக்குகளில் அகப்பட்டிருக்கும் நூல்துண்டுகள், தூசிகள் முதலியவற்றை அகற்றலாம்.

பொபினில் நூல் சுற்றும் போது ஊசி மேலும், கீழும் நகராதவாறு செய்துவிட்டுப் பிறகுதான் நூல் சுற்ற வேண்டும். இல்லாவிடில் ஊசி உடைந்துவிடும்.

தைத்து முடித்த பின்பு துணியைக் கையால் இழுத்து விடாதீர்கள். இதனால் தையல் அறுந்து போகலாம். நூலைக் கத்தரித்து விட்டுப் பிறகு துணியை எடுக்கவும்.

தையல் சரியாக விழுகிறதா? என்று பரீட்சை செய்யும் போது எப்போதும் இரட்டையாக மடித்த துணியின் மீது தைத்துப்பாருங்கள், ஒற்றைத் துணியில் தைத்தால், தையல் சரியாக விழுகிறதா? என்று சோதித்துப் பார்ப்பது கஷ்டம்

## துணிகளைத் துவைப்பது எப்படி?

துணிகளைத் துவைக்க ஆரம்பிக்கும் முன் சில அடிப்படை வேலைகளைச் செய்து கொண்டால் துணிகளை இலகுவாகத் துவைக்கலாம். பாதுகாப்புடன் நீண்ட நாள் உழைக்கவும் வைக்கலாம்.

1. ஆடைகள் பல வர்ணங்களை உடையன. எனவே வெள்ளைத் துணிகளை முதலில் தனியே பிரித்துக்கொள்ளவும். மீதியுள்ள வர்ணத்துணிகளைத் தனியே பிரித்துக் கொள்ளவும். சாயம் போகும் துணிகளை அவற்றிலிருந்து பிரித்துக் கொள்ளவும்.
2. இவை மூன்றையும் வெவ்வேறு வாளிகளில் தேவைப்படும் அளவு தண்ணீரை ஊற்றி ஊறப்போடவும்.
3. இத்துணிகள் குறைந்த பட்சம் 15 நிமிடங்கள் தண்ணீரில் ஊற வேண்டும்.
4. தண்ணீரில் துணிகளை நனைப்பதற்கு முன்னர் சிறுவர்கள், ஆண்களின் உடைகளில் உள்ள பொக்கட்டுக்களைச் சோதனையிட வேண்டும். இவற்றுள் பிளேட், ஊசி போன்றவைகள் இருக்கலாம்.
5. எந்தத் துணியாவது கிழிந்திருந்தால்



அதனை முதலில் தைத்து விட வேண்டும். ஏனென்றால் தைக்கப்படாத துணிகளின் கிழிசல் துவைக்கும் போது பெரிதாகி விடக்கூடும்.


6. இதன்பிறகு ஊற வைக்கப்பட்டுள்ள துணிகளை தனித்தனியே எடுத்து சலவைத்தூள் போட்டு ஒரு மணிநேரம் ஊறவைத்து துவைக்கலாம். சவர்க்காரம் ஆயின் அப்படியே துவைக்கலாம்.

## வீட்டுக்குறிப்புகள்



தங்கம், வெள்ளி நகைகளை சவர்க்காரத் தண்ணீரில் சுத்தம் செய்வோம். அதுபோல் கல் பதித்த நகைகளைச் சுத்தம் செய்ய வேண்டுமானால், மென்மையான துணியை எடுத்து ஒலிவ் எண்ணெயில் நனைத்து சுத்தம் செய்யவும். பிறகு, பட்டுத்துணி கொண்டு நகைகளைச் சுத்தம் செய்தால் இப்போதுதான் வாங்கியது போல் ஜொலிக்கும்.

* * *



உங்கள் வீட்டுச் சமையலறையில் சுவர்களில் புகை படிந்து, சுவர் பொலிவிழந்து காணப் படுகிறதா? மோல்ட் வினிகரை சுவர்களில் தெய்த்து விட்டுப் பிறகு ஒரு துணியில் தண்ணீர் நனைத்து சுவர்களைத் துடைத்தால் சுவர்கள் பளிச்!

## பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 9

### மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

### முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

சுகந்தினி

### ரவை பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

ரவை - 3 கப்
இறைச்சி (சிறு சிறு துண்டுகளாக்கியது) - 250 கிராம்
சிறிய வெங்காயம் - 14
நெய் - 150 கிராம்
முந்திரிப்பருப்பு - 8
முந்திரிகை வற்றல் - 8
ஏலம் - 4
பூண்டு - 3
இஞ்சி - ஒரு சிறிய துண்டு
பச்சை மிளகாய் - 10
கறிவேப்பிலை - அளவாக
மசாலாத்தூள் -1/2 தேக்கரண்டி
எலுமிச்சம்பழம் - 2
உப்பு - அளவாக
தண்ணீர் - 5 கப்

**செய்முறை:**

முதலில் அரைவாசி நெய்யை உருக்கி அதில் முந்திரிப்பருப்பு, முந்திரிகை வற்றல், ஏலத்தை நன்றாக வறுத்து எடுக்கவும், பின் அதே வாணலியில் ரவையை நன்றாக வறுத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். வெங்காயம் இஞ்சி, பூண்டு, பச்சைமிளகாய் போன்ற வற்றை நன்றாக அரைக்கவும். பின் வாண லியில் மீதி நெய்யை ஊற்றி, அரைத்த பொருட்களையும், மசாலாத்தூள், இறைச்சி, உப்பு, கறிவேப்பிலை சேர்த்து நன்றாக வேக வைக்கவும். பின் அவற்றுடன் 5 கப் தண்ணீர் சேர்க்கவும். தண்ணீர் நன்றாகக் கொதித்த வுடன் வறுத்த ரவையைச் சேர்த்துக் கிளறவும். பழச் சாறு, நெய்யில் வறுத்தெடுத்த முந்திரிப்பருப்பு, முந்திரிகை வற்றல், ஏலம் போட்டு இறக்கவும்.

## மகளிர் கவனிக்க

ஏற்கெனவே லேடீஸ் ஸ்பெசல் பகுதியில் நடந்து முடிந்த 'மகளிர் மட்டும்' பரிசுப் போட்டி முடிவுகள் எதிர்வரும் 99வது முரசில் வெளியாகும். யார் அந்த அதிஷ்டசாலிகளோ?

## திருடப்பட்ட கவிதைகள்?

**எவரையும் தனிப்பட்ட ரீதியில் தாக்குவதல்ல நோக்கம். கவிதைகள் பிரபல கவிஞர்கள் தொடர்பாக வெளிவந்துள்ள ஒரு ஆய்வை முரசு வாசகர்களுக்கு தந்துள்ளோம். தமிழ்க் ஆய்வாளர் பேராசிரியர் டாக்டர் சி. மறைமலை எழுதிய 'புதுக்கவிதையின் தேக்க நிலை' என்ற ஆய்வில் இருந்து தொகுக்கப்பட்டது. இது தொடர்பான வாசகர் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன.**

### 2

### வித்தியாச விருந்து

1979 இல் அறிவுமணி தமது பிருந்தாவனத்துப் பிரமிடுகள், என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். அதில் "ஊமை மகுடிகள்" என்னும் கவிதையில்,

"வரதட்சணை வில்லொடிக்கும்
சுயம்வரங்களுக்கு
இராமர்களே வராததனால்
தோற்றுப் போன இந்தச் சீதைகள்"

என்று வரதட்சணைக் கொடுமையால் வாடும் பெண்களைச் சித்தரிக்கிறார்.

இக் கவிதைத் தொகுப்புக்கு மதிப்புரை வழங்கியவர் வைரமுத்து.'இன்னொரு தேசிய கீதம்' என்னும் தனது கவிதைத் தொகுப்பில் (1982) அறிவுமணியின் புராணப் படிமத்தை வைரமுத்து பின்பற்றுகிறார்.

"அந்தச்
சீதை சிந்திக்கிறாள்
இந்த
வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?"

தனது ஒரு தொகுப்பில் இடம் பெற்றுள்ள கருத்தையும், கற்பனையையும் வேறொரு தொகுப்பிலும் திணித்துப் பக்கங்களை நிரப்பும் வணிக நோக்கமும் வைரமுத்துவிடம் காணப்படுகிறது.

"எல்லாப் பத்திரிகையிலும்
மணமகன் வேலை மட்டும்
காலியாயிருக்கிறது"

(இன்னொரு தேசிய கீதம் - ப-83- வைரமுத்து)

என்னும் வரிகளை மீண்டும் அடுத்த தொகுப்பிலும் அப்படியே பயன் படுத்துகிறார்,

"இந்து பத்திரிகையின்
இரண்டாம் பக்கத்தில்
வாழ்க்கையைத் தேடும்
வாலிபனே!
அங்கென்ன வாழ்கிறதாம்!
அங்கும்
மணமகன் வேலைதானே
காலியாயிருக்கிறது?

(கொடிமரத்தின் வேர்கள்- ப.-46)

இதே போல,

"கல்விக் கூடம்
அவனைத் தன்னுள்
பதுக்கி வைத்திருந்து பிறகு
பிதுக்கி எறிந்து விட்டது"

(இன்னொரு தேசிய கீதம்- ப- 83)

என்றும் வரிகளைச் சற்று மாற்றி

"கல்லூரியிலிருந்து
தெருவை நோக்கிப்
பிதுக்கப்பட்ட
பிரஜைகளே!"

(கொடிமரத்தின் வேர்கள்- ப-95)

என்று அடுத்து பயன்படுத்தியுள்ளார்.

'இன்னொரு தேசிய கீதத்தில்' அலுவல் பார்க்கும் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் தயங்குவதை,

"ஒண்ணாந் தேதி அமுத சுரபிகள்
வைத்திருப்பதால்
சில பெற்றோர்கள் அவர்களை
மணிமேகலைகளாய்
மாற்றிவிட்டனர்"

(பக்-40)

எனக் குறிப்பிடுபவர், அதற்கு முன் வெளிவந்துவிட்ட தனது "திருத்தி எழுதிய தீர்ப்புக்க"ளில் முதிர் கன்னியர் சிக்கலைக் கூறும் போது,

"கல்யாணத் துறவு பூண்டு
முதல் தேதி அமுத சுரபிகளாய்
வாழ்ந்து கொண்டு
இன்னும் நம்மிடை
எத்தனை மணிமேகலை"

(பக்- 20)

பெண்களின் சிக்கல்களை வெவ்வேறு கோணங்களில் காண்பது போலத் தென் பட்டாலும் இவ்விரு கவிதைகளின் உள்ளடக் கத்தில் பெரிய மாறுபாடு எதுவும் இல்லை. கவிஞர் கூறும் தீர்வும் ஒன்றேதான்.


மரபுக் கவிதைக்கும் புதுக் கவிதைக்கும் உள்ள இன்றியமையாத வேறுபாடு, சொற் கெட்டும், செறிவுமேயாகும்.

மரபுக் கவிதையில் இசை நிறைக்கவோ, ஓசை நயத்தை மிகுவிக்கவோ, உள்ளடக் கத்திற்கு தேவைப்படாத சொற்கள் இடம் பெறலாம்.

ஆனால், புதுக்கவிதை மிகவும் செறிவாக அமைந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு சொல்லும் அதன் உள்ளடக்கத்தோடு நேரடித் தொடர்புடையதாக விளங்க வேண்டும்.

மரபுக் கவிதைப் போக்கில் புதுக்கவிதை படைக்க முற்பட்டிருப்பதனால் விரிவான வர்ணனைகளில் வைரமுத்து ஈடுபடுகிறார்.

அத்தகைய வர்ணனைகளை வெவ்வேறு கவிதைகளில் நுழைத்துப் பக்கங்களை மிகுதிப்படுத்த முயல்கிறார்.



"தன் மேனியெங்கும்
பச்சையைப்
பச்சை குத்திக் கொண்டிருக்கும்
ஒரு பூங்கா"

(கொடிமரத்தின் வேர்கள்- ப-57)

"பூமி
பச்சை குத்திக் கொண்டிருக்கும்
பசுஞ் சோலையும்"

(கவிராஜன் கதை- பக்-18)

"அது
பூமிப் பெண்
தன் மார்பில்
பச்சை குத்திக் கொண்டிருக்கும்
பயிர்ப் பிரதேசம்"

(கவிராஜன் கதை- ப- 198)

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தேன் கிண்ணம்



## மனச் சேதிகள்

இரவு
ஆட்சி புரியும்.
கண்களின் கதவுகள்
மூடிக் கொள்ளும்.
தடுத்தும் முடியாமல்
நினைவின் அலைகள்
மனப் பாறையில்
மோதிக் கொள்ளும்.

உறக்கத்தை
சிரம் கட்டிவிட்டு
உதிர்ந்த உறவுகளின்
நிகழ்வுகளை
வேவு பார்க்க
நினைவு வீரர்கள்
பயணிப்பர்.

கலக்கத்தின் கடலில்
நான் தத்தளிக்க
அக்கரையில் அவள்
அக்கறையின்றி
ஆடவனின்
அரவணைப்பில்.....

சிறிடும் சீற்றங்கள்
அவளை
தீண்டிட நாடிய போது
தடைக்கல்லாய்
என் சிரிப்பு...!

கொடியிடையின்
மடியினிலே
தொட்டிலிட்ட என்னையே
விட்டுவிட்டாள்....
கோடைகால மழைக்
குளிருக்குப் போர்வையான
இவன் மட்டும்
விதி விலக்கா...?

மதுவுள்ள மாதென்று
எண்ணியிருந்தேன்
விலை மாதென்று
அறியாதவரை...!

புலன் விசாரணை
புலன்களுக்கு
விடை கொடுத்ததால்
புரிந்து கொண்டேன்
நிலவு திருடிய வானம்
நிரந்தரமான தென்றும்,
நினைவு திருடியமனம்
நிகழ்தகவானதென்றும்.

எஸ்.எஸ்.ராஜன்-கிராண்குளம்-07.



## காயங்கள்!

நானின்று;
தனியாகப் புல்மேயும் மாடு!
இந்த நிலையில்;
கயிறு கொண்டுவர
எனக்குத் துணிவில்லை!

•

வானத்தில்
தூசிகளைப் பற்றிப் பிடிக்கும்
பனிபடுநிலையாக,
நீ;
எதையாவது பற்றிக்கொண்டிரு!
ஒதுங்கிக்கொண்டே
ஒரு உயரத்தில் வாழலாம்!

•

ஒதுக்கப்பட்ட நமது
உறவை இணைக்க;
ஒரு நாள்,
சூரியனுக்கும் சந்திரனுக்கும்
மட்டும்
சொல்லி அனுப்புவோம்!

•

நமக்கென்றொரு
நதிவர நேரமில்லைதான்.
விதியின்
விலங்குடைக்கும் வேளையில்,
ஒரு
பூனையாவது நம்மை
முன்மொழியாது போகுமா?

•

மேனியின்
புன்முகங்களில்
முகம்பார்த்துச் சிரித்த
அந்தப் பொய் முகங்களை
ஒரு நாள் காகம் விறாண்டும்!

•

நமக்குமட்டும்
தெரிந்து கொண்டிருந்த
உள்ளடக்கம்
தெருவுக்கு வரும்!

•

அன்றும்;
இதே மௌனத்தோடு,
மேனியின் காயங்களை
நுளம்பு கடித்த தடங்களாக
கனவு காண்போம்.

•

அ.அன்பழகன் குரூஸ்
மடடக்களப்பு.



## சுமைகள்!

வளர்ச்சிக்கு
வறுமை
சுமை!

•

பசிக்குப்
பட்டினி
சுமை!

•

புதுமைக்கு
பழமை
சுமை!

•

நெசவுக்கு
நிர்வாணம்
சுமை!

•

நிலவுக்கு
வானவெளி
சுமை!

•

சமாதிக்கு
தொட்டில் படுக்கை
சுமை!

•

ராத்திரிக்கு
கனவுகள்
சுமை!

•

பாலைமணலில்
பாதங்கள்
சுமை!

•

வறுமை தேசத்தில்
வாரிசுகள்
ஒரு சுமை!

•

ஷஹிர்ஷா தாஸிம்-
தர்கா நகர்.

## அவளின் சங்கீதம்!

உன்
விழிகளில் என்ன
இத்துணை நெருப்பு..?

சுட்டு விடுமாற் போல்
எரிகணைகள்
ஏவுகின்றாய்.

எனக்கும் இதயம் இருந்தது
உன்னைக் காணும்வரை.

இப்போது-
ஒரு புழுவைப்போலேனும்
துடிக்க முடியவில்லை
உன்னை காணாவிட்டால்.

உன்
நினைவுக் குளத்தில்
நானொரு மீனாய்
அழுதழுது அழிந்து
போகிறேன்.

வலிக்கிறது
நரம்புகள்
நீ என்ன மேலாடையா
கழற்றி வைத்து
மாற்றிக்கொள்ள....?
என் ஆன்மாவை
போர்த்தியிருக்கும் கவசத்
தோல் நீ!

உரித்தெறியவும் மனமில்லை
உன்னை அழித்து விடவும்
இடமில்லை.

சொல்ல வேண்டும்
என்றுதான்
துடிக்கிறது மனம்,
என் நாவின் பசையை
உலர வைக்கும்
உன் கடூரப்பார்வைகளால்
வார்த்தைகள் வற்றி
அடங்கிப் போகிறது வீரம்.

அஞ்சு!
ஒன்றுசெய்,

ஒவ்வொரு இரவினிலும்
என் சுவரை பார்த்தேனும்
திட்டிக் கொண்டிரு
அந்த சங்கீதத்தில்-
நான் உறங்கிப் போகிறேன்.

-கன்ஸியா-



## இரவின்..... விடியல்!

உன்....
வரவிற்காய்
நான்!
நிழல்மரமாய்
நிற்க
நீ வந்து
காற்றுவாங்கிச்
செல்வாய்!

உன்னுடைய சல்வாரி
என்னுடலில் பட்டு
மௌனமாய் அழும்!

அப்போது?
நீ நடந்த
வெள்ளை வீதி
கறுப்புக்கொடி காட்ட

உன்
நினைவுகள்
மனசில்;

கொட்டாவிவிட்டு
நெட்டி முறித்து

மெல்ல....
எழுந்து வரும்
ஒரு
இரவின்
விடியலுக்காய்!

வி.சுதாகர்-அக்கரைப்பற்று-08.

## 'அன்பு' அன்பனுக்கு!

தனியிஷ்டத்திலேயே
காதலித்து
கனிஷ்டத்திலேயே..
கனவுகளை
மணல் நீராக்கி
மன-நிர்வாணத்தில்
நிர்மூலமாகிக்கொண்டிருக்கும்
உன் சோகம்
அறிந்தேன் நண்பனே..!

சோகப் பிரபஞ்சத்தில்
சாகாத் தஞ்சமாய்
வஞ்சம் தீர்க்க!
சிகரட் புகையை-நீ
வஞ்சியாய்
வருடிக் கொண்டிருப்பதையும்
கேள்விப்பட்டேன்!

உன்
வசந்த வாலிபத்தில்
கசந்த.
காதல் கசிவுக்கு
உன் பசுந்த
இலட்சியத்தை
பொசுக்கிக் கொள்ளாதே..!

கானல் நிலவில்
நிழல்பார்த்து!-உன்
ஊனமனசில்
இன்னும்...இன்னும்...
கூனல்களை
குடைந்து கொள்ளாதே..!

தொலைத்த உன்
இதயத்தை
இழைக்க!
தொலைதூர
அவளைத்தேடி...
ஆவல்களை
அடுக்கிவைக்காதே....!

நண்பா....!
வாலிபம் திரும்பாதது!
திருந்தப்பார்.
அவளைவிட்டால்
ஆயிரம் 'லைலா'க்கள்
உன்னில் 'மையல்' கொள்ள
இன்னும் இருக்கிறார்கள்
இந்த மண்ணில்!

பாணகமுவ-எஸ்-முஸ்தாக்
குருநாகல்.



## உரசல்!

குறைந்த பட்ச
உரசல்களில்
உயிர் ஊசலாடியது!
அந்தப் பட்டுக் கன்னம்
என் இதழ்படும் தூரத்தில்!

••

பக்கத்திலிருந்த
நெருக்கம்
நெருப்பானது!

••

சம்மந்தமில்லாத
பேச்சுகள்
எதையோ தெளிவுபடுத்தியது.

••

பரஸ்பரம்
எம்மீது பட்டுக்கொண்ட
மூச்சுக் காற்றுக்கூட
மூச்சு வாங்கியது!

••

எதிர்பாராத
அந்தத் தொடுகையால்
இதயத்தின் தொங்கல்வரை
இளமை விசிலடித்தது!
வா.....மீண்டும்....
லேசாய் உரசிக்கொள்வோம்!!

எம். சுரேஷ்.




## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பேறு, முயற்சி பலிதம், | பி.ப 2 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | உயர்ந்தநிலை, முயற்சிதடை. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் கலகம், பணவிரயம். | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியீட்டுப் பயணம், உயர்ந்தநிலை. | காலை 7 மணி |
| புதன்- | பயனற்ற செயல், தொழில்நிலை மந்தம். | காலை 9 மணி |
| வியாழன்- | உறவினர் கலகம், மனக்கலக்கம். | பகல் 12 மண |
| வெள்ளி- | வீண் முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் நிலை மந்தம், கடன் படல். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| வியாழன்- | துன்பம் குறையும், பணவரவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள்வரவு, செல்வாக்கு மேன்மை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், காரியசித்தி. | காலை 8 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- | பொருள் நட்டம், மறைமுக எதிர்ப்பு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், தேககம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, பொருள் பேறு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| புதன்- | வீன் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியசித்தி, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | காரிய மந்தம், கடன்படல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்புதன், அதிஷ்ட இலக்கம்-2

## இந்த வாரம் உங்கள் பலன்

(16.04.95 முதல் 22.04.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி, வெள்ளி |

சந்திரன்-துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, தொழில் சிறப்பு | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் கலகம், மனப் பயம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, தொழில் பலிதம். | காலை 7 மணி |
| சனி- | வீண்மனஸ்தாபம், பயனற்ற செயல் | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| புதன்- | பொருள் நஷ்டம் மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியரால் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- | வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி அதிஷ்ட இலக்கம் -4

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண்மனஸ்தாபம், உறவினர் கலகம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பொருள்வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | காரியசித்தி, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண்மனஸ்தாபம், புதிய முயற்சி. | காலை 8 மணி |
| சனி- | பணக்கஷ்டம், கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பணச்செலவு. | காலை 8 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 9 மணி |
| சனி- | பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -3

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| புதன்- | முன்னேற்றம், தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், உறவினர் தொல்லை. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண்தொல்லை, கடன்படல். | காலை 9 மணி |
| செவ்வாய்- | கௌரவம், தேககம் பாதிப்பு. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், மனப்பயம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | பொருள்வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | வீண்முயற்சி, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | தொழில் மந்தம், கடன் படல். | பகல் 12 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, உயர்ந்தநிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்





# பாப்பா மணிகள்

பாப்பா மணிகள் நாட்டின் இரு விழிகள்
மதியின் ஊற்று மாசற்ற மன்னவர்கள்-ஒரு
நாட்டின் நல்லொளி நாங்கள்-இன்னும்
நாளையத் தலைவரும் நாங்கள்..!

அன்னை மொழியின் அன்பு மக்கள்
அறிஞர்கள் அனைவரும் எம் தலைவர்.
பாப்பா மணிகளின் பாட்டியாம்
அந்த ஔவைத் திலகம் வாழ்கவே!

காந்தி காட்டிய வழியினிலே
கதிரவன் போன்று ஒளிர்விடுவோம்
பாரதி என்னும் பள்ளியிலே
பைந்தமிழ்ப் பாடம் படித்திடுவோம்!

இலக்கியம் நிறைந்த எம் தமிழை!
இரு விழி போன்று காத்திடுவோம்
வள்ளுவத் தந்தையை துணைக்கழைத்து
வையகம் வாழ்த்த வாழ்ந்திடுவோம்!

அனுப்பியது - அருண்பிரியா-இரத்தினபுரி.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வான் மொழி வாழிய வே!
சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறு கதை

# ஒரே ஒரு நாணயம்

ஜெயபுரி நாட்டு மன்னனான குணசீலன் மாறுவேடம் பூண்டு, தனது குதிரையின் மீது ஏறி, தனது நாட்டின் தலைநகரையும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் பார்வையிட்டுக் கொண்டே வந்தான்.

ஒரு கிராமத்துப் பாதையில் அவன் வந்து கொண்டிருந்தபோது, ஒரு முதியவர் கீழே குனிந்து எதையோ தேடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவரது கலக்கமடைந்திருந்த முகத்தைப் பார்த்து, அந்த முதியவர் தன்னிடமிருந்த விலையுயர்ந்த பொருளைத் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்தான்.

அந்த முதியவரின் அருகே வந்து குதிரையை நிறுத்தி, "பெரியவரே எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவன் அரசன் என்பதை அறியாத அந்தப் பெரியவர், அவன் யாரோ வழிப்போக்கன் என்று நினைத்து,

"ஐயா! நான் உழைத்துச் சம்பாதித்த ஒரு வெள்ளி நாணயத்தை வரும் வழியில் எங்கோ தொலைத்து விட்டேன். எந்த இடத்தில் நாணயம் விழுந்தது என்று தெரியவில்லை. ஆகவே நான் சென்ற வழியெங்கும் தேடிக்கொண்டே செல்கிறேன். நாணயத்தை நான் தேடி எடுக்காவிட்டால், இன்று நானும் எனது குடும்பமும் பட்டினி கிடக்க நேரிடும்" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார்.

இதனைக் கேட்ட மன்னன் குணசீலனுக்கு வருத்தம் மேலிட்டது.



உடனே அவன் தனது இடையில் வைத்திருந்த பொற்காசுகள் அடங்கிய பையை எடுத்து,

"ஐயா! பெரியவரே உங்கள் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதுதான். ஒரு வெள்ளிக்காசு போனால் போகிறது. அதற்காக இத்தனை சிரமமும், கவலையும் வேண்டாம். இதோ..இந்தப் பையில் நூறு பொற்காசுகள் உள்ளன. இதை வைத்துக்கொண்டு நிம்மதியாக வாழுங்கள்" என்று சொல்லி விட்டு, அந்தப் பொற்காசுகள் அடங்கிய பையை முதியவரிடம் கொடுத்தான்.

மிகவும் ஆச்சரியத்தோடு பையை வாங்கிய முதியவர் பையைத் திறந்து பார்த்தார்.

உள்ளே தங்க நாணயங்கள் மின்னின.

உடனே அந்தப் பையை மூடிய முதியவர், குணசீலனைப் பார்த்து,

"ஐயா! தாங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. தங்களின் கொடையுள்ளத்திற்கு என் நன்றி. இந்தப் பொற்காசுகள் எனக்கு வேண்டாம். இதைத் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி குண சீலனின் முன் நீட்டினார்.

அவரின் இந்தச் செயலைக் கண்டு மிகவும் வியப்படைந்த குணசீலன்,

"ஐயா! இதை ஏன் வேண்டாமென்று மறுக்கிறீர்கள்? இந்தப் பொற்காசுகள் மூலம் நீங்களும், உங்கள் குடும்பமும் மகிழ்ச்சியுடன் எவ்வித கஷ்டமும் இல்லாமல் வாழலாமே!" என்றான்.

அதைக் கேட்ட முதியவர்,

"ஐயா! தினமும் நான் கடுமையாக உழைத்து அதில் வரும் வருவாயைக் கொண்டு நிம்மதியுடன் என் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு தங்கக் காசுகள் என்னிடம் இருந்தால், முதலில் என் நிம்மதி போய் விடும். அதன் பிறகு உழைக்காமல் இதை வைத்துக் கொண்டே சுகமாய் வாழலாம் என்ற சோம்பேறித்தனம் வரும். அதன் பிறகு இவ்வளவு பொன்னையும் எப்படி பாதுகாப்பது என்ற கவலை வரும். இரவில் உறக்கம் வராது. இத்தனை துன்பங்களைக் கொடுக்கும் இந்தப் பொற்காசுகளை விரும்பாததன் காரணம் இதுவேதான். ஆகவே தாங்கள் உண்மையிலேயே எனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இவற்றில் ஒரே ஒரு நாணயத்தை மட்டும் தாருங்கள். அது போதும்." என்றார்.

இவற்றைக் கேட்டு மனம் தெளிவடைந்த குணசீலன் இத்தகைய நல்ல மனம் படைத்த மனிதர்கள் இருப்பதால்தான், நாட்டில் மழை பெய்து, இயற்கைச் செல்வம் கொழிக்கிறது என்று திருப்தியடைந்து, அந்த முதியவருக்கு ஒரு நாணயத்தை மட்டும் கொடுத்து விட்டு மன நிம்மதியோடு தன் அரண்மனைக்குத் திரும்பினான்.

● ●

## விடுகதைகளும் விடைகளும்

01. கடலுண்டு நீந்த முடியாது. முத்துக்கள் உண்டு எடுக்க முடியாது. அது என்ன?
02. அடித்தால் அண்ணனைக் கொல்லலாம். வெட்டினால் தம்பியைக் கொல்லலாம். யார் அவர்கள்?
03. வானத்திலே நீந்தும். பூமியிலே நீந்தாது. அது என்ன?
04. நெருப்புமில்லை, புகையும் இல்லை, ஆனால் எரியும் அது என்ன?
05. எழுதலாம் பேனா அல்ல: சாப்பிடலாம் உணவு அல்ல: அடிக்கலாம் பந்து அல்ல. அது என்ன?
06. உருண்டையாய் இருக்கும் உலகமல்ல. முத்துக்கள் உண்டு சிப்பியல்ல. அது என்ன?

### விடைகள்


01. வாய், பல் 02. தேங்காய், குரும்பை
03. நிலா 04. மின்குமிழ் 05. கை
06. மாதுளம்பழம்

தொகுப்பு :-
ஏ.ஆர்.எம். சப்ரிஅஹமட்
மட்/ அல்ஹிறா வித்தியாலயம்.
காத்தான்குடி 05

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி

பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ. இல. 1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்வேண்டிய கடைசித் திகதி 22.04.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 87
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 84

பரிசுக்குரியவர்
கோ. செந்தூரான்.
இ.கி. வித்தியாலயம் அக்கரைப்பற்று - 7.

பாராட்டுக்குரியவர்கள்
ஸ்ஸ்ஸ் மூஹ்யா
செய்லான் ரோட் கல்முனை - 04.


ப. பிரமேந்திரா
வட்டை விதானை வீதி, கல்முனை-2

எஸ். அரவிந்தன்
கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருகோணமலை.

அ.ஏ. முஹம்மத் அஸாம்
ஸாஹிரா தேசிய கல்லூரி புத்தளம்

எம்.எஸ். நூறுல் ஹுதைபா,
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம். புத்தளம்.

## அறிவோம் மனதில் பதிவோம்



சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவதில் பலர் ஈடுபட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் வேலை நடக்கும் போதே இறந்தனர். அவர்கள் அச்சுவரின் அடித் தளத்திலேயே புதைக்கப்பட்டனர். இச்சுவரை உலகின் மிகப் பெரிய கல்லறை என்றும் கூறலாம்.

▫▫ ▫▫ ▫▫

அப்பிள் பழங்களை உற்பத்தி செய்வதில் உலகிலேயே முதலிடம் வகிப்பது சீனா. அப்பிள் பழங்களைச் சாப்பிடுவதில் முதல் இடம் வகிப்பவர்கள் ஜெர்மனி, பல்கேரியா நாட்டவர்கள்.



▫▫ ▫▫ ▫▫

எழுத்தாளர்களை மிகவும் கவர்ந்த நடிகர் சார்லி சப்ளின். இவரது நடிப்புத்திறனைப் பற்றியும், சொந்த வாழ்க்கையைப் பற்றியும் பல எழுத்தாளர்கள் புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். இதுவரை இப்படி 300 புத்தகங்கள் வெளிவந்துள்ளன.



### தந்திரக் கணக்கு

ஒரு கூடையில் உள்ள திராட்சைப்பழங்களின் எண்ணிக்கையை.

| | |
|---|---|
| 2 | ஆல் வகுத்தால் மீதி 1 |
| 3 | ஆல் வகுத்தால் மீதி 1 |
| 4 | ஆல் வகுத்தால் மீதி 1 |
| 6 | ஆல் வகுத்தால் மீதி 1 |

என வரும்.

(i) இக்கூடையில் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(ii) 58 ஐ 2ஆல் வகுத்து அவ்விடையிலிருந்து 20ஐக் கழித்து மீதியாக உள்ளவற்றுடன் கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையிலிருந்து கழித்து அவ்விடையை 2ஆல் வகுத்தால் இப்போது கூடையில் எத்தனை பழங்கள் உள்ளன?

விடைகள்: (i) 109 பழங்கள் (ii) 50 பழங்கள்

செல்வி. த. நர்மதா

## வாரம் ஒரு நாடு

### பெல்ஜியம்



**அமைவிடம்:** மேற்கு ஐரோப்பாவில் நெதர்லாந்து ஜேர்மனி மற்றும் ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ள நாடு. மேற்கே ஆங்கிலக்கடல்.

**பரப்பளவு:** 30,500 சதுர கி.மீ (11,775 சதுர மைல்)

**மக்கள் தொகை:** 9,800,000 பேர்

**தலைநகரம்:** பிரஸல்ஸ்.

**ஆட்சி முறை:** ஃபிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து 1830ம் ஆண்டில் சுதந்திர முடியாட்சியாக இருந்து வருகிறது.

**பேசும் மொழி:** ஃபிரேஞ்ச், டச்சு, ஜேர்மன்.

**மதம்:** உரோமன் கத்தோலிக்க மதம்.

**சிறப்பம்சங்கள்:** விவசாயமும் காட்டுவளமும் அதிகமாக உள்ள இந்நாட்டில் மக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். நிலக்கரி கிடைக்கிறது. உருக்காலைகள் பலஉள்ளன. கனரக வேதியியல் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.


ஆன்ட்வேர்ப் உலகிலேயே நான்காவது பெரிய துறைமுகமாகும். இங்குதான் உலகிலேயே பெரிய வைரக்கல் சந்தை உள்ளது.

**பார்க்க வேண்டிய இடங்கள்:**

தலைநகர் பிரஸல்ஸ் மத்தியிலுள்ள அரச மாளிகை உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் ஓரிடமாகும். இங்குள்ள சந்தையும் சிறப்பான ஒன்றாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேவாலயங்களும் கோட்டைகளும் மாளிகைகளும் உள்ளன.

அருங்காட்சியகங்கள் ஓவியக் கண்காட்சியகங்கள் ஆகியனவும் பார்வையாளர்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

## நீர் குடிப்பது எப்படி?



அவுஸ்திரேலியாவில் பாறைகள் நிறைந்த பாலைவனப்பகுதியில் வசிக்கும் ஓணான்களுக்கு 'மவுன்டீன் டெவில்' என்று பெயர். இது உடல் எங்கும் முட்களுடன் பார்ப்பதற்கு பயங்கரமாக இருக்கும். இதன் உடல் முழுவதும் சிறு சிறு குழாய்கள் அங்கும் இங்குமாகச் செல்லும். இந்த ஓணான் குளத்தினுள் தன் கால்களை வைத்தால் போதும். நீர், ஓணானின் குழாய்களின் வழியே இதன் உடல் முழுவதையும் நனைத்துக்கொண்டு வாய்க்கு வந்து விடும். இரவில் இதன் முதுகின் மீது படியும் பனிகூட பகலில் உருகி குழாய்களின் வழியே வாய்க்கு வந்து விடும். வறட்சியான பகுதியில் வாழும் இந்த ஓணான் எளிதில் நீர் பெறுவதற்கேற்ப அதன் உடல் அமைப்பு இப்படி உள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

"வெளியே வாடி!" யாரோ ஒருவன் இரைந்து கத்தினான். அவனுடைய குரல் குடிவெறியில் தழும்பியது.

இல்லத்தின் இரண்டு மூன்று கதவுகளும் திறந்தே கிடந்தன. வாசலோரம் வைத்திருந்த விளக்கின் எண்ணெய் தீர்ந்து போய்த் திரி கறுத்துக் கொண்டிருந்தது.

இனியும் சிறிது நேரத்தில் அதுவும் அணைந்து போகலாம். மழையின் ஆரவாரம் இனியும் அடங்கவில்லை. பந்தங்களில் படும் துளிகள் வெடித்து வெடித்துத் தீயுக்கு வெப்பத்தை அதிகப்படுத்தின.

பெரிசாகப் பெய்து முடித்திருந்தது...இப்போது சாரலாகியிருக்கிறது! மறுபடியும் வரலாம்.

எந்தநேரமும் வீசி அடிக்கலாம்.

அக்கம் பக்கத்திலெல்லாம் கூக்குரல்கள் கேட்டன. இந்தச் செய்தியை அறிந்தவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து நியாயம் கேட்க வேண்டும் என்று படைதிரளுகிற மாதிரி இருந்தது!

கோபால் பலருக்கு கோபம் வருகிற மாதிரித் தகவலைத் திருத்திச் சொல்லி விட்டான். ஏற்கெனவே இந்த வடக்குத்தரை மனையைப் பற்றி இருந்த புகைச்சலுக்கு இது எண்ணெய் ஊற்றிப் பற்றவைத்ததைப் போல்! இல்லத்தின் முன் வெளிச்சமிருந்தும் அங்கே நின்றிருந்தவர்களுக்கு ஏதோ ஒருவிதப் பயம்.

காரணம் அப்படி ஒரு நிசப்தமாயிருந்தது இல்லத்தின் உள்ளே! முற்றம் முழுக்க புல்லும் புதரும்.

சிவசங்கரன் இருந்தபோது இப்படி இல்லை! இப்போது மறுபடியும் பூச்சி பொட்டுகள் குடியிருக்கிற புதர்க்காடாகி விட்டது!

முன்னமே இந்தப் பக்கம் வந்தவர்கள் மனசுக்குள் இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டார்கள். கூட்டத்தில் சிலர் முதன் முதலாக இந்த இல்லத்துக்கு வந்திருப்பவர்கள்.

அவர்களுக்குச் சந்தேகம். "இப்படி ஒரு அடைசலுக்குள்ளே எப்படி அந்தப் பொண்ணு மட்டும் தனியா இருக்கா?"

"அவதான் களறி படிச்சவளாச்சே!"

"இருந்தாலும் இவ்வளவு தைரியம் எப்படி வந்தது?"

"அம்மா மட்டும் அஞ்சினவளா? அவளும் சமார்த்தியசாலி தான். அந்தச் சிவசங்கரனை சோறு போட்டே வேலை வாங்கிக்கலையா?"

"ஆமாம்- எல்லா வேலையும்!"

குபுக்கென்று யாரோ சிரித்தார்கள்.

"அட, இப்ப அந்தக் கதை எல்லாம் எதுக்கு? கோபாலைப் பொசுக்கியிருக்காளே அவளைக் கூப்பிட்டுக் கேளுங்க!"

"பதிலுக்குப் பதில் அவ மொகத்தையும் பொசுக்கீட்டுத் தான் போகணும்.... கூப்பிடுங்க!"

"கூப்பிடுங்கடா!"

"வாடி வெளியே!" ஒருவர் இரைந்து கத்தினார்.

கூட்டத்தினரின் கோபம் பந்தத்தில் எரிந்த நெருப்பாக ஜொலித்தது.

"வழியிலே போனவனைக் கூப்பிட்டு இப்படிச் செஞ்சிருக்காளே! அவ முழி ரெண்டையும் பேர்த்துப் போட வேண்டாம்?"

"அடியே- அகங்காரி! வாடி வெளியே!"

மீண்டும் மீண்டும் ஜனங்களின் கூப்பாடு கேட்டுக்கொண்டே இருந்தது.

கூட்டம் ஒவ்வொரு கூப்பாட்டுக்கும் ஒவ்வொரு அடி முன்னேறி இல்லத்தை நோக்கி நகர்ந்து கொண்டேயிருந்தது!

அப்போதும் பத்ரா வெளியே வரவில்லை.

"நல்லாத் தூங்குவா போலிருக்குடா."

"அதெப்படி? இந்தச் சத்தத்திலே அவளாலே தூங்க முடியும்? பயந்து போய் எங்காவது பம்மிக்கிட்டிருப்பா!"

"அம்மா தான் அப்படின்னா மகளும் மோசமில்லப்பா!"

"புலி எட்டடி; குட்டி பதினாறடின்னு ஒரு பழமொழியிருக்கு! அப்படித்தான் அம்மாவை விட மகள் பாஞ்சிருக்கா!"

கூட்டத்தில் வயதான ஒருவர் தானாகப் புலம்பிக் கொண்டிருந்தார். கோபால் கூட்டத்தின் கடைசியில்

## எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!

கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம் கேட்கும் போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.

ஒதுங்கிஒதுங்கி நின்றான். பத்ரா வெளியே வந்தால் அவன் பார்வை முதலில் தன்மீது படக் கூடாது என்கிற பயம்..

அவனுக்கு இனியும் நடுக்கம் தீரவில்லை.

எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பத்ரா வருவாள் என்கிற நம்பிக்கை அத்தனை பேருக்குமிருந்தது. ஆனால் அவளைக் காணோம்.

அவள் ஒருவேளை பேயோ பிசாசோ என்கிற சந்தேகம் கோபாலுக்கு அந்த முகம் மறுபடியும் ஞாபகம் வந்தது.

அது நிஜமாஅல்லது முகமூடி வைத்துத் தன்னை ஏமாற்றிய வித்தையா? -குழம்பிக் கொண்டிருந்தான் அவன்.

தனியாக இருப்பவள் தைரியத்துக்காக இப்படி ஏதாவது செய்து தன்னை மிரட்டுவதென்பது சரிதான்! ஆனாலும் முகத்தை நெருப்பால் பொசுக்கி விட்டாளே! இனி இந்த முகத்தை வைத்துக் கொண்டு எப்படி வாழ்வது?

"வெளியே வாடி!...." யாரோ கெட்ட வார்த்தைகளை இட்டு நிரப்பினார்கள்! பெண்களை அவமானப்படுத்த ஆண்களுக்குத்தான் பலவிதமான சொல்லாயுதங்கள் இருக்கின்றனவே!

இந்த அசிங்கமான வார்த்தைகளும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை.

"எங்கேயோ போயிட்டா! அதான் ஆளைக் காணலே!"

"அவ எங்கேடா போக? பயந்து பொடவையை நனைச்சுட்டு எங்காவது உக்கார்ந்திருப்பா!"

கூட்டம் முன்னேறி இல்லத்து வாசலுக்குள்ளேயே நுழைந்து விட்டது.

சிலர் கதவைத் தட்டினார்கள். சிலர் குதித்தார்கள். சிலர் விட்டத்தின் மீது தாவி அடித்தார்கள்.

இதெல்லாம் அவளை வெளியே வருவிப்பதற்கான உபாயங்கள்! மூடியிருக்கும் ஏதாவது ஒரு கதவைத் திறந்து கோபமாக அவளை முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிற வித்தை!

பயனில்லை!

அப்போதும் இல்லம் நிசப்தமாகவே இருந்தது!

இது வந்தவர்களை உசுப்பேற்றி விட்டது! 'இத்தனைபேர் கூப்பிட்டும் வெளியே வராமல் இருக்கிறாளே...!' என்கிற ரோஷத்தை ஒவ்வொருவருக்கும் முறுக்கி விட்டது!

"நீ பெரிய வைராக்யம் பிடிச்சவளாடி..? பத்ரா!"

"சூடு சொறணையிருந்தா வாடி வெளியே!"

"பயந்துபோய் எதுக்குப் பம்மிக்கிட்டிருக்கே? எழுந்து வந்து பதில் சொல்லுடி....!"

அப்போதும் இல்லத்தில் சப்தமில்லை.

"இதப்பாருடி! பொறுத்தது பொறுத்துட்டோம்! இப்ப உனக்கு கடைசியா ஒரே ஒரு சந்தர்ப்பம்..! பத்து எண்ணுவோம். அப்பவும் நீ வெளியே வரலேன்னா இந்தப் பந்தங்கள் அத்தனையும் இல்லத்தை பொசுக்கும்!" என்றது ஒரு கணீர்க் குரல்!

"எண்ணுங்கய்யா!"

"ஒண்ணு...."-ஒருவர் சொன்னார். சிறிது தாமதித்து மறுபடியும் ஒருவர் "இரண்டு" என்றார்!

பத்து எண்ணப் பட்டபிறகும் பத்ரா வெளியே வரவேயில்லை!

"அவ நம்மை எல்லாம் அசிங்கப் படுத்திட்டா!"

"ஆமாய்யா! அந்தப் பொட்டக் கழுதைக்குச் சரியான பாடம் கத்துக் கொடுத்துட்டுத்தான் நாம நகரணும். வாங்கடா எல்லாரும்!" கத்தினார் ஒருவர்.

மக்களோடு ஒரு தொடர்பும் இல்லாத இல்லம் அது. எல்லாம் நாராயணன் நம்பூதிரி இருந்த காலத்தோடுமுடிந்து விட்டது. அவருக்கு அரசாங்கத்தில் ஒரு




அவமானம் ஏற்பட்டபிறகு அத்தனை பேருமே ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள். அதன்பிறகு இப்படி ஒரு இல்லம் இருப்பதையே பலரும் நினைக்கவில்லை.

இரண்டு `சாவுகள் ஒன்றன் பின் ஒன்றாக நடந்தபோது ஏற்பட்டதுதான் ஜனங்களின் வருகையும் புறப்பாடும்!

இப்போது ஜனங்கள் வந்திருப்பது கோபாலுக்கு ஏற்பட்டிருந்த ஒரு கொடுமைக்குத் தீர்வு கேட்கத்தான்.

முகம் கருகிப் போனபிறகு என்ன தீர்வு?

பழிக்குப் பழிவாங்க வேண்டும். அந்தப் பத்ராவின் முகத்தையும் பொசுக்க வேண்டும். பத்ரா வெளியே வந்து தன் நிலைமையைச் சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் ஓரளவுக்கு பெண் என்கிற முறையில் கூட்டத்தினரில் பாதிப் பேராவது பரிவு காட்டியிருப்பார்கள்.

இப்போது?

ஒவ்வொரு கதவையும் உதைத்துத் திறந்தது கூட்டம்.

கோபால் குடிகாரனாக இருந்தாலும் பெரிய குடும்பத்துப் பையன். அவனுக்கு இப்படி ஒரு நிலைமையா?

கிராமம் மொத்தமும் அவனுக்காக வரிந்து கட்டிக்கொண்டு வந்து நின்றது.

வழியோடு போனவன் இல்லத்துக்குள் ஏறி ஏடாகூடமாக பத்ராவோடு அவன் பேசியது....பரிகாசம் செய்தது....கட்டிப் பிடிக்க எத்தனித்தது....அவ்வளவுமே அவன் செய்த தப்புகள்தான். அது இப்போது யாருக்குமே தெரியாது.

அவன் சொன்ன வார்த்தைகள்-நிஜம்போலிருந்து விட்டன.

முகம் பொசுங்கிப் போனதற்கு அடையாளமும் இருக்கிறது. பத்ரா வெளியே வந்து தன் நிலைமைகளைச் சொன்னால் தானே கோபாலின் வார்த்தைகளுக்குள் எத்தனை பொய்யிருக்கிறது என்றே புலப்படும்? அவள் வராதது ஜனக் கூட்டத்தின் கோபத்தைக் கொழுந்து விட்டு எரிய வைத்து விட்டது!

"அவ எங்கே இருந்தாலும் தலை முடியைப் பிடிச்சு இழுத்து வெளியே கொண்டு வாங்கடா!"

உத்தரவிட்டு விட்டுப்போனார் ஒருவர்.

கதவு ஒன்றை எட்டி உதைத்தார்.

உள்ளேயிருந்து வெளவால்கள் பறந்து வெளியேறின. நூலாம் படை முகத்தில் இழுத்தது.

அந்த அறைக்குள் பழைய கருங்காலி மரக்கட்டில்கள் தூசுபடிந்து கிடந்தன. ஒவ்வொரு கட்டிலும் சித்திரவேலை செய்யப்பட்டவை. இவை இப்போது எவருக்குமே பயனற்றுப்போய் விட்டது போல்...சுவரில் சாய்த்து நிறுத்தப் பட்டிருந்தன!

அவற்றை உள்ளே புகுந்து சிலர் தூக்கி அடித்தனர்.

அதிலிருந்த தூசு நின்றவர்களின் சுவாசத்தைத் திணறச் செய்தது.

"கருமம்...கருமம்! இங்கே அவளைக் காணலே. அடுத்தகதவைத் திறங்க!"

பந்தத்தை வீசியவாறு மறு அறைக் கதவுகளையும் எட்டி உதைத்தார்கள். கதவு அப்படியே உள்ளே மல்லாந்து விழுந்தது!

"நாராயணன் திருமேனி இருந்த வரைக்கும் தான் எல்லாமே உபயோகப் பட்டிருக்கும்! அவர் போனப்புறம்-இல்லக் கதவுகூட உளுத்துப் போச்சு!"

"உள்ளே இருக்காளா பாருங்கய்யா!" சொன்னார் ஒருவர்.

"நீதான் பந்தத்தை எடுத்துட்டுப் போய்ப் பாரேன்! இருந்திருந்தா பலகை விழுந்த சத்தத்துக்கு பதறி ஒரு குரலாவது குடுத்திருப்பா இல்லே?"

பெரியவர் மிகவும் தர்க்க ரீதியாகக் கேட்டுவிட்டு நடக்கவும், சந்தேகப் பிராணி ஒருவர் பந்தத்தோடு உள்ளே போகவும் சரியாகஇருந்தது.

அடுத்த கதவும் அகன்று விழுந்தது.

"என்னடா இது..? இங்கே ஆட்கள் இருந்ததுக்கான அடையாளத்தையே காணலே?"

கோபாலைப் பார்த்துக் கேட்டார் ஒருவர்.

"பூஜை செஞ்சுட்டிருந்தாங்க! இப்பவும் பூஜை தான் செஞ்சிட்டிருக்கணும்....."

"பூஜையா?"

"ஆமாங்க...பூஜை! ஏழுதிரிக் குத்து விளக்கு எரிஞ்சிது! ஹோம குண்டம் புகைஞ்சது...."

நீ அவ உன்னைத் தெருவுக்கு வந்து கூப்பிட்டான்னு தானே சொன்னே?"

சந்தேகமாகக் கேட்டார் அவர்.

"ஆமாங்க! கூட்டிக்கிட்டு வந்து என்னை ஒரு அறைக்குள்ளே இருக்க வச்சிட்டுப் போய்ப் பூஜை செய்ய ஆரம்பிச்சா!"

கோபாலின் பேச்சு மறுபடியும் அவரைச் சந்தேகப் படுத்தியது.

"அப்படிப் பூஜை செய்தவ எப்படி கோபாலு உன் முகத்தைப் பொசுக்குவா?"

"பொசுக்கிட்டாளே!"

"நீ அவளைப் போய்த் தொட்டியா?"

மாட்டிக் கொண்டான் கோபால். அவன் குற்ற உணர்வு காட்டிக் கொடுத்து விட்டது!

"தூ!" காறி முகத்தில் உமிழ்ந்தார் அந்தப் பெரியவர்.

"உன் பேச்சை நம்பி ஊரையே தப்புவழிக்குத் திருப்பி விட்டுட்டேனடா.... பாவி!"

அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது-

தேடிய அறைகள் எதிலும் பத்ராவைக் காணாத எரிச்சலில் ஆவேசப்பட்டவர்கள் தங்கள் தங்கள் கைப்பந்தகளை மச்சுகளின் மீது மரச்சாமான்களின் மீதுமாக வீசியெறிந்தனர்.

பதறினார் பெரியவர்: "டேய்..டேய்... எரிக்காதீங்கடா! எல்லாத் தப்பும் இந்தக் கோபால் செஞ்சதுதான்!"

கூவினார். பயனில்லை. இதற்குள் இல்லத்தின் உத்திராய்களும் மரச்சாமான்களும் எரிந்து ஜ்வாலிக்கத் தொடங்கின.

அந்தத் தீயை யாராலும் தடுக்க முடியவில்லை!

இப்படி இவர்கள் வடக்குத்தரை இல்லத்துக்குள் தீயிட்டு எரிக்கப் போகிறார்கள் என்பதற்காகவே காத்திருந்தார்ப்போல் ஒருசுழிக்காற்று அந்த இல்லத்தைக் குபீரென்று வளைத்தது!

அத்தனை பேரும் உள்ளுக்குள்!

தூரம் தொலைவிலிருந்த கிராமத்து வீடுகளில் பெண்களும், குழந்தைகளும் அந்தக் கும்மிருட்டில் எரியும் தீயையே வேடிக்கை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். 'எப்படி எப்படியோ வாழ்க்கை நடத்திய அந்த இல்லத்து மனுஷியும், அவளது உடமைகளும் எரிந்து பொசுங்கட்டும்!' என்பது தான் அவர்களின் மனசில் எக்காளமாக இருந்தது!

பிடித்து எரிந்த தீயே கூட மிகவும் வித்தியாசமாகத்தான் எரிந்து கொண்டிருந்தது. ஒரு சவுக்க வியூகம்!

அது உள்ளே அகப்பட்ட மொத்தப் பேரையும் எரித்து விட்டுத்தான் அடங்கும் என்கிற திருப்தியில் ஒரு யக்ஷிக் குன்றின்மீது நின்று கொண்டிருந்தாள் பத்ரா.

அப்போது அவள் பதினேழுவயதுப் பருவப் பெண்ணாக அல்ல-ஒரு ஆவேச துர்க்கையாகத்தான் தெரிந்தாள்! இல்லத்தின் குளத்தில் தனது கன்னித் தன்மையை இழந்து போன அன்றைக்கே பத்ரா தன்னையும் அழிக்க முற்பட்டது நிஜம் தான்! ஆனால் வெளியேறிய ஆத்மா, மறுபடியும் பத்ராவின் உடம்புக்குள்ளேயே பிரவேசித்து மறுபடியும் பத்ராவாகவே வாழ்ந்து..நாற்பத்து ஒருநாள் விரதமிருந்து..மனசால் பழிதீர்க்க வேண்டியவர்களை எல்லாம் பழி தீர்த்த பின்னால் கூட அதன் வெறி அடங்கவில்லை!


உருவில் பெண்ணாக இருப்பவளை அவளது விருப்பமில்லாமல் தீண்டி அசுத்தப்படுத்த நினைக்கிற காம வெறியர்களை எல்லாம் விரட்டி விரட்டிப் பழி தீர்க்க வேண்டும் என்கிற தாகத்தோடு அதே யக்ஷிக் குன்றில் ஒரு பூஜை நடத்த ஆரம்பித்தது!

அதன் யக்ஷம் பூர்த்தியான போது... ஒரு யக்ஷியாய் உருவெடுத்தது. வாலிபமும், வனப்பும் கொண்ட இளைஞர்கள் அதன் கண்களில் மாட்டினாலும்....அது அவர்களை விரட்ட ஆரம்பித்து! வசியம் செய்தது! அவர்களின் துடிக்கிற ரத்தத்தைச் சுவைத்துக் குடித்தது!


சிவாச்சாரி என்கிற ஒரு யோகியின் தபோவலிமைக்குமுன் அது சரண் அடைகிற வரை அந்த யக்ஷியின் அக்ரமம் நாடு நெடுக நடந்து கொண்டேயிருந்தது!

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஆர். அண்ணாத்துரை
வயது: 23
முகவரி: 15, வில்லியம் பிளேஸ், கல்கிசை.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா.




பெயர்: பி. கிருஷ்ணகுமார்.
வயது: 17
முகவரி: மின்னா எஸ்டேட், சாமிமலை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.




பெயர்: அஜூர்தீன்
வயது: 26
முகவரி: 131, மொரகொல்ல, வெலிமட
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ஜி. முபாரக்
வயது: 25
முகவரி: மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை.
பொழுதுபோக்கு: பேனாநண்பர் தொடர்பு.



பெயர்: ஏ. ரோஸி
வயது: 23
முகவரி: BLOCK NO. 5, STREET NO.102, HOUSE NO. 29, SALWA, KUWAIT.
பொழுதுபோக்கு: ரீவி., பத்திரிகை, நாவல், பேனாநட்பு.



பெயர்: எச். நினா
வயது: 25
முகவரி: SAUD ABDUL AZIZ SAID AL-SHANFRY, P.O. BOX. 18668, SALALAH - 211, S. OF. OMAN.
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: ஏ. ரஜானந்தன்
வயது: 18
முகவரி: 19, RUE JEAN MOINON 75010 PARIS, FRANCE
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். ஷிஜாத்
வயது: 16
முகவரி: 12, மிருந்து மாவத்தை, வேறவத்தை, பாணந்துறை.
பொ.போ: பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: மொஹமட் ஸியாம்
வயது: 20
முகவரி: 119/2, ஒகொடபொல, கஹட்டோவிட்ட.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். ராஜகரன்
வயது: 22
முகவரி: 24/3, முகாந்திரம் வீதி, மாத்தளை.
பொ.போ: பத்திரிகை. சினிமா.

பெயர்: செ. சண்முகநாதன்
வயது: 21
முகவரி: 185, கெய்சர் வீதி, கொழும்பு-11
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். அனிஸ்
வயது: 15
முகவரி: 45, கண்டிவீதி, வரக்காமுற, உக்குவளை.
பொ.போ: வானொலி, கிரிக்கெட்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

21

"உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகிறது. இல்லையா? எங்காவது வெளியூர் போயிருந்தீர்களா?" என்று கேட்டாள் தாய்.

"இல்லை. நான் சிறையில் இருந்தேன்" என்று புன்னகையுடன் பதில் சொன்னாள் அந்த யுவதி. "நிகலாய் இவானவிச்சுடன் நானும் இருந்தேன்- அவனை ஞாபகமிருக்கிறதா?"

"இல்லாமலென்ன, நன்றாய் ஞாபகமிருக்கிறது" என்றாள் தாய்; "நேற்றுத்தான் இகோர் இவானவிச் சொன்னான்; அவனை விடுதலை செய்த செய்தியை மட்டும் தான் சொன்னான். ஆனால் எனக்கு உங்களைப்பற்றித் தெரியாது..... நீங்களும் சிறையிலிருந்தீர்கள் என்று யாரும் எனக்குச் சொல்லவில்லை."

"பரவாயில்லை. சரி, இகோர் இவானவிச் வருவதற்கு முன்னால் நான் உடைமாற்றிக் கொள்ள வேண்டும்" என்று அங்குமிங்கும் பார்த்தாள்.

"உங்கள் கோட்டு முழுவதும் நனைந்து போயிருக்கிறதே."

"ஆமாம். நான் அறிக்கைகளும் பிரசுரங்களும் கொண்டு வந்திருக்கிறேன்."

"எடுங்கள் அதை, எடுங்கள்!" என்று ஆர்வத்தோடு கத்தினாள் தாய்.

அந்தப் பெண தனது கோட்டைக்கழற்றி, உடம்பைக் குலுக்கினாள். உடனே மரத்திலிருந்து இலைகள் உதிர்வது போல, காகிதங்கள் பறந்து, விழுந்தன. தாய் சிரித்துக் கொண்டே அந்தக் காகிதங்களைப் பொறுக்கத் தொடங்கினாள்.

"உங்களைப் பார்த்தவுடன் ஏன் இப்படித் தடித்துப் போய்விட்டீர்கள் என்று நான் முதலில் அதிசயப்பட்டேன். ஒருவேளை மணமாகி இப்போது கர்ப்பிணியாயிருக்கிறீர்களோ என்றுகூடச் சந்தேகப்பட்டேன். இப்போதல்லவா புரிகிறது! அடி கண்ணே இவ்வளவு கொண்டு வந்திருக்கிறீர்களா? இத்தனையையும் சுமந்துகொண்டு இவ்வளவு தூரம் நடந்தா வந்தீர்கள்?"

"ஆமாம்" என்றாள் சாஷா. மீண்டும் அவள் தனது பழைய நெடிய ஒல்லியான உருவைப் பெற்றுவிட்டாள்! அவளது முகம் ஒடுங்கி, கண்கள் முன்னைவிடப் பெரிதாகத் தோன்றுவதையும், கண்களுக்குக் கீழே கறுத்த வளைவுகள் தெரிவதையும் தாய் கண்டாள்.

"சிறையிலிருந்து இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். வந்தவுடன் கொஞ்சமேனும் ஓய்வெடுக்காமல், அதற்குள் இப்படி வேலை செய்யலாமா? யோசித்துப் பாருங்கள்" என்று தலையை அசைத்துக் கொண்டும் பெரு மூச்செறிந்து கொண்டும் அனுமதப்பட்டாள் தாய்.

"எப்படியும் இது செய்து முடிக்க வேண்டிய காரியமாயிற்றே! என்று குளிரால் நடுங்கிக்கொண்டே சொன்னாள் அந்த யுவதி. "சரி. பாவெலைப்பற்றிச் சொல்லுங்கள். அவர்கள் அவனைக் கைதுசெய்து கொண்டு போகும்போது, மிகவும் கலங்கிப் போய்விட்டானா?"

அதைக் கேட்கும்போது சாஷா தாயைப் பார்க்காமல் தலையைக் குனிந்து நடுங்கும் விரல்களால் தன் தலை மயிரைச் சீர்படுத்திக் கொண்டாள்.

"அது ஒன்றுமில்லை. அவன் ஒன்றும் தன்னைக் காட்டிக் கொடுத்து விட மாட்டான்!" என்றாள் தாய்.

"அவன் உடம்பு திடமாக இருக்கிறதா?" என்று மெதுவாகக் கேட்டாள் அந்தப் பெண்.

"அவன் ஆயுளில் அவனுக்கு நோய்நொடி எதுவுமே வந்ததில்லை" என்றாள் தாய். "அது சரி. ஆனால், நீங்கள் ஏன் இப்படி நடுங்கிக்கொண்டிருக்கிறீர்கள்? இருங்கள், கொஞ்சம் தேநீரும், ராஸ்பெர்ரி பழ ஜாமும் கொண்டு வருகிறேன்."

"அது நன்றாகத்தானிருக்கும். ஆனால், உங்களுக்கு இந்த நேரத்தில் அத்தனை சிரமம் எதற்கு? இருங்கள், நானே தயார் செய்து கொள்கிறேன்."

"சே! எவ்வளவு களைத்துப் போயிருக்கிறீர்கள், நீங்களே செய்கிறதாவது?" என்று கண்டித்துக் கூறும் தொனியில் பதிலளித்துவிட்டு, தேநீர் பாத்திரத்தை ஏற்றப்போனாள் தாய். சாஷாவும் சமையலறைக்குள் சென்று, அங்கு கிடந்த பெஞ்சின் மீது, கைகளைத் தலைக்குப்பின்னால் அணை கொடுத்துக்கொண்டு, உட்கார்ந்தாள்.

"என்ன இருந்தாலும் சிறை வாழ்க்கை ஆளை இளைத்துப் போகத்தான் செய்கிறது. சங்கடமான சோம்பேறித்தனம் இருக்கிறதே, அதைவிட மோசமானது ஒன்றுமே இல்லை. எவ்வளவோ காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது தெரிந்திருந்தும், அடைபட்ட மிருகத்தைப்போல், அங்கே சும்மா அடங்கியிருப்பது என்பது.."

"உங்கள் உழைப்புக்கெல்லாம் யார் கைம்மாறு செய்யப்போகிறார்கள்?" என்று கேட்டாள் தாய்.

பிறகு ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுத் தானே அதற்கு விடையும் கூறிக்கொண்டாள்.

"கடவுள்தான் கைம்மாறு செய்ய வேண்டும். ஆனால் உங்களுக்குக் கடவுள் நம்பிக்கையும் கிடையாது; இல்லையா?"

"இல்லை" என்று சுருக்கமாகத் தலையையாட்டி விட்டுப் பதில் சொன்னாள் அந்தப் பெண்.

"நீங்கள் சொல்வதை நான் நம்பவில்லை" என்று உணர்ச்சி பூர்வமாகச் சொன்னாள் தாய். பிறகு தன் ஆடை மீது படிந்திருந்த கரித்தூசியைக் கையால் தட்டி விட்டுக் கொண்டு, நிச்சயமான குரலில் பேசினாள்:

"உங்கள் கொள்கையே உங்களுக்குப் புரியவில்லை. கடவுள் நம்பிக்கையே இல்லாமல் இந்த விதமான வாழ்க்கை எப்படித்தான் நடத்த முடியும்?"

திடீரென வெளியில் வாசல் பக்கத்தில் காலடி யோசையும் கசமுசப்புக் குரல்களும் கேட்டன. தாய் கதவைத் திறக்கப் புறப்பட்டாள். அதற்குள் அந்தப் பெண் துள்ளியெழுந்து நின்றாள்.

"கதவைத் திறக்காதீர்கள்" என்று இரகசியமாகக் கூறினாள் சாஷா; "அவர்கள் பொலிஸ்காரர்களாயிருந்தால், என்னையாரென்று தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாதீர்கள். ஏதாவது கேட்டால், நான் இருட்டில் வீடு தெரியாமல் வழி தவறி இங்கு வந்திருந்ததாகவும், வாசல் நடையில் மயக்கமுற்று விழுந்ததாகவும் சொல்லுங்கள். பிறகு என்ஆடையணிகளை அவிழ்த்து என்னை ஆசுவாசப் படுத்திபோது இந்தக் காகிதங்களைக் கண்டதாகச் சொல்லுங்கள் தெரிந்ததா?"

"அடி என் கண்ணே! நான் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்?" என்று கனிவாய்க் கேட்டாள் தாய்.

"ஒரு நிமிஷம் பொறுங்கள்" என்று கூறிக்கொண்டே கதவருகே காதைக் கொண்டுபோனாள் தாய்; "இகோர் மாதிரி இருக்கிறது."

வந்தது இகோர்தான். அவன் ஒரே தெப்பமாக நனைந்து இளைத்துக் களைத்துத் திணறிக் கொண்டிருந்தான்.

"அடடே! தேநீர் தயாராகிறதா? ரொம்ப சரி! அம்மா, தேநீரைப்போல எனக்கு இப்போது தெம்பு அளிக்கக்கூடியது



# மக்சீம் கார்க்கி

எதுவுமில்லை. அட, சாஷாவா? நீங்கள் ஏற்கெனவே வந்து விட்டீர்களா?"

அடுப்பங்கரை முழுதும் ஒலிக்கும் குரலில் கொரட்டு கொரட்டென்று மூச்சுவிட்டபடி, இடைவிடாது பேசிக் கொண்டே, தன்னுடைய கனத்த கோட்டை மெதுவாகக் கழற்றினான்.

"அம்மா, இதோ இருக்கிறாளே, இந்தப் பெண்ணைக் கண்டால் அதிகாரிகளுக்குப் பிடிப்பதே இல்லை. சிறைக் காவலாளி இவளைக் கண்டபடி பேசத் துணிந்தான் என்பதற்காக அவன் மன்னிப்புக் கேட்கிறவரையில் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கிவிட்டாள் இவள். எட்டு நாட்களாய் இவள் எதுவுமே சாப்பிடவில்லை. உயிர்தான் போகவில்லை. கெட்டிக்காரி தானே? என் வயிற்றையும் தான் பாரேன்."

அவன் தனது தொப்பை விழுந்து பெருத்த தொந்தி வயிற்றை நிமிர்த்தி நடந்தவாறே அடுத்த அறைக்குள் போனான். அறைக்கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போகும்போதும் அவன் பேசிக்கொண்டே தானிருந்தான்.

"நீங்கள் என்ன எட்டு நாட்களாகவா சாப்பிடவில்லை? உண்மையாகவா?" என்று அதிசயத்தோடு கேட்டாள் தாய்.

"அவனை மன்னிப்புக்கோர வைப்பதற்கு நானும் ஏதாவது செய்தாக வேண்டியிருந்தது" என்று குளிரால் நடுங்கிக் கொண்டே சொன்னாள் அவள். அந்தப் பெண்ணின் உறுதியும் உக்கிரமும் நிறைந்த பேச்சில் ஏதோ ஒரு கண்டன பாவமும் தொனிப்ப தாகத் தாய்க்குத் தோன்றியது.

"இவள் குணம் இப்படி!" என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் தாய்.

"நீங்கள் செத்துப் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்?" என்று கேட்டாள் பெலகேயா.

"செத்தால் சாகவேண்டியதுதான்" என்று மெதுவாகச் சொன்னாள் அவள். "ஆனால், அவன் மன்னிப்புக் கேட்டு விட்டான். நம்மைப் பற்றி ஒருவன் கேவலமாகப் பேசும்படி நாம் விட்டுவிடக் கூடாது."

"ஊம்!" என்று மெதுவாக முனகினாள் தாய்; "ஆண்கள் எல்லோருமே அப்படித் தான்-பெண்களாகிய நாம் வாழ்நாள் முழுதும் அவர்களிடம் கேவலப்பட வேண்டியதுதான்."

"சரி. நான் என் மூட்டையை இறக்கித் தள்ளியாய் விட்டது" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தான் இகோர்.

"தேநீர் தயாரா? சரி, இருங்கள். நான் அதை இறக்கி எடுக்கிறேன்."

அவன் தேநீர்ப் பாத்திரத்தை அடுத்த அறைக்கித் தூக்கிக்கொண்டு போனான்; கொண்டு போகும்போதே அவன் சொன்னான்:

"என்னைப் பெற்ற அருமை அப்பன் இருக்கிறாரே. அவர் ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் இருபது குவளை தேநீராவது குடிப்பார். அதனால்தான் அவர் ஆரோக்கிய திடகாத்திரத்தோடு அமைதியுடன் வாழ்ந்தார். 120கிலோ எடையுள்ள உடம்போடு வஸ்க்ரெசேன்ஸ்க் ஊர்த் தேவாலயத்துப் பாதிரியாக வேலை பார்த்து, எழுபத்து மூன்று வருஷம் உயிரோடிருந்தார்."

"நீங்கள் இவான் சாமியாரின் மகனா?" என்று கேட்டாள் தாய்.

"ஆமாம், ஆமாம். என் தந்தையை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நானும் வஸ்க்ரெசேன்ஸ்க் ஊர்க்காரி தான்."

"அடடே! நீங்கள் என் ஊர்க்காரரா? சரி, நீங்கள் யார் மகள்?"

"உங்கள் அடுத்த வீட்டுக்காரரான செரியோகின் தம்பதிகள் தான் என் பெற்றோர்."

"நொண்டி நடக்கும் நீல்லின் மகளா நீங்கள்? எனக்கு அவரை நன்றாய்த் தெரியுமே! எத்தனை தடவை அவர் என் காதைப்பிடித்துத் திருகியிருக்கிறார், தெரியுமா?"

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டே சரமாரியாகக் கேள்வி கேட்டுக்கொண்டார்கள். தேநீரை வடிகட்டிக் கொண்டிருந்த சாஷா புன்னகை செய்தாள். கோப்பைகளின் ஓசை தாயை மீண்டும் சூழ்நிலையின் பிரக்ஞைக்கு இழுத்து வந்தது.

"ஓ! என்னை மன்னித்துவிடுங்கள். எல்லாம் எனக்கு மறந்தே போய்விட்டது. சொந்த ஊர்க்காரர் யாரையாவது சந்திப்பது என்றால், ஒரே மகிழ்ச்சி."

"இல்லை. மன்னிப்புக் கேட்க வேண்டியது நான்தான். நான் பாட்டுக்கு இங்கேயே பொழுதைப் போக்கிவிட்டேன். மணி பதினொன்று ஆகிவிட்டது. இன்னும் நான் வெகுதூரம் நடந்து செல்ல வேண்டும்!" என்றாள் சாஷா.

"எங்கே போகிறீர்கள்? நகருக்கா?" என்று வியப்புடன் கேட்டாள் தாய்.

"ஆமாம்."

"எதற்காகப் போக வேண்டும்? ஒரே இருட்டாயிருக்கிறது. ஒரே ஈரம். களைத்துப் போயிருக்கிறீர்கள்! இரவு இங்கேயே தங்கிவிடுங்கள். இகோர் இவானவிச் சமையல் கட்டிலே தூங்கட்டும். நாமிருவரும் இங்கேயே படுத்துக் கொள்ளலாம்."

"இல்லை. நான் போய்த்தானாக வேண்டும்" என்றாள் சாஷா.

"துரதிருஷ்டவசமாக, அவள் போய்த்தான் ஆக வேண்டியிருக்கிறது. அவளை இங்கு எல்லோருக்கும் தெரியும். நாளைக்குக் காலையில் அவளை யாரும் தெருவில் பார்த்துவிடக் கூடாது" என்றான் இகோர்.

"ஆனால் எப்படிப் போவது? தனியாகவா?"

"ஆமாம். தனியாகவேதான்!" என்று சிறு சிரிப்புடன் சொன்னான் இகோர்.

அந்தப் பெண் ஒரு கோப்பையில் தேநீரை ஊற்றினாள். ஒரு கறுத்த ரொட்டியின் மீது உப்பைத் தடவிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள். சாப்பிடும்போது தாயையும் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டாள்.

"நீங்களும் நதாஷாவும் எப்படித்தான் துணிந்து போகிறீர்களோ? நானாயிருந்தால் போகவே மாட்டேன். எனக்கு ஒரே பயந்தான்!" என்றாள் பெலகேயா.

"இவளுக்கும் பயம்தான்" என்றான் இகோர். "என்ன பாஷா, பயந்தான்!" இல்லையா?"

"இல்லாமலிருக்குமா? பயம்தான் என்றாள் அந்தப் பெண்.

தாய் அவளையும் இகோரையும் பார்த்தாள்.

"நீங்கள் எல்லாம் என்ன பிறவிகளோ, அம்மா!" என்று அதிசயித்தாள் தாய். (தொடர்ந்து வரும்)

# காதல் சடலம்



## சர்மிளா இஸ்மாயில்

பஸ்ஸினுள் ஏறும் மாணவமாணவியர் கூட்டத்தையே பார்த்தவாறு சஹானாவும் ரகுவும் உட்கார்ந்திருந்தார்கள். "ம்..பள்ளிப் பருவம். எத்தனை இனிமை! இளமை!" சஹானா முணுமுணுத்தாள். ரகு ஆமோதித்தான்.

"ஏய் ரகு, அந்த கேர்ள் ரொம்ப ஸ்வீட்டா இல்லை?" வெள்ளைச் சீருடையில் வெண்புறாவாக வந்த இளம் மாணவி சஹானா விளித்தாள். கணநேரம் பார்த்தவன் மெதுவாகச்சிரித்து தலையை ஆட்டினான். "உஹூம், உன்னை விட ஸ்வீட் இல்லை." மறுத்தான் ரகு. "ஆ..இந்தா..ஐஸ் வைத்தது போதும். குளிர் காய்ச்சல் வந்திடும்" என சிரித்தாள் சஹானா.

"ஸ்கூல் படிப்பு முடிஞ்சு ஒரு வருஷம் தான். ஆனாலும் இவங்களையெல்லாம் பார்க்கறப்போ எனக்கென்னமோ ரொம்ப வயசு போனமாதிரி ஒரு ஃபீலிங். அந்த துள்ளல், துடிப்பு இதெல்லாம் இப்போ முடியுதா?" சஹானா அலுத்துக் கொண்டாள். "ம்....பெரிய்ய பாட்டி ஆயிட்டாங்க. ரொம்ப வயசுபோல இருக்கு. இது தெரியாம நான் காதலிக்க தொடங்கிட்டேனே. ஐயோ" என தன் தலையில் அடித்துக்கொண்டு சிரித்தான் ரகு. முகம் சிவந்தாள் சஹானா.

தொடர்ந்த நாட்களில் ரகு உயர் படிப்புக்கென கொழும்பு செல்ல, பிரிவால் துடித்துப் போன சஹானாவுக்கு அரசாங்கத் தொழில்கிடைத்தது, ஆறுதல் சிறிது தந்தது. நாளாந்த பயணங்களில் அந்த சீருடைப் பெண்ணின் நட்பும் கிடைத்தது. உயர்தரம் படிக்கும் பெண் அவள். நட்புக்கு மிக இனியவள். சஹானா நேரிடையாகச் சொன்னாள். "நீங்க ரொம்ப அழகு. அதோட ஐஸ்வர்யா ராயின் கண்கள் மாதிரி உங்கள் கண்கள். எனக்கு ரொம்பவும் உங்கள பிடிச்சிருக்கு" "சீ, போங்கக்கா. உங்களுக்கு வேற வேலை இல்லை. என்னைப் போய் அழகுன்னு சொல்லிக்கிட்டு. கண்ணாடி போட்டுக்குங்க. அப்ப சொல்ல மாட்டீங்க". போலியான கோபத்துடன் முணுமுணுத்தாள் அந்தச் சிறு பெண். சிரித்தாள் சஹானா.

ரகுவுக்கு கூட கடிதத்தில் எழுதினான். "அந்த ஐஸ்வர்யா (அதே பெயரையும் அவளுக்கு சூட்டிவிட்டாள். அப்படியே கூப்பிடவும் செய்வாள்!) இப்போ என்னோட ரொம்ப சிநேகம். நல்ல பெண்.உங்கள் பிரிவைத் தாங்க அவளின் நட்பும் சிறு உதவி புரிகின்றது....."

காலங்கள் ஓட....ரகுவுக்கு கடிதங்கள் பல போட்டும் பயனில்லை. மௌனமே! ஆரம்பத்தில் ஒழுங்காக வந்த பதில்கள் காலப் போக்கில் இடைநின்ற சோகத்தில் புதையுண்டு போனாள் சஹானா. காரணமே தெரியவில்லை. முயற்சித்தும் பலனில்லை.

"என்னக்கா ஒரு மாதிரியாயிருக்கீங்க?" ஐஸ்வர்யா கேட்ட போது திகைத்தாள். என்னவென்று சொல்வது? முடியவில்லை. சமாளித்தாள்.

திடீரென ஒருநாள் கடிதம் வந்தது அவனிடமிருந்து. "உங்க அப்பா, அம்மா பார்த்து பேசியிருக்கின்ற மாப்பிள்ளைக்கு தலையாட்டி விட்டு திரும்பவும் எனக்கு ஏன் கடிதம் போடுகிறாய்? உன்னை நம்பியதற்கு எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். என்னை நீ விரும்பியிருந்தால் ஏன் உன்னை அவர்கள் பெண் பார்க்க வரும் போது பேசாமலிருந்தாய்? என்னைப் பற்றி உன் பெற்றோரிடம் சொல்ல ஏன் தயக்கம்? இன்னொருத்தன் தன்மனைவியாக உன்னை மனதில் எண்ணி பெண் பார்த்துப் போனபின் நீ என்னை முடிப்பதில் அர்த்தமில்லை. அவனையே கட்டிக்கொள்...."

என மொட்டையாக ரகு எழுதியதைக் கண்டு அதிர்ந்து போனாள்.

உண்மைதான். அவளைப் பெண் பார்த்துப் போனது உண்மைதான். சஹானாவும் பெற்றோர் மனதை புண்படுத்த விரும்பாது அதை ஒத்துக் கொண்டாள். அது மட்டுமல்ல தன் காதலை சொல்லவும் தயக்கமாய் வேறு இருந்தது. தேவை ஏற்படின் அந்த பொருத்தமான நேரத்தில் சொல்லி விடலாம் என நினைத்திருந்தாள். இதற்கிடையில் ரகுவின் படிப்பும் முடிந்து நல்லதொரு தொழில் கிடைத்ததும் சொன்னால் பெற்றோர் மறுதலிக்க காரணமே இருக்காது என நினைத்தும் இருந்தாள். ஆனால்..?

நினைப்பதொன்று நடப்பதொன்று. யாரோ இல்லாததையும் பொல்லாததையும் ரகுவிற்கு எழுதிவிட அவன் நம்பிவிட்டான். என்னைப் புரிந்து கொண்டதாகச் சொன்ன ரகுவா இப்படி புரியாமல் போனது என எண்ணியழுதாள் சஹானா. "யாரோ எதுவோ எழுதிவிட்டால் நம்புவதா? என்னை சந்தித்து உண்மை வினவக் கூடாதா? காரணம் சொல்லியிருப்பேனே. அதை விடுத்து இப்படி!" தன் நிலை விளக்கியும் அவன் அதை ஏற்றுக் கொள்வதாயில்லை. சஹானாவுக்கு வாழ்வே கசந்தது. பொறுத்தாள். மனம் மாறுவான் என காத்திருந்தாள். காலம் வருடமாய் மாறி உருண்டது.

"அக்கா, எனக்கு கல்யாணம் பேசிட்டாங்க." ஐஸ்வர்யா சொல்ல சந்தோஷித்தாள் சஹானா. "ரொம்ப சந்தோசமடி பெண்ணே." இன்விட்டேஷனைப் பிரித்தவள் வரிகளைப் படித்தாள். இதயம் ஒரு கணம் இயங்க மறுத்தது. கழுத்துக்கும் நெஞ்சுக்குமாய் ஏதோவொரு பந்து உருண்டது. நெருப்பு, அக்னி, தீ என மனது எரிந்தது. கண்ணீர் மட்டும் வராமல் நின்று போனதில் அவளுக்கே ஆச்சரியம். "ம்ஹூம்... உன்னைவிட ஸ்வீட் இல்லை?" ரகுவின் குரல் எதிரொலிப்பதாய் உணர்ந்தாள்.

கல்யாணக் கோலத்தில் நின்ற ஐஸ்வர்யா'ஹலோ' சொன்னாள். அவன், தான் கொஞ்சம் அதிர்ந்து பின் நிதானித்ததையும் அவதானித்தாள். இருவரையும் வாழ்த்தி அவள் மெதுவாக வெளியிறங்கி வந்தாள். "எப்படி ரகு உங்களுக்கு இப்படி செய்ய முடிந்தது?"

கல்யாண வீட்டின் நெரிசல், வியர்வை, புழுக்கம் எதையுமே இலட்சியம் செய்யாத உடல் இப்பொழுது அதிகமாய் வியர்த்தது. வேகவேகமாய் போனவளை நடைபாதையோர பிச்சைக்காரியின் குரல் தடுத்தது. கைப்பையைத் திறந்தவள் கையில் பத்து ரூபாய் தாள் சிக்கியது. குனிந்து கொடுத்தாள்.

"நீங்க நல்லா, மனம் நெறஞ்சு வாழணும்ங்க அம்மா. உங்களுக்கு அந்த ஆண்டவன் அருளால எந்தக் குறையும் வராது. கவலையும் வராது. எல்லாம் நல்லதுக்குதாம்மா நடக்கும்." பிச்சைக்காரியின் வார்த்தைகள் அவளைத் தொடர்ந்தன. "எப்படி ரகு இப்படி செய்ய மனம் வந்தது?" கேட்டுக் கொண்டேயிருந்தாள். பதிலில்லை!

**"இறந்தகாலம் காதலுக்கு மட்டும் இல்லை-அது**
**இருந்தாலோ அதற்கு பேர் காதலில்லை."**

வாசித்த வரிகள் நெஞ்ச மதைச் சுட்டுவிட மௌனமாய் இருக்கிறாள் சஹானா.

# சிறுகதை



# ஷாமா சந்திரனா?

## அம்தரவல்ல நிலாவாசன்

"நான் தான் ஷாமா"

"ஷாமா....?"

"ம்... உங்க 'மொட்டைக் கடிதம்' கதைய தினமுரசில படிச்சேன். உங்களுக்கு மொட்டையா கடிதம் எழுதியது நான் தான்."

ஒரு ஸ்டுடண்ட் போல் வந்து அவன் முன்னால் உட்கார்ந்து அழகாகப் பேசும் அந்தக் கன்னியை கண் வாங்காமல் பார்த்தான் ஷானாஸ். ஹோலிவூட் நடிகை அலிஸனின் கண்களும் ஹொலி ஃப்ளோரியாவின் மென்மைச் சிரிப்பும் அவளுக்குள் அடக்கமாகி இருக்க மஞ்சளையும் மாவையும் சேர்த்துக் குழைத்த நிறத்தில் அவள் உடலை செதுக்கியிருந்தான் பிரம்மன்.

அவன் புகைத்த 'கோல்ட் லீவ்' ஐ ஆஷ்ட்ரேயில் அமுத்தினான். மணியடித்து பியோனை அழைத்து ஒரேஞ்ஜ் ஜூஸுக்கு ஓடர் கொடுத்தான். "அப்போ தினமுரசு கதைக்கு கைமேல் பலன் கிடைச்சிருக்கு. அது சரி, ஏன் மொட்டைக் கடிதம் எழுதினீங்க?" என்றான்.

அவள் எளிமையாக இதழ் விரிக்க அவன் இதயத்தில் பூச்சொரிந்தது. புன்னகை நிறைந்த முகத்தில் சந்தோஷத்தை விதைத்துக் கொண்டு சொன்னாள். "முகத்துக்கு முன் புகழ்வது முகஸ்துதி இல்லையா?"

அவன் சிரித்தான். ஒரேஞ்ஜ் ஜூஸ் வர அவளுக்கு எடுத்து வைத்து விட்டு "அப்புறம்" என்றான்.

"ஒன்டு கேட்க வேணும்."

"ஏன்..... ரெண்டும் கேட்கலாம்."

இதழ் விரித்தவள் "ஏன் சிகரட் குடிக்கிறீர்கள்?" என்றாள்.

"குடிக்கவில்லை, புகைக்கிறேன்."

திரும்பவும் அதே புன்னகை. அவன் இதயத்தில் அதே தென்றல்.

"சரி, ஏன் புகைக்கிறீர்கள்?"

"புகைக்காமல் குடிக்கவா முடியும்?"

இந்த முறை புன்னகை கொஞ்சம் மிகையாகத் தெரிந்தது. அவனைக் கீழ்க் கண்ணால் பார்த்தாள். அந்தக் கவர்ச்சி அவனை ஆட்படுத்தியது.

"அப்புறம் என்னைத் தேடி வந்ததில் ஏதாவது காரணம் இருக்கா......?" என்றான் தன்னை சுதாகரித்துக் கொண்டு.

"என்னை மன்னிக்கணும்."

"மன்னிச்சாச்சு."

"தாங்ஸ்... என்ன... என்னைப் பிடிச்சிருக்கா?"

"நிறைய... நிறைய... கதைத்துக் கொண்டிருந்தால் நேரமும் போகும். என் வேலையும் போகும்."

"அப்போ என்ன விரட்டுறீங்களா?"

"எதுக்கு விரட்டணும்? நீங்களாக போக மாட்டீங்களா?"

அவள் முகத்தில் திடீர் மழை மேகம் திரையிட்டது.

அவன் புன்னகைத்தான். "ஃப்ராங்கா பேசினா ஏன் கோபப்படுகிறீர்கள்?" என்றான்.

"கோபமில்லை."

"அப்போ வெறுப்பா?"

"அப்படியும் இல்லை."

"அப்போ நான் ஒரு கணக்குப் போடுகிறேன். விடுவியுங்கள்".

அவள் புன்னகை மாறாமல் "ம்.." என்றாள்.

"ஒரு எஜமான் தன் சேவகனிடம் இரண்டு கோழிகளைக் கொடுத்து விற்று வரச் சொன்னான். சேவகனும் இரண்டு கோழிகளையும் இருவருக்கு பன்னிரண்டு ரூபா ஐம்பது சதம் வீதம் விற்று இருபத்தைந்து ரூபாவை எஜமானிடம் கொண்டு வந்து கொடுத்தான். பணத்தைப் பெற்றுக் கொண்ட எஜமான் அதில் ஐந்து ரூபாவை சேவகனிடம் கொடுத்து கோழியை வாங்கிய இருவருக்கும் ஒவ்வொரு ரூபாய் வீதம் கொடுத்துவிட்டு மிகுதி மூன்று ரூபாவை அவனை வைத்துக் கொள்ளச் சொன்னான். எஜமான் சொன்னபடியே சேவகனும் நடந்து கொண்டான். அப்படி என்றால் கோழியை வாங்கியவர்கள் கோழிக்கு என்ன விலை கொடுத்தார்கள்?"

"பன்னிரண்டு ஐம்பது கொடுத்துத் திரும்பவும் ஒரு ரூபாவைப் பெற்றுக் கொண்டால் பதினொன்று ஐம்பது."

"ஆக இரண்டு கோழிக்கும் என்ன, விலை?"

"இருபத்தி மூன்று."

"இப்போது கவனமாகக் கேளுங்கள். சேவகனிடம் இருக்கும் மூன்று ரூபாயுடன் கோழியை விற்ற காசையும் சேர்த்தால் இருபத்தியாறு ரூபாய். மொத்தக் கணக்கே இருபத்தைந்துதான். எப்படி இருபத்தியாறு?"

அவள் மூளையைக் குழப்பினாள். வெண்டிக்காய் விரல்களைச் சொடுக்கினாள். "உங்கள் ஆபீஸ் தேடி வந்து 'அப்பொயின்ட்மன்ட்' எடுத்து காத்திருந்து 'மீட்'பண்ணியதற்கு நல்ல தண்டனை. ஆனால் மீண்டும் விடையோடு 'மீட்' பண்ணுகிறேன்....." என்றவள் அதே புன்னகை மாறாமல் "குட்பை" சொல்லி வெளியேறினாள்.

ஷானாஸ் அடக்க முடியாமல் சிரித்தான்.

"சிரி சிரி நன்றாகச் சிரி..." என்றது ஒரு குரல்.

"நீ யார்."

"உன் மனச்சாட்சி. ஷாமா சந்திரன் டா. பூப்போல அவ மனச உடைய வச்சிட்டியே."

"உடைய வைக்கல்ல. முடிச்சுப் போட்டு அனுப்பி இருக்கேன். விடை தெரிஞ்சா வருவா."

"உன் கணக்குக்குத்தான் விடையில்லையே."

"அப்போ வரமாட்டா."

"நீ எல்லாம் ஒரு ஆம்பிள. மீசை எதுக்கு?"

"வளர்ந்தா ஷோர்ட் பண்ணிக்கலாம்."

"உன்னத் திருத்த முடியாது."

"டேய் மனச்சாட்சி! மனசுக்குள் தான் உன் ஆட்சி இருக்கணும். புரிஞ்சுதா?"

"மனுஷனுக்கு காதல் தாண்டா முக்கியம். அந்தப் பொண்ணக் காதலி. உலகமே உன் காலடியில் இருக்கும்."

"நம்பக் கூடாது. வாக்குறுதிகளால் மாளிகை கட்டுகிற ஜாதி. அப்புறம் கிடைக்கிற கொழுத்த கொம்பின் குடைக்குக் கீழ் மணமகளாக மாறுகிற ஜாதி."

"அனுபவம் பேசுதா?"

"இதுதான் உலகத்து உண்மை. தெரியுமா?"

உள்ளுக்குள் ஒரு பெரு மூச்சு எழுந்தது. மனச் சாட்சியின் கோபம் புரிந்து சிரித்தான் ஷானாஸ். மீண்டும் சிகரட் பற்றவைத்தவன்...

"சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே..."

என்று விவேக சிந்தாமணியுடன் சேர்ந்து தனக்குள் சொல்லிக் கொண்டான்.

# இயற்கைக்கு நேரமில்லை



"ராத்தா...வா ராத்தா பாட்மின்டன் விளையாடுவோம்." ஒன்பது வயது நிரம்பாத சப்ராஸ் தனது றோஸ் நிறவுதடுகளை அழகாய் விரித்து, ஆப்பிள் நிறத்தேகத்தை யதார்த்தமாய் சிலிர்த்து, செம்பட்டைத் தலைமயிரைக் கோதிக்கொண்டே கேட்டான்.

"வா ராத்தா...விளையாடுவோம்."

"ம்ஹூம்.....எனக்கேலாது."

அவித்த வெரலிக்காயை மிளகாய்த் துவையலில் போட்டுப் புரட்டி ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்த....சாமிலா அலட்சியமாகச் சொல்ல.....

"வா ராத்தா..."

"ஏலாண்டு சொல்றேனில்ல."

"அப்போ வா கிட்டிப் புள்ளும் கிளித்தட்டும் வெளையாடுவோம்."

சாமிலா மவுனமாக வெரலிக்காயை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

சப்ராஸ் வந்து அருகில் நின்று கொண்டான்.

"அப்போ....வயலுக்குப் போய் பட்டம் விடுவோம் வர்றியா ராத்தா."

"எனக்கேலா...நீ வேணுமின்னாப் போ....."

சாமிலா கடுமையாகச் சொல்ல...கடிந்து கொள்ள, சப்ராஸ் அழத்துவங்கினான்.

"நான் உன்னோட அச்சுப் புச்சு ஆறு மாசம் கோபம்...நீ போ. நான் உம்மாக்கிட்டச் சொல்றேன்." சொல்லிக் கொண்டே -அழுதுகொண்டே சப்ராஸ் நகர்ந்து போக....

பதினேழாவது வயதின் ஆரம்பத்தில் இருந்த சாமிலா....மிளகாய்ப் பொடித் துவையல் வைத்த பேப்பர் துண்டையும் தன் நாவால் ஈரப்படுத்தி அதையும் ருசித்துச் சப்பிக்கொட்டினாள்.

சாமிலா நல்ல நிறம். செழுமையான தேகம். அடர்த்தியான கூந்தல். ஆனால் தாவணியோ, சல்வாரோ அளவுக்கு அவள் தேகமோ, வயதோ, பெண்மையோ இன்னும் பக்குவப்படவில்லை. பருவம் அவளை ஓரமாக வைத்து ஒதுங்கிப்போக, எதையும் அறியாத வெகுளியாய்...இன்னும் சின்னப் பிள்ளையாட்டம்...எல்லாவற்றுக்கும் சிரித்துக்கொண்டு..

உம்மா கவலைப்படத் தொடங்கியது, மனதுக்குள் அழத்தொடங்கியது, சாமிலாவுக்குத் தெரியாது. தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால்....உம்மாவோடு சேர்ந்து வாப்பாவும் மனதுக்குள் நொந்தது நியாயம்தான். பூப்பூக்கும் நந்தவனம் இன்னும் பூப்பெய்தாததில் அவர்களுக்கு நிரம்ப வருத்தம்தான். என்றாலும் என்ன செய்ய?

அன்றொருநாள்;

உம்மா- வாப்பாவிடம் இரகசியமாகச் சொன்னதை சாமிலா கேட்கத்தான் செய்தாள். ஆனாலும் எதுவுமே புரிந்தும்

**மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்**

புரியாத நிலையில்....சாமிலா எதற்கும் கவலைப்படவில்லை.

"ஏங்க...எனக்குப் பதிமூன்று வயசு நடக்கும்போதே நான் மனுசியாயிட்டேன். இருபது வயதுல ஒரு பிள்ளைக்குத் தாயுமாயிட்டேன்...ஆனால் சாமிலா இன்னும் பட்டுப்போன மரம்மாதிரி....எனக்குப் பயமாயிருக்கு...யாராவது டாக்டரிட்டக்கூட்டிப் போகலாமங்க....."

"வேணாம் ராபிதா....இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். ஏன்னா இயற்கையை விடப் பெரிதாக டாக்டரால என்ன செய்ய முடியும்? சொல்லு. செடிக்கு தண்ணீர் வேணும்னா ஊத்தலாம்....ஆனால் பூக்க வைக்க முடியாது ராபிதா....."

அந்நேரம் ராபிதா மௌனமாகிப் போனாள்.

சாமிலா மிளகாய்த் துகள்பட்டு ஈரலிப்பாயிருந்த வெற்றுப் பேப்பர்த் துண்டைத் தூரமாக எறிந்தாள். கடைசியாக எஞ்சியிருந்த வெரலிக்காய் வாய்க்குள் துண்டுகளாகிக் கொண்டிருக்க...பக்கமாயிருந்த வாழைமரத்தில் வாழையிலையொன்றை எம்பிப் பிடித்து...இழுத்து தன் கையைத் துடைத்துக் கொண்டாள்.

உம்மா அழைப்பது கேட்டது.

"சாமிலா ஏய் சாமிலா...."

"என்னம்மா?"

முற்றத்தில் இருந்தே குரல் கொடுத்தாள்.

"இங்க பாருடி....த்தா...தம்பியைக் கொஞ்சம் கூட்டிட்டு வெளையாட்டுக் காட்டேன். நான் அடுக்களையில வேலையாயிருக்கேன்...வாயேன்."

"தம்பியை இங்கே வரச்சொல்லுங்க!"

தம்பி சப்ராஸ் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு ஓடி வர,

"உம்மாக்கிட்ட போய் கோள் சொன்னியா?"

"இ...ல்ல!"

"என்ன வெவ்வே..."

சாமிலா சப்ராஸின் முதுகில் இலேசாய்த் தட்ட, அவன் இவளைத் தன் சின்னக் காலால் உதைக்க, இவள் மீண்டும் அவனது காதைப் பிடித்து இலேசாய் இழுக்க....அவர்களுக்குள் ஒரு சில்லறைச் சண்டை உருவானது.

சப்ராஸ் சாமிலாவைப் பிடித்து பலமாகத் தள்ளிவிட,

சாமிலா "உம்மா!" என்று கதறியவளாய்...கால் இடறி அந்தப் பூஞ்செடியோரமாய்ப் போய் விழுந்தாள். விழுந்த வேகத்தில் ஏதோவொரு உணர்வில்.....அவளது இடுப்புப் பகுதியில் கவுணுக்கு மேலாக தண்ணீர் மாதிரி.....இரத்தம்....

சப்ராஸ் பயத்தில் உறைந்து போனான்.

சாமிலாவின் குரலுக்குப் பயந்தவளாய் உம்மா பதறியபடி ஓடிவந்தாள்.

சப்ராஸ் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"என்னடா பண்ணினே அவளை...." உம்மா சப்ராஸைப் பார்த்துமுறைத்தபடியே....பூச்செடிக்குள் பூக்குவியலாய் விழுந்திருந்த சாமிலாவின் கரம்பற்றித் தூக்க...உம்மாவின் கண்கள் அகல விரிந்தன.

நெஞ்சு படபடக்க...சாமிலா ஏதோ பயமாய்...எதையுமே உணர முடியாமல்...

உம்மாவின் சந்தோஷக் கண்களில் ஒளி வெள்ளம் படர்ந்து கண்ணீர் கோடிட்டுப் போக..உடனே சாமிலாவை அணைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

சாமிலாவை அழைத்துக்கொண்டு உள்ளே போன உம்மாவையும், சாமிலாவையும் நெடுநேரம் எதுவுமே புரியாமல் அச்சமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் சப்ராஸ். பார்த்துக் கொண்டேயிருந்தான்.

'ஏன் ராத்தாவுடைய உடுப்பெல்லாம் இரத்தம்....? ஏன் உம்மா அழுதுட்டுப் போறா....? ராத்தாவுக்கு என்னமாகிலும் ஆகி...வாப்பா வந்து என்னை அடிப்பாரோ....ராத்தாவுக்கு எதுவுமே ஆகக்கூடாது. ராத்தாவுக்கு ஒன்னும் ஆகக் கூடாது.'

சப்ராஸ் வெடவெடத்து நடுங்கிக் கொண்டே, அவன் கண்களிலும் கண்ணீர் குளமாகிப் போக;


எட்டிப் பார்த்த எதிர் வீட்டு மாமியிடம் "மதினி சாமிலா மவள் சடங்காயிற்றாள்....பெரிய மனுசியாயிட்டாள்." என்று உம்மா சொன்னது அந்தச் சின்னவனுக்கு புரியாமல்....விளங்காமல்....

அச்சம் அவனை முழுமையாக ஆட்கொண்டது.

அந்தச் சின்ன மனதில் விசாலமாய் ஒரு பயம் படர்ந்தது.

'வாப்பா வந்து என்னை அடிப்பாரோ?'

-அவனையறியாமலேயே உடம்பு சிலிர்த்துப் போனது.



# உனக்கு நிலா என்று பெயர்

## கன்ஸியா

நிலா உச்சிக்கு ஏறி நின்றது. சூழவும் கொட்டிகிடக்கும் நட்சத்திர மணிகள் பளிச் பளிச்சென்று கண்ணடித்தன. கிட்டத்தட்ட காற்றும் உறங்கிவிட்டமாதிரி இயற்கை 'உம்'மென்று கிடந்தது. 'நிலா' அவன் மடிக்குள் சுருண்டு கனவுலகம் சென்றவள் அந்த மெல்லிய அழைப்பால் துள்ளி எழுந்தாள். "என் பேரு நிலா இல்லன்னு தெரியும்தானே" முகம் நிறைய பொய்க் கோபம் காட்டினாள். அதுவே இலட்ச அழகாய் இருந்தது. அவன் மனசுக்குள் விழுந்து விழுந்து சிரித்தான். அதன் பிரதிபீடாய் கடைவாயில் புன்னகை கசிந்தது. அவள் கூந்தலில் கை புதைத்து கோதினான். "நான் ஒனக்கு வச்ச பேரு நிலா. ஏன் தெரியுமா?" "தெரியா", சூடாய் பறந்தது. "வானம் ஒண்ணு, நிலா ஒண்ணு, சூரியனும் ஒண்ணு, பூமியும் ஒண்ணு. நான் வானம்! என்னில் ஒளிவீசும் நீ நிலா!" அவள் விழுங்கி, விழிகள் கலங்க அவன் முகம் நோக்கினாள். கரங்களை எடுத்து உதடுகளில் ஒற்றிக் கொண்டாள்.

"என்மேல அவ்வளவு நேசமா" "ம்" என்ன "ம்" நேசம் மட்டுமல்ல. உன் மேல வெறி, சாதாரண வெறியில்ல, ஒன்ன யாரு நினச்சாலும் அவன கொல்லணும் என்கிற வெறி," அவள் மௌனமாய் அவன் மார்பில் சாய்ந்து கண்மூடினாள். அவன் அவள் முதுகு வருடி சின்னக் குழந்தையை தேற்றுவதைப் போல், ஆதுரமாய் தடவினான். "ரமீஸ் இப்ப நீங்க ஏன் பேப்பர்ல எழுதுறதில்ல?" "எல்லாமே நீயாகி எனக்குள்ள அத்வைதமான பின்பும் உன்னுடைய பெயரிலேயே இனி எழுதப் போறன்." "ப்ளீஸ் ஒரு கவிதை சொல்லுங்க." செல்லமாய் முறைத்தாள். "சொல்லாட்டி" அவன் சீண்டினான். "போய்டுவேன்" "சரி போயேன்." விர்ரென்று எழுந்தாள். ஓர் அடிதான் நகர்ந்திருப்பாள் அவள் பாதங்கள் சறுக்கின. தாவணிபிடித்து இழுத்தான். மீண்டும் மடியில் சரிந்தாள். "கவிதைதானே வேணும்." மல்லாந்து படுத்திருந்தவளின் முகத்தினருகே குனிந்தான்.

"ச்சீ சுத்த மோசம்." உதட்டை கடித்துக் கொண்டாள். அவன் மெல்லிய குரலில் அவள் காதருகே கவிதை முணுமுணுத்தான்!

**தென்னங்கீற்றும்**
**அதன் வனப்பும்**
**நீலவானும்**
**அதன் சிரிப்பும்**
**பூக்கள் சிந்தும்**
**குறுநகையும்**
**பச்சை புல்லும்**
**அதன் பசையும்**
**உன்னை விடவும்**
**குளிரல்ல-நீ**
**என் உள்ளம் நிறைந்த**
**பனிமுல்லை.**

"வாவ் வொண்டர்புல்", துள்ளியெழுந்தவளை அமுக்கினான். "வெறும் வார்த்தைகளால் சமாளிக்க முடியாதம்மா!" "ம்" அவன் கன்னம்தொட்டு காட்ட அவள் முகம் சிவந்து, பிகு பண்ணி, அன்புத்தொல்லையால் அவசரமாய் ஒரு 'இச்' பதித்து விட்டு குதித்தோடினாள். அவள் சென்றதின் பின்னும் அவளின் தேக வாசம் கிறங்கடித்தது. அப்படியே இருந்தான். விழிகள் மூடி மோனத்தில் கிடந்தான். அன்று மட்டுமா? இன்றுவரை அந்த புல்வெளியில் அப்படியேதான் வெறித்து கிடக்கிறான். 'நிலா' ஆமி கடித்துச்சப்பிய நாளிலிருந்து மழையோ பனியோ வெயிலோ அவனுக்கு உறைப்பதில்லை. மனம் மரத்துப் போனது.

நாய்கள் ஊளையிட்டன. நள்ளிரவுக்கு முன்னிருட்டு வழி சொல்லிக் கொண்டிருந்தது. அவன் மல்லாந்து படுத்திருந்தான். எப்போதோ எழுதிய கவிதை காரணமின்றி மனசுக்குள் தலை உயர்த்தி பார்த்தது. நிலாவுக்கு விருப்பமான கவிதை வரிகள்...

**இந்தக் காற்றைக்கிழித்து**
**உன் பெயரை எழுதவா?**
**இல்லை!**
**என் மூச்சை நிறுத்தி**
**உன்னை அடையவா?**
**நிலவே-நிலவே**
**எந்தன் இதயம்**
**முழுக்க உன் நினைவை**
**வழித்து-கோயில் கட்டவா?**

"ஓ....நிலா, என்றுமில்லாதவாறு மனம் அந்தரப்பட்டது, துடித்தது. நிலாவின் கூந்தல் வாசம் குப்பென அடித்தது. விழி முழுக்க நீர்கட்டியது. அவன் கனவுகளை கலைக்குமாப் போல். அந்த வெள்ளை வான் அவனருகில் கிறீச்சிட்டு நின்றது. இரண்டு பேர் அவனை வலுக்கட்டாயமாய் தூக்கினர். "என்னைய விடுங்க. நிலா வாழ்ந்த இடத்த விட்டும் வரமாட்டன். எங்க கொண்டு போறீங்க?" "முல்லேரியாவுக்கு" "ஐயோ எனக்கு பைத்தியமில்ல," "எல்லாப் பைத்தியமும் இப்படித்தான் கத்தும்." அவன் கதறக்கதற வானில் ஏற்றினர். அந்த புல்வெளியை வெறித்துப் பார்த்தான். வான் தூரமாய் போகப் போக 'நிலா' வந்து நிற்கும் புல்தரை வெறும் புள்ளியாய் தேய்ந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஒன்றும் ஒன்றுதான்

**தருவது ரசிகன்**

**கா**ட்டு வழிப்பாதை. மாலை மயங்கும் வேளை. விரைவில் ஊருக்குள் சென்றுவிட வேண்டும் என்ற துடிப்போடு நடந்தான் காளை.

வழியிலே எதிர்ப்பட்டனர் இருவர். காளையைக் கண்டதும் அறிமுகமில்லாத போதும் புன் முகம் காட்டினர்.

"ஊருக்குத்தானே..... எங்கிருந்து வருகிறீர்கள்?"

காளையோடு நடந்த படியே பேச்சுக் கொடுத்தனர்.

வழித்துணைக்கும், பேச்சுத்துணைக்கும் இருவர் கிடைத்ததில் காளைக்கும் மகிழ்ச்சி.

"சோழபுரத்தில் இருந்து வருகிறேன்."

"நினைத்தேன்."

"என்ன நினைத்தீர்கள்?"

"தங்கள் முகத்தில் தெரியும் மிடுக்கும், தோற்றப் பொழிவும், நடையில் உள்ள துடுக்கும் சோழர் மரபைச் சேர்ந்தவர் என்று சொல்லாமல் சொல்லுகின்றனவே."

பதிலுக்கு ஒரு புன்னகை மட்டும் காளையின் உதட்டில்!

சிறிது தூரம் மூவரும் மௌனமாய் நடந்தனர். மௌனத்தை காளை உடைத்தான்.

"தங்கள் இருவருக்கும் எந்த ஊர்?"

"பாண்டிய நாட்டவர் நாம். மதுரை சொந்த ஊர்!"

"வெகு தூரம் சென்று வருகிறீர்கள் போல் இருக்கிறது."

"இல்லையில்லை, வெகு நேரம் காத்திருந்தோம் வேட்டைக்கு இரைதேடி."

அவர்களைப் பார்த்தால் வேட்டையாட வந்த அறிகுறிகள் தெரியவில்லை. வெறுங் கையுடன் வந்து எப்படி வேட்டை நடத்த முடியும்? காளைக்கு சந்தேகம் வந்தது. கேட்டே விட்டான்.

"வேட்டைக்கா? வெறுங்கையுடன் எப்படி?"

அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் நோக்கியபடி சிரித்தனர். அதில் ஒருவன் சொன்னான்,

"இது வேறு விதமான வேட்டை. நாம் யார் தெரியுமா?"

"யாராக இருந்தால் என்ன? இப்போது என் நண்பர்கள்!"

இருவரும் தமது முரட்டு மீசைகளை திருகி விட்டுக் கொண்டு காளையை நோக்கித் திரும்பினர்.

"நண்பர்கள் என்று நன்றே சொன்னாய். நண்பர்களுக்குள் எதற்கு ஒளிவு மறைவு? அந்த மூட்டைக்குள் என்ன வைத்திருக்கிறாய்? அவிழ்த்து காண்பித்து விடப்பா."

காளை உஷாரானான். அப்பாவியாக முகத்தை வைத்தபடி, அவர்களின் திட்டம் புரியாதது போலக் கேட்டான்.

"நட்பு நெஞ்சுக்குள்தானே இருக்கும் மூட்டைக்குள்ளே இருக்குமா?"

இருவரில் ஒருவன் இதுவரை செய்த பாசாங்கு அனைத்தையும் மறந்து சாட்டமாய் கூறினான்;

"மூட்டையை அவிழ்க்க மறுத்தால் உன் உயிர் மூச்சு நிறுத்தப்படும்."

காளை பயந்தது போல் நடித்து மூட்டையை அவிழ்த்தான். அவிழ்த்த வேகத்தில் மூட்டைக்குள் இருந்த குறுவாளை கரத்தில் ஏந்தி நிமிர்ந்தான்.

எதிரே நின்றவர்கள் இருவரும் குறுவாளைக் கண்டதும் கடுகதி வேகத்தில் தப்பி ஓடினர்.

□□

**கா**ளைக்கு வியப்பு. காரணம், அவன் எதிரே நின்றிருந்த பாவையின் தேக வனப்பு!

பட்டாடை அணிந்திருந்த பொற் பாவை. அந்தப் பட்டாடையாக மாறி அவள் மேனியில் சூடப்படத் துடித்தது காளையின் மன ஆசை.

தொப்புள் சுழி தெரிய அவள் ஆடை தரித்திருந்த பாங்கு ஆடவர் எவரையும் மோகக் கடலுக்குள் நிச்சயம் மூழ்க வைக்கும்.



## இலக்கிய நயம்

காளையும் மூழ்கித்தான் போனான்.

நீருக்கு ஏங்கும் பாலை நிலம் போல ஏங்கித்தான் நின்றான்.

அவள் புன்னகைத்தாள். அது மோகத் தீயை மூண்டெரியச் செய்யும் மாயநகை.

அவன் அருகே மெல்ல நடந்து வந்தாள். நடையல்ல அது நடனபாவனை.

அவள் நயனங்களில் கூட ஆடவர்கள் கவனத்தை கொத்தி எடுக்கும் மதன பாவனை இருப்பதாக நினைத்தான் காளை.

சமீபத்தில் அவள் வந்த போது விழிகளுக்குள் அடங்காத முன் எழில்கள் 'மோதிக் சாய்த்திடுவோம்' என்று எச்சரிப்பது போல தெரிந்தன காளைக்கு.

மாங்கனிப்பாவை மாதுளம் இதழ்கள் திறந்து கேட்டாள் அவனிடம்,

"பார்த்தது போதும், நாலு வார்த்தை யாவது பேசுங்கள்."

"பார்த்ததுதானே அடைத்தது வாயை! அடித்துத் திறந்தது மனக் கதவை!"

வெள்ளி நாணயங்கள் தரையில் சிதறியது போல பளிங்குப் பாவை நகைத்தாள்.

"அனுபவம் இல்லையோ?

"என்ன அனுபவம்?"

"பெண்களோடு பழகிய அனுபவம்."

"பழகியதுண்டு; பறிகொடுத்ததில்லை மனதை! எனவே இந்த அனுபவம் புதிது! இனியது அறியும் ஆவலும் புதிது!"

"பிடித்திருக்கிறதா என்னை?"

"துடித்துக் கொண்டிருக்கிறது என் இதயம்! அதன் ஒவ்வொரு துடிப்பும் கட்டியம் கூறும் கரும்பின் மீது இந்த எறும்பின் காதலை!"

நெருங்கினாள். சட்டென்று அவன் கன்னத்தில் ஒரு இதழ் முத்திரை அமர்த்தினாள்.

கன்னத்தில் உணர்ந்த கனியிதழ் முத்தம் ஒரு புறம். அவள் முத்தமிடும் போது நெருங்கியதில் அவன் கரங்களில் மோதிய முன் எழில்கள் தந்த மோக இதம் மறுபுறம் திண்டாடிப் போனான் காளை.

மெய் மறந்தான். அவள் மேனியை தன்னை நோக்கி இழுத்து, தன் இரு கரங்களால் அவள் முகத்தை ஏந்தி இதழ்களை ஆக்கிரமிக்க உதடுகளை அனுப்பினான்.

கீழ் இதழை உதட்டால் அவன் ஆக்கிரமிக்க, அவளோ அவனது மேல் உதட்டை தன் இதழ் ஒன்றால் நனைத்து மகிழ்வித்தாள்.

இதழ்களை ஆக்கிரமித்த முறையில் இருந்தே அவன் பருவப் போருக்கு புதியவன் என்பதை அவள் உணர்ந்தாள்.

புதியவன்; ஆனாலும் இன்பக் கலையை அறிவதில் ஆர்வம் உள்ளவன். அது மட்டு மல்ல வலிமையும் வேகமும் ஒன்றாய்க் கலந்தவன் என்பதையெல்லாம் அறிந்து கொண்டாள். அணைப்பும், இதழ் கலப்பும் மூலமாக மட்டும்!

அவள் கழுத்தை வருடி மெல்ல இறங்கிய அவன் கரத்தை தடுத்து, தன் மேனியை விடுவித்து நகர்ந்து நின்றாள்.

படிக்க ஆரம்பித்த இன்பக் கதை பாதியில் தடைப்பட்ட ஏமாற்றத்தோடு அவன் நோக்க,

"அனுபவம் எப்படி?"

குறும்பாய் கேட்டாள்.

"உண்ணவேயில்லை நான்! சுவையைப் பற்றி எப்படிச் சொல்வது?"

"நான்கிதழ் கலந்ததும் நன்றாயில் லையோ?"

"பாகாய் இனித்தது. ஆனால் போதாது. வலையை வீசிவிட்டு விலகிப் போகிறாய். நிலவே வா. வானம் நான்!"

அவள் நகைத்துவிட்டுக் கேட்டாள்.

"வீசிய வலைக்கு விலை என்ன?"

"விலையா?"

"ஆம்; தரப்படும் பொன்னுக்கு ஏற்பவே பேரின்பத்தின் அளவும் தீர்மானிக்கப்படும்."

காளை திகைத்துப் போனான்.

"நீ...விலைமகளா?"

"விலை எனக்கல்ல; தாங்கள் அறிய விரும்பும் இன்பக் கலைக்கு!"

முகம் மாறினான் காளை! 'இவள் நடிப்பெல்லாம் இதற்குத்தானா?' வெறுத்து வெளியேறினான் விலைமகள் இல்லம் விட்டு!

□□

**சோ**ர்ந்து போய் நண்பனது இல்லம் போனவனை வரவேற்ற நண்பன் கேட்டான்,

"கொண்டுவரவில்லையா?"

"என்ன?"

"பொன்னோடு வருவாய். என் கஷ்டம் தீருமென்று எதிர்பார்த்திருந்தேனே! நீயோ வெறுங்கையோடு வந்திருக்கிறாயே!"

இகழ்ச்சியோடு தன் நண்பனை நோக்கிவிட்டு, வந்த வழியே திரும்பினான் காளை. ஓடிவந்து தடுத்து,

"எங்கே போகிறாய்?"

கேட்ட நண்பனுக்கு காளை சொன்னான்;

"பயன் கருதியே நீ நண்பனானாய். விலை மகளிரும், திருடரும் நம் மீது காட்டும் கரிசனத்திற்கு நேர் உனது நட்பும்!"

**"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும், கள்வரும் நேர்."**

அதிகாரம் 82-குறள்-813.

பெறுவது கொள்வார்-விலைமகளிர்

உறுவது-பயன்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—97

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | ■ | 3 | |
| 4 | | ■ | 5 | | | ■ |
| | | 6 | | ■ | ■ | 7 |
| ■ | | | ■ | 8 | | |
| 9 | ■ | | ■ | | ■ | |
| 10 | | | | | ■ | |
| | ■ | | ■ | | ■ | |

**இடமிருந்து வலம்**

01. வில் தொடுப்பதில் அர்ஜுனனுக்கு இது தெரிந்திருந்தது.
03. இதன் முனையும் கூர்மையானது.
04. இது வானத்திலே காயும்.
05. இராமனின் வாரிசு.
08. இதைப்போக்க மருந்து கிடையாது.
10. இது ஒரு திரவ உலோகம்.

**மேலிருந்து கீழ்**

01. மீனுக்குத் தலை, பாம்புக்கு வால் காட்டுவது.
02. மூலிகைகள் கொண்டும் தயாரிக்கலாம்.
04. இரவை இப்படியும் சொல்லலாம்.
06. மணிக்கட்டிலும் இது இருக்கும்.
07. பாரதியாரின் தலையில் இருப்பது.
08. இதிலும் வாசனை உண்டு.
09. இது ஒரு நாடு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 08.04.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-97
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-95ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ணி | ■ | 2 சே | 3 வ | 4 க | ன் |
| 5 ரூ | பா | ய் | ■ | க் | சா | ■ |
| ட | ■ | 6 ஐ | க் | கி | ய | ம் |
| ம் | ■ | ய | ■ | ர | ம் | ■ |
| ■ | 7 கு | ம் | ப | ம் | ■ | 9 சே |
| ■ | ரு | ■ | 8 க் | ■ | 10 தா | ய் |
| 11 நீ | 12 தி | ப | தி | ■ | டி | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 95இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. வீ. விஜயசாந்தி, பம்பலப்பிட்டி.
2. கே. சிவானந்தம், பண்டாரவளை.
3. செல்வி. ஹுஸைனா, மூதூர்-05.
4. செல்வி. ஜெ. பிரமிளா, ஏத்தாளை.
5. பி.எம். பைஸர், காத்தான்குடி.
6. பி. கணேசமூர்த்தி, வவுனியா.
7. செல்வி. பிரியா சுப்பிரமணியம், மட்டக்களப்பு.
8. எஸ். சிங்கராசா, மட்டக்களப்பு.
9. செல்வி.எல். தருமரத்தினம், கொழும்பு-6.
10. திருமதி.எஸ். ரஸீனா, நாவலப்பிட்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

ரூபவாஹினியும், எம்.ரி.வியும் ஒரே நாளில் தமிழ் திரைப்படங்களை ஒளிபரப்புவது நியாயமா?

**எல்.ரகு-ஹப்புத்தளை.**

*நியாயமில்லை மட்டுமல்ல, இரண்டு நிறுவனங்களுக்கும் அதனால் லாபமுமில்லை.*

□□

டியர் சிந்தியா! உங்களை அன்பால் கவர்ந்த முதல் மனிதர் யார்?

**க.வெண்ணிலா-பதுளை.**

*அன்புள்ள அம்மா. அதன் பின்னர் பட்டியல் நீளும்.*

□□

இரு உள்ளங்கள் மனதில் ஆசையை வளர்த்துவிட்டு வெளியில் நடிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**ரோசி-கல்முனை.**

*நடிப்பதாக ஏன் நினைக்க வேண்டும்? சொல்லத் துடிக்கிறார்கள், ஏதோ ஒன்று தடுக்கிறது என்று நினைக்கலாமல்லவா?*

□□

மனதில் நிம்மதி -சந்தோசம் இல்லை என்ன செய்வது?

**ரிஸானா வஸீர்-சீனன்கோட்டை.**

*நிம்மதிக்கு என்ன தடை என்று தெரிந்து அதனை ஒரு புழுவைப்போல நசித்து விடுங்கள். சந்தோசம் ஆஜர்.*

□□

சமீபத்தில் தங்களை பாதித்த திரைப்படம் எது.

**எஸ்.விஸ்வம்-கண்டி.**

*நல்ல படம் என்று திருப்தியாக சொல்லக் கூடிய "பம்பாய்". அந்த இரட்டையரான சுட்டிப் பையன்களை எங்கே பிடித்தார்களோ!*

□□

நேரில் சந்திக்க முடியாமல் வருத்தப்பட வைத்த நபர் யார்?

**எஸ்.எம்.எம்.மஸ்னவி-புத்தளம்.**

*அன்னை தெரேசா என்று சொல்ல ஆசைதான். உண்மையைச் சொல்ல வேண்டு மானால் கடன் வாங்கிவிட்டு தலைமறைவாகிவிட்ட ஒருநபர் ரொம்ப வருத்தப்பட வைத்துவிட்டார்.*

□□

அரசியலில் ஈடுபாடுடைய நல்ல இதயங் களைத் துப்பாக்கி பதம் பார்ப்பதன் நியாயம் என்ன?

**ஏ.எஸ்.ரிஸ்வி-மதவாச்சி.**

*'வோட்டு' என்று கேட்பது 'வேட்டு' என்று*



*காதில் விழுந்து தொலைத்து விட்டதோ!*

□□

தமிழ் தலைவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன நடக்கும்?

**கே.ராஜன்-கொழும்பு-11.**

*யார் பெரியவர் என்பதில் 'சபாஷ் சரியான போட்டி' நடக்கும்.*

□□

தொடர்ந்து காதலில் தோல்வி அடைபவர் களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**எஸ்.விஜயன்-அக்கரைப்பற்று-7.**

*விக்கிரமாதித்தன் கதையைப் படித்திருக் கிறார்கள் என்று நினைக்கிறேன்.*

□□

டியர் சிந்தியா! பெண்கள் மௌனம் கொண்டால் ஆண்கள் என்ன செய்ய வேண்டும்?

**எம்.எஸ்.எம்.லாபீர்-புல்மோட்டை-01.**

*மௌனம் சம்மதத்தின் அறிகுறியாகவும் இருக்கலாம். சாத்து விழுவதற்கான முன்னறி விப்பாகவும் இருக்கலாம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

□□

டியர் சிந்தியா! பல்கலைக்கழக ராக்கிங் பற்றி?

**எம்.ரி.எம்.இக்ராம்-இஹலகினியம.**

*அளவுக்கு மிஞ்சினால் எதுவும் நஞ்சுதான் இக்ராம். ராக்கிங்குக்கும் அது பொருந்தும்.*

□□

சமாதானம் ஏற்பட்டால் அகதிகளுக்கு விடிவு காலம் ஏற்படுமா?

**ஏ.எல்.முகமட் சதாத்-காத்தான்குடி.**

*ஏற்படும்! ஆனால் சமாதானம்தான்..?*

□□

சார்ஜா கிண்ணம் யாருக்கு?

**எஸ்.ரவீந்திரன்-கொழும்பு-06.**

*அநேகமாக பாகிஸ்தானுக்கு! (பதில் சொல்லப்பட்ட திகதி 11.04.95)*

□□

அன்னை மேரியாக தமிழக முதல்வரை சுவரொட்டியில் வெளியிட்டது பற்றி என்ன நினைக்கிறீர்?

**ஆர்.சாம்சன்-நீர்கொழும்பு.**

*ஒரே சொல்; அநாகரீகம்!*

**இவ்வாரம் (16.04.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 76

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
குருச்சேத்திரப்போரின் கொடுமைக்களங்கண்டு
கதிரவனும் தன்கண்ணைக் காட்டா தொளிகின்றான்!
ஒரே குலத்திலே உதித்த ஒப்பற்ற சோதரர்கள்
பெரியோர் சிறியோராய் போர் முனையில் காய்கின்றார்!
ஊழிப் பெருவெள்ளமென ஊற்றெடுக்கும் செங்குருதி
ஆழி போலாங்கே அலை மலையாய்ப் பாய்ந்து வரும்
வேளையிதைக்காண வேண்டாமென நானும்
கோழை யெனவே ஒதுங்கி குமுற நினைக்கின்றேன்.
எத்தனையோ போர் முனைகள் என் கண்கள் கண்டதுண்டு
அத்தனையும் இத்தனைக்கு அடைதலுக்கும் ஆகாது.
எத்திசையைப் பார்த்தாலும் எங்கிருந்து கணித்தாலும்
ஒத்திசையோடெடுத்தியம்ப ஒருக்காலும் முடியாது.
ஒரு பழியுமறியாத ஓராயிரமுயிர்கள்
கருகி மடிகின்ற கொடிய போர் நிலை ஒய்ந்து
திரௌபதியாள் தான் பூண்ட தனிச்சபதம் தான் முடிந்து
அரிவையவள் கூந்தல் முடிவதுவுமெந் நாளோ?

-காட்சி தொடக்கம்-

திரௌபதி தனித்திருக்கையில் முன்பொரு நாள் யுதிஷ்டிரர் கேட்ட கேள்வி அவள் நினைவில் வருகிறது.

**யுதிஷ்:** பாஞ்சாலி! கூந்தல் குலைந்து குரூரமாகத் தோன்றுவதேன்?

**திரௌ:** துச்சாதனன் என்னும் துரோகி அவன் கையால் தொட்டே இழு பட்டுத் தூய்மை கெட்ட கூந்தலினை தொட்டே இழுத்து முடித்திடவும் நான் துணியேன்! வில்லேந்தும் வீரர்களில் வீரனென்றும் சூரனென்றும் சொல்லால் புகழோங்கும் நாயகரும் அவர் அண்ணன் மல்லுக்கு முன்னோனும் மலை நிகர்த்த தோளோனும் இல்லாள் இவளுக்கு நேர்ந்த இடர்களைய, பொல்லாங்கு புரிந்தோனின் பெருமார்பினைப் பிளந்து பெருகி வரும் குருதியினைக் கொண்டுவர வேண்டும்! குலைந்துள்ள என் கூந்தல் அக்குருதியிலே தோய்த்து, கோதி இழுத்துக் குலப் பெருமை தனைக்காப்பேன்!

இந்த வேளையில் விராடநாட்டரசி சுதேசினை திரௌபதியிடம் வருகிறார்.

**சுதேசி:** பாராட்டுக்கள் மகாராணி!

**திரௌ:** தயவுசெய்து என்னை திரௌபதி என்றே அழையுங்கள் அரசியாரே!

**சுதேசி:** ஏற்கெனவே கௌராந்தரியாக தங்களை அழைத்து குற்றம் இழைத்து விட்டேனே!

**திரௌ:** அது இழிவல்ல மகாராணி! அது காலத்தின் கட்டாயமாகும். அக்கொடிய காலத்தைப் பற்றி நினைவு கூராதிருப்பதே நல்லது. அது சரி! எதற்காக என்னை பாராட்ட முற்பட்டீர்கள்?

**சுதேசி:** சுபத்திரையின் மகன் அபிமன்யு கங்கை மைந்தர் பீஷ்மரையே எதிர்த்துப் போரிட்டுள்ளான். பீஷ்மர் பெருமகிழ்ச்சியில் அபிமன்யுவைப் பாராட்டியதுடன் வாழ்த்தியுமிருக்கிறாராம்!

**திரௌ:** வெறுமனே வாழ்த்துக்களை வழங்குவதைத் தவிர பிதாமகர் வேறு என்னதான்செய்யமுடியும் மகாராணி? கௌரவ குடும்பத்தின் முதியவர்களுக்கு இது மிகவும் ஒளிமங்கிய காலம்! அவர்களுக்கு இது படுபட்சி காலம். ஆசி கூறுவதைத் தவிர அவர்களிடம் வேறு எதுவுமே இல்லை!

**சுதேசி:** திரௌபதி! உன்னுடைய வெறுப்புணர்வுகளைக் கொஞ்சம் தளர்த்த முடியாதா?

**திரௌ:** என்னைக் கட்டுப்படுத்த முயற்சிக்காமலில்லை அரசியாரே! ஆனால் ஒவ்வொரு தடவையும் என் கூந்தலை என் விரல்கள் தீண்டும் போதெல்லாம் என்னையும் மீறிய வெறி ஏறுகிறது. பிதாமகரின் நிலை எனக்குக் கவலையையே அளிக்கிறது. அன்று என் துகிலுரியப்பட்டபோது அவரடைந்த துயரத்தை அவர் கண்கள் எனக்கு உணர்த்தவே செய்தன. அவரை மதிக்கிறேன். இருப்பினும் அவர் தான் பூண்ட விரதத்தையே பெரிதாக மதிக்கிறார். அதைவிட கடமை பெரிதல்லவா? அதனை அவர் உணராமலில்லையே மகாராணி! துரதிஷ்டவசமாக அஸ்தினாபுரத்தின் தர்மிஷ்ட தூண்களெல்லாம் சூறாவளியில் சிக்கிச்சிதைகின்றன. இன்று நடைபெறும் போரில் பிதாமகர், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் போன்றோர் அவர்களுக்குரிய அணியில் இல்லையே! இவர்களெல்லாம் செத்து மடிய வேண்டும் என்பது என் ஆசையில்லை ராணி! ஆனால் துச்சாதனன் இரத்தத்தால் என் சபதம் முடிக்கப்பட வேண்டுமென்றால், அவர்கள் மரணமடையத் தான் வேண்டும். அபிமன்யுவுக்கு பிதாமகர் அளித்த ஆசிகள் எல்லாம் குற்ற உணர்வுடைய அவருள்ளத்தின் பிரதிபலிப்பேயாகும்!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரப் போர்முனை–இரு அணிகளும் மும்முரமாக மோதும் காட்சிகள்.

**துரி:** துச்சாதனா! குலகுருவிடமும் துரோணாச்சாரியாரிடமும் போ! பிதாமகர் பீஷ்மரை பாதுகாப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறு. எம்மணிக்கு வெற்றி ஈட்டித்தர வேண்டியவர் அவரே! அவரைப் பாதுகாப்பது மிகமிக முக்கியம்!


இடையிடையே போரின் கோரமான காட்சிகள்.

**துரி:** யுயுச்சு எங்கே ஒளிந்து கொண்டான்? தோற்கப் போகும் அணியை மடையன் சேர்ந்து கொண்டானே! துரோகி அவனைத் தண்டித்தாக வேண்டும்! அவனிருக்கும் பக்கம் தேரைச் செலுத்து சாரதியே!

போர்க் காட்சிகள்...!

**யுதிஷ்:** இன்று சூரியன் மறையவே மாட்டான் போல் தோன்றுகிறதே! பிதாமகர் நமது படைகளை கதிர் கொய்வது போல் வெட்டி வீழ்த்துகிறாரே!

**சிகண்:** கவலை வேண்டாம் மகாராஜா! தர்மமே வெல்லும்! உங்கள் பிதாமகர் ஒரு சுத்த வீரரல்ல! இங்குள்ளோரில் அவர் ஒரு கோழை. அர்ச்சுனனிடம் தெய்வீக சக்தி வாய்ந்த கணைகள் இருந்தும், அவற்றை இப்போரில் அவர்



பயன்படுத்தவில்லை. பிதாமகரும் தான் விரும்பும் போதே சாவினை அணைக்கும் தனது விசேட கவசத்தைத் துறந்து விட்டு இப்போரில் குதித்திருக்கலாமே? தன்னை எவராலும் கொல்ல முடியாது என்ற இறுமாப்பு அவருக்கு. அந்தக் கவசத்தையும் தகர்த்தெறிய வாசுதேவ கிருஷ்ணன் வழி வைத்திருப்பார்.

**யுதிஷ்:** அதோ! அங்கே பார்த்தீர்களா? எல்லாருடைய கவனமும் அத்திசை நோக்கித்திரும்பியுள்ளதே!

-காட்சி மாற்றம்-

யுத்தக் காட்சிகள்–மதுரா மாமன்னர் சல்லியனுடன் மத்ஸய நாட்டு இளவரசனான உத்தரகுமாரன் போர் புரிய முன்வருகிறான்.

**சல்லி:** நீ யார் குழந்தாய்?

**உத்த:** மாவீரர் சல்லிய மாமன்னரே! மத்ஸய நாட்டு மன்னன்மகன் நான் என்றால் அத்துடன் அறிமுகம் முடியாதென நினைக்கிறேன்!

**சல்லி:** அப்போ உனது முழுமையான அறிமுகத்தைத் தொடரலாமே!

**உத்த:** என்னுடைய இளமைப் பருவம் பற்றிய கவலையை விடுத்து நான் தொடுக்கும் பாணங்கள் ஏற்படுத்தப் போகும் காயங்களின் ஆழம்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

**சல்லி:** உனது வீரத்தை அளவிட்டறிந்த பின்னர் தான் உன்னைப் பற்றி அறிந்து கொள்ளத் துணிந்தேன் மகனே!

**உத்த:** வாசுதேவ கிருஷ்ணர் இன்று எவருடைய இரதத்துக்குச் சாரதியாக இருக்கிறாரோ அதே போன்று, விராட யுத்தத்தின் போது அவருடைய தேர்ச் சாரதியாக இருந்தவன் நான்.

**சல்லி:** வாய் வீச்சை விடுத்து என் கணை வீச்சுக்குப் பதில் சொல்ல ஆயத்தமாகு மகனே!

**சல்லிய மாமன்னருக்கும் உத்தரனுக்குமிடையில் கடுமையான சண்டை நடக்கிறது. சல்லியமன்னரின் படைக்கலன்களைத் துணித்த உத்தரன் அவருடைய தேர்ப்பாகனையும் கொன்று விடுகிறான். தேர்ச்சில்லையும் உடைத்தமையினால் சல்லியன் தரையில் விழுகிறார்.**

**உத்த:** மதுரா மாமன்னரே! எனது வாய்மொழியை விடுத்து இப்பொழுது எனது கணைகளின் தகைமையை உணர்ந்தீர்களா?

**சல்லிய மன்னன் கீழே கிடந்த சட்டியை எறிந்து உத்தரனைக் கொன்று வீழ்த்துகிறார். பின்னர் அவனுடைய சடலத்தை அணுகி—**

**சல்லி:** இளைஞனே! இத்தகைய வீரச் சமர் புரிந்து திறமை காட்டி உயிர் துறந்த உனக்கு நான் வணக்கம் தெரிவிக்கிறேனடா!

கதிரவன் மறைகிறான்-பீஷ்மர் சங்கினை ஊதி முதல் நாள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறார்.

-காட்சி மாற்றம்-

மத்ஸய நாட்டு மன்னரும் அரசி சுதேசினையும்.

**மத்.மன்:** சுதேசினை!

**சுதேசி:** வாருங்கள் பிரபு! தாங்கள் ஏன் இப்போது வந்திருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. நமது மகன் போர்க்களத்தில் வீர தீர பராக்கிரமச் செயல்களில் பேர் பெற்றிருப்பான். அதனைக் கூறி என்னைப் பாராட்டவே இங்கு வந்திருக்கிறீர்கள்?

**மத்.மன்:** உண்மைதான் சுதேசினை! உன் மகன் மிகச் சிறப்புடன் போர் புரிந்து எல்லாருடைய பாராட்டையும் பெற்று விட்டான். பாண்டவர்கள் படைகள் மட்டுமல்ல கௌரவப் படையினரும் அவன் வீரத்தைப் பாராட்டியுள்ளனர். மதுரா மாமன்னர் சல்லியன்கூட உன் மகனின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டியதுடன் வாழ்த்தும் கூறினாராம்! விராட நாட்டுக்கும் செய்தி அனுப்பியுள்ளேன்–உத்தரையையும் இங்கு அழைத்து வரும்படி....!

**சுதேசி:** உத்தரை நிறை கர்ப்பிணியல்லவா? அவள் பயணம் செய்வது நல்லதல்லவே! அவளை ஏன் இங்கு அழைத்து வரவேண்டும்?

**மத்.மன்:** அதனாலென்ன..? மாவீரனின் மருமகன்! வீராதி வீரர்களின் பேரனின் மகனான அக்குழந்தை, இந்த யுத்தகளத்தில்- வீரத்தின் விளை நிலத்தில் பிறப்பதுதான் பொருத்தமாயிருக்கும்!

**சுதேசி:** எல்லோருக்குமே இளையவனான மாமனாரை முதலில் குறிப்பிடுகிறீர்களே!

**மத்.மன்:** நம்மகன் உத்தரன் இன்று இளையவனல்ல; இன்று அவனுடைய புகழ் போர்க்களத்தில் முதன்மை நிலையினை அடைந்துள்ளது!

**சுதேசி:** உண்மையாகவா பிரபு! நமது மகனின் வீரதீரச் செயல்களைப் பற்றி விபரமாகக் கூறுங்களேன்!

**மத்.மன்:** சல்லிய மன்னன் முன் நம்மகன் வந்ததும், அவர் இவனை யார் என வினவியிருக்கிறார். அப்போது நம் மகன் "மன்னவரே! மத்ஸய நாட்டு மன்னனின் மகன் நான். எனது இளமை பற்றிக் கணக்கிடாமல் என்னுடைய பாணங்களால் ஏற்படும் காயங்களைக் கணக்கிடுங்கள்! இன்று வாசுதேவ கிருஷ்ணன் எவருடைய இரதத்துக்குச் சாரதியாக இருக்கிறாரோ, அவருக்கு விராட நாட்டுப் போர்க்களத்தில் நானே சாரதி யாக இருந்தேன்" என்று கூறியிருக்கிறான். போரில் நம்மகன் தன் கணைகளால் சல்லிய மன்னரின் மார்பினைத்துளைத்திருக்கிறான். சல்லிய மன்னரும் நம்மகனின் மார்பினைத் தன் கணைகளால் காயப்படுத்தியுள்ளார். இந்த வீரப் போரைக் கண்ட ஏனைய வீரர்கள் செயல் மறந்து இந்த இளைஞனின் வீரத்தைக் கண்டு அதிசயித்து நின்றுள்ளனர். இந்தப் போர் வீரனை ஈன்ற தாயை அனைவரும் ஏற்றிப் போற்றியுள்ளனர்.

**இவ்வாறு கூறிய மன்னரின் கண்கள் கண்ணீர் சொரிவதைக் கண்ணுற்ற சுதேசினை..**

**சுதேசி:** ஆனால்..மகாராஜா!..மகாராஜா...! தங்கள் கண்கள் ஏன் கண்ணீர் சிந்துகின்றன..?

**மத்.மன்:** இவை பெருமையுடன் உதிர்க்கும் ஆனந்தக்கண்ணீர்..! இது...உத்தரனின் தந்தை இவர்தான் என்று பலர் கூறியதால் ஏற்பட்ட பெருமகிழ்ச்சி. அப்பேற்பட்ட வீரனின் தாயாகிய நீயும் நிச்சயம் இக்கண்ணீர் பெருக்கத்தான் வேண்டும்!

**சுதேசி:** மகாராஜா! தாங்கள் எதையோ என்னிடம் கூறாமல் மறைக்கப்பார்க்கிறீர்கள்?

**மத்.மன்:** சுதேசினை...! ஒருவருடைய புகழை மற்றுமொருவரால் மூடி மறைத்திட முடியுமா? உண்மையில் அந்த மாவீரனின் தந்தை நான் தான் என்று உரக்கச் சப்தமிட்டு கத்த வேண்டும் போல் தோன்றுகிறது. நேற்றுவரை என்மகன் உத்தரன் என்று தான் கூறவேண்டியிருந்தது. ஆனால் இன்றோ, அந்த மாவீரன் உத்தர குமாரனைப் பெற்றெடுத்த தந்தை நான் தான் என்று கூறவேண்டும்! நீயும் ,உத்தரனைப் பெற்றெடுத்த அவன் தாய் நான் தான் என்று தான் அறிமுகம் செய்ய வேண்டும்! குருச்சேத்திரப் போர்க்களத்தில் என்ன நடந்தது என்று தெரியுமா? சல்லிய மாமன்னன் நடந்து வந்து உத்தரனின் சடலத்தின் அருகே தலை வணங்கிய நிலையில், "ஓ இளைய வீரனே உன் வீரமரணத்துக்காக உன்னை வாழ்த்துகிறேன்" என்றார்.

**சுதேசி:** யாரிடம் அதைச் சொன்னார்.....? என் மகனிடமா...? என் மகனின் சடலத்திடமா...?

**மத்.மன்:** ஆம் சுதேசினை! நமது மகனின் வீர மரணத்துக்காக நாம் துயருறலாகாது. நாம் துயரப்பட்டுக் கண்ணீர் மல்கினால் அவனுடைய வீரத்துக்கு அது இழுக்காகி விடுமல்லவா? உத்தரனை ஈன்றெடுத்த அவன் அன்னையே எனது பாராட்டுக் களை ஏற்றுக் கொள்!

**சுதேசி:** அந்த மாவீரனின் தந்தையாகிய தாங்களும் பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

காலத்தின் குரல்
குருச்சேத்திரப் போர்முனையில் குன்றுகள்பல போன்று
குவிந்துகிடக்கின்ற பிணக்குவியல் காணீரோ?
சிதைந்து கிடக்கின்ற சடலங்கள் தமை நோக்கி
நினைந்து அவர் பெயரை நிலைத்திடவுமாருளரோ?
நேற்றுவரை நண்பர்களாய் நிலையாக உலவியவர்
இன்றோ எதிர் முனையின் எதிரிகளாய் பொருதுகிறார்!
அன்பு மனையாளை அரியதாய் தந்தையாரை
இன்ப முடனேற்றிப் போற்றிய இளையவரை
எங்கோ விடுத்திங்கு ஏகாந்த நித்திரையில்
சங்கமமாகி சமாதிநிலை எய்திவிட்டார்!
அந்தோ இந்த நிலை அவலமது காணாமல்-வேறு
எங்கோ நாம் செல்வோம் - ஏக்கமது தவிர்ப்போம்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி–குந்தியின் அந்தப்புரம் நோக்கி காந்தாரி வருகின்றார்.

**தாதி:** வாழ்க குந்தி மகாராணி! தங்களை நாடி மகாராணி வருகின்றார்.

**குந்தி:** வணக்கம் அக்கா. வாருங்கள்! அமருங்கள்! எப்படியுள்ளீர்கள்?

**காந்தா:** தன்னுடைய புத்திரர்களை போர்க்களத்துக்கு அனுப்பிவிட்ட ஒரு தாயின் நிலை தனை நீ நன்கறிவாய்! உன்னுடைய அக்காள் மீது உன் பாசத்தை காட்டுவதற்கு தனியான ஒரு முறையினை நீ அனுசரிக்கிறாய். என்னைக் கண்டவுடன் தான் உனக்கு என் நினைவு வருகிறது..!

**குந்தி:** அங்கு வந்து தங்கள் கணவரான மகாராஜாவுக்கு இக்கட்டான நிலையினை ஏற்படுத்த நான் விரும்பவில்லை அக்கா!

**காந்தா:** உனக்கு எத்தனையோ அநீதிகள் அங்கு இழைக்கப்பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பினும் அந்த மாளிகை உன் சொந்த இல்லம் அல்லவா? விதுரரும் மனைவியும் கூட இங்கில்லாத போது நீ ஏன் இங்கு தனித்திருக்க வேண்டும்? உன்னை அங்கு அழைத்துச் செல்லவே நான் இங்கு வந்தேன்! எம் இருவருடைய சுக துக்கங்களை எம்மிடமிருந்து பிரித்தெடுப்பதற்கு எமது இதயங்கள் வேறு எவருடைய சாம்ராஜ்ஜியமுமல்லவே! போர் முனையிலிருந்து எத்தகைய செய்தி வந்தாலும் எம்மிருவருக்கும் ஒரே வகையான தாக்கத்தினைத்தான் அது தரும். தகவல்களை எதிர்பார்த்து ஏங்கும் அந்தக்குரூரமான பொழுதினைத் தனியாகச் செலிவட என்னால் முடியாது குந்தி! என் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றல் என் கண்களை மறைத்திருக்கும் துணிக்கும் கிடையாதே!

**குந்தி:** மன்னியுங்கள் அக்கா! நாமிருவரும் வெறுமனே தாய்மார்களல்ல; இருவருமே சத்திரியாயினிகள்! எம்மிருவரின் புதல்வர்களும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிடுகின்றனர். உண்மையில் துரியோதனனுக்கோ எனது புதல்வர்களுக்கோ நான் வெற்றிக்கான வாழ்த்தினைக் கூறவில்லை. மாளிகையில் எனக்காக இடம் இருக்கிறது என்பதனை நான் அறிவேன். ஆனால் நான் யுதிஷ்டிரனுக்கு வாசுதேவ கிருஷ்ணன் மூலம் அனுப்பிய தகவலைப் போல், அஸ்தினாபுரி அரண்மனையில் என்நிலைக்கு ஏற்றதோரிடம் இல்லை அல்லவா அக்கா! விதுரரின் இருப்பிடத்தில் எண்ணங்களை விட்டுவிட்டு வேறு எங்கும் என்னால் நகர முடியாதிருக்கிறது.

**காந்தா:** நானும் துரியோதனுக்கு வெற்றிக்கான வாழ்த்தினை அளிக்கவில்லை. எனது வாழ்த்துக்களைப் பெறாமலே அவன் சென்றான். அவன் தம்பிமாரின் மனைவியர் குழந்தைகளைப் பெறும் காலம் நெருங்கிவிட்டது என்பதனையும் நான் அறிவிக்கவில்லை; அரக்கு மாளிகை சம்பவம், சூதாட்டம் மற்றும் திரௌபதியின் மானபங்கம் போன்ற சம்பவங்கள் என் நாவைக் கட்டிப் போட்டுவிட்டன. குந்தி! துரியோதனனை மன்னித்துவிடு. அவன் நல்லவன்; ஆனால் அவன் பேராசை அவனை ஆட்டிப் படைக்கிறது. பார்வையில்லா தந்தையின் வாரிசான அவன் தன் அகக் கண்களைக் குருடாக்கி விட்டான்.

**குந்தி:** ஆனால், பிதாமகர், துரோணாச்சாரியார் மற்றும் கிருபாச்சாரியார் ஆகியோருக்கு என்ன நேர்ந்துவிட்டது? திரௌபதியின் துகிலுரிப்புக்குக் கட்டளையிட்டது துரியோதனன்தான் என்று கூறிவிட முடியாது. ஊழலும் கேடும் நிறைந்த அஸ்தினாபுரத்தின் ஆட்சி முறையும் சுயநல நோக்குடன் கூடிய அரசியலும் தான் காரணம். அத்தகைய நடைமுறைகளின் பிரதிபலிப்பாகவே துரியோதனன் விளங்குகிறான். போர் முனையில் சிந்தப்படும் குருதி தான் இக்கறைகளைக் கழுவக்கூடும். அதுவும் எம்மக்களின் இரத்தம் தானே சிந்தப்படுகிறது!

**காந்தா:** இன்று மிக உக்கிரமான போர் நடந்துள்ளது. பல்லாயிரக் கணக்கில் வீரர்கள் உயிர் துறந்துள்ளனர். பல அரசுகள் வீழ்ச்சி கண்டுள்ளன. ஆனால் நம்மிருவரின் புதல்வர்களும் உயிருடன் உள்ளனர். இத்தகவல்களையே உன்னிடம் கூற வந்தேன்.

**குந்தி:** தங்கள் மைந்தர்கள் பற்றியோ எனது புத்திரர்கள் பற்றியோ மாறுபாடான தகவல்கள் வராமலிருக்க வேண்டும்! இறைவன் அவர்கள் நீடூழி வாழ வகை செய்ய வேண்டும் அக்கா!

**காந்தா:** எம் இருவரில் இறைவன் யாருக்கு மதிப்பளிக்கப்போகிறானோ என்பது தெரியவில்லை. பொறுமையுடன் இருப்போம்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–பாண்டவர்பாசறை–அர்ச்சுனனும் சகோதரர்களும் காயமடைந்தவர்களைப் பார்த்து ஆறுதல் கூறிவருகின்றனர். கிருஷ்ணரும் அங்கு வருகிறார்.

**கிருஷ்:** மூத்தண்ணா....!

**யுதிஷ்:** இன்றைய போரில் காயமடைந்துள்ளவர்களை விட இறந்தவர்களின் தொகை அதிகம் போலுள்ளது. நாளை எவ்வாறு இருக்குமோ?

**கிருஷ்:** யுதிஷ்டிர மாமன்னரே! சாதாரண நாட்களை விட வரலாற்று நாட்கள் அதிகம். நாளை பற்றிய கவலையை விடுங்கள்! போரில் இறந்தவரையும் காயமடைந்தவரையும் கணக்கெடுக்கலாகாது. தங்கள் சகோதரர்கள் மாபெரும் வீரர்கள்! அவர்களுடன்–தங்கள் கொடியின் கீழ் மாபெரும் வீரமாமன்னர்கள் அணிசேர்ந்துள்ளனர். போர் பற்றிய கவலையை விட்டு விடுங்கள்! போர் இன்றுடன் முடிந்துவிட வில்லை. இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. பலநாட்கள் தொடரலாம். இறுதிவெற்றி நம் பக்கமே! நாளைய சூரியோதயத்தை காணத் தயாராகுங்கள்.

-காட்சி மாற்றம்-

துரோணாச்சாரியாரும் திஷ்டத்தும்மனும் மோதும் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. திஷ்டத்யும்மன் காயமடைகிறான்.

அஸ்தினாபுரம்–திருதராட்டிரன் அரண்மனை

**திருத:** துருபதனின் மகன் திஷ்டத்யும்மன் இறந்துவிட்டானா சஞ்சயா?

**சஞ்க:** அப்படித்தான்தோன்றியது.ஆனால் பீஷ்மர் அவரைப் பாதுகாத்துவிட்டார்.

**திருத:** பிதாமகர் எங்கே இருக்கிறார்? அவர் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞைக்காகவே அவர் இன்று போரிடுகிறார். எனது புத்திரர்களுக்கோ எனது தம்பியின் புதல்வர்களுக்கோ அவர் உள்ளவரை தீங்கு நேராது. பேரழிவுக்கும் எமக்குமிடையில் அவர்தான் அணையாக இருக்கிறார்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–பீஷ்மர், பாண்டவர்படைகளை நிர்மூலமாக்குவதை அர்ச்சுனன் கண்டு கலங்குகிறான்.

**அர்ச்:** கிரிதாரி! பிதாமகரை தடுத்து நிறுத்தவில்லையானால் நாம் வெற்றிபெறவே முடியாது. வெற்றி பெற்றாலும் ஒரு சிலர் மட்டும்தான் உயிருடன் இருப்பார்கள். ஏதாவது ஒரு வழி தேடியாக வேண்டும் கண்ணா!

**கிருஷ்:** என்ன செய்யலாம் என்று யோசிக்கிறாய் அர்ச்சுனா?

**அர்ச்:** பிதாமகரின் உயிரைப் போக்கியாக வேண்டும்! இரதத்தினை அவர் பால் கொண்டு செல்லுங்கள்!

**கிருஷ்:** உன் விருப்பப்படி ஆகட்டும்!

**அர்ச்:** இது விருப்பமல்ல கேதாரா! கடமையின் கட்டளை!

**கிருஷ்:** அதோ பார்த்தாயா?பீஷ்மரின் கணை! அது உன்னை வாழ்த்தி வரவேற்கிறது!

**அர்ச்சுனனின் கணை பீஷ்மரின் எதிரே மண்ணில் குத்திடுகிறது.**

**பீஷ்மர்:** மகனே! உனக்கு வெற்றி உண்டாகட்டும்!

**அர்ச்:** *(மரியாதையுடன் வணங்கி)* ஓ தலைசிறந்தோரே! பிதாமகரே! எனது யுத்தம் தங்களுக்கு எதிரானதல்ல. கொடுங்கோன்மைக்கும் அநீதிக்கும் எதிரானதே!

**பீஷ்ம:** போர்முனைக்கு வருவதற்கு முன்னரே வாதப் பிரதிவாதங்களும் நடந்து முடிந்துவிட்டன. ஆகவே உன் கணைகளால் நீயே பேசு! நான் அதே போன்று பதிலளிக்கிறேன்!

**அர்ச்சுனன் சங்கினை ஊதுகிறான்.**

•••

**சங்கொலி கேட்ட திரௌபதி மகிழ்ச்சி அடைகிறாள்.**

**சுதேசி:** தனஞ்சயனின் சங்கொலி கேட்கிறதே!

**திரௌ:** ஆமாம்! மாபெரும் போர் தொடங்குகிறது.

**சுதேசி:** துரியோதனனுக்கும் அர்ச்சுனனுக்குமிடையிலா?

**திரௌ:** இருக்காது! அந்த அநாகரிகமானவன் எனது மாவீரனுடன் எப்படி மோதுவான்?

**சுதேசி:** அங்க அதிபன் கர்ணனுடனா....?

**திரௌ:** இல்லை! அந்த தேரோட்டி மகனை பீஷ்மர் போரில் பங்கேற்க அனுமதிக்க மறுத்து விட்டார். நம்மைப் போல் அந்தக் கர்ணனும் ஓரிடத்திலிருந்த வண்ணம் போரொலிகளைக் கேட்டவண்ணம் உள்ளான்.

-காட்சி மாற்றம்-

**கர்ண:** ஆண்டவனே! அநீதிக்கு மேல் அநீதியைத் தந்து என்னை ஏன் சோதிக்கிறாய்? மாவீரர் பீஷ்மர் உயிருடன் உள்ளவரை எனக்கு போரிட முடியாது. அதற்காக அந்த மாவீரன் சாகவேண்டும் என்று நான் விரும்ப மாட்டேன். ஓ மகாதேவா! துரியோதனனிடம் நான் பட்ட கடனை அடைக்க ஆயிரம் பிறவிகள் எடுக்க வேண்டுமா? ஆண்டவனே! கங்கா புத்திரரிடம் கூறி என்னையும் போர் முனைக்கு அழைக்கச் செய்யுங்கள்!

•••

பின்னணிப் பாடல்:
**போரில் பங்கேற்பதுதான் போர் வீரனின் கடமை!
போர் தொடங்கி விட்டாலும் பெருவீரன் கர்ணனவன்
ஆர்வமழிந்தாங்கே அவமதிப்பாலேங்குகிறான்
சோர்வு களைந்தவனின் சோகமதும் தீராதோ!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி: நூலகத்திட்டம்

அருள் ஜுவலர்ஸ்
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
433686

தருவது லியோ - டெ

வாரமலர் தினமுரசு



## அச்சுறுத்தும் புயல்

கேட்லி அம்புரோஸ் – மேற்கிந்திய தீவின் புயல் வேக பந்து வீச்சாளர்.

'அச்சுறுத்தும் புயல்' என்று கருதப்பட்ட அம்புரோஸ் தற்போது வேகம் குறைந்து விட்டதாக அவரது அணியினரே வருந்து கிறார்கள்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து ஒரு நாள் போட்டிகளில் இரண்டு விக்கட்டுக்களை மட்டுமே கைப்பற்றினார்.

அவருக்கு ஏற்பட்ட தோற்பட்டை வலி இன்னும் போகவில்லை, அதுதான் அப்படி என்றும் காரணம் சொல்லப் படுகிறது.

ஒரு வேளை – புயலுக்கு முந்தைய அமைதியோ?

சரி, அம்புரோஸ் என்ன சொல்கிறார்? "நான் சாதிப்பதற்கு இன்னமும் நிறைய இருக்கின்றன. அதற்கு அதிஸ்டமும் ஒத்துழைக்க வேண்டும்!" என்கிறார்.

கடந்த வருடம் பனிக்கால ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் கிடைத்த போது சென்லூவுக்கு திருப்தி இல்லை. தங்கப் பதக்கமே குறி.

இந்த வருடம் கடந்த மார்ச் மாதம் இங்கிலாந்தில் நடந்த பனிச்சறுக்கு நடனப் போட்டியில் தங்கப் பதக்கம் கிடைத்து விட்டது. சென்லூ சீனாவை சேர்ந்தவர். 18 வயது. நிறைவேறியது பதக்கம் பெறும் கனவு.

## சுழலும் தேவதை





## ஆட வரலாம்

23 வயது அழகான டென்னிஸ் விராங்கனை. பெயர் அரென்ட்சா சான்செஸ். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்.

வலது கை ஆட்டக்காரர். மைதானத்தில் இறங்கி விட்டால் இரு புறமும் பாய்ந்து ஆடி எதிராளியை களைக்க வைத்து விடுவார்.

டென்னிஸ் விராங்கனையாக முதலிடத்தில் இருந்த ஸ்டெபி கிராப்பை மூன்று தடவை தோற்கடித்திருக்கிறார் சான்செஸ்.

1994 இன் இறுதியில் அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் தோல்வி கண்டார். இந்த ஆண்டு அந்தப் போட்டியில் வெல்வதை குறிவைத்து இப்போதே தயாராகி வருகிறார்.

1995ல் விம்பிள்டன் பட்டத்தையும் பெற்றே தீருவது என்று புல் தரையில் பயிற்சி பெற்று வருகிறார்.

இந்த ஆண்டில் சான்செஸ் சாதிக்க நினைப்பதில் முக்கியமானது 'நம்பர்வன்' டென்னிஸ் விராங்கனை என்ற இடத்தை பெறுவதுதான்.

'சான்செஸ்' ஆண் ரசிகர்களின் அபிமானத்தை அமோகமாகப் பெற்றுள்ளதாக கணிப்பொன்று கூறுகிறது.

## தலைவரை மறந்த கட்சி



## தட்டி எடுப்பதில் கெட்டித்தனம்



அமெரிக்க சஞ்சிகை ஒன்று நடத்திய பரிசுப் போட்டியில் பரிசை தட்டிக் கொண்ட புகைப்படம் இது. பிறந்த நாளுக்கு என்று தயாரிக்கப்பட்டு மேசையில் வைத்த கேக் பறிபோகும் காட்சி சோகம் தான்.

அதனையும் படமாக் கியதால் சுவாரசியமான புகைப் படத்தை எடுத்து பரிசு தட்டி விட்டார் பிறந்தநாள் கொண் டாடியவர், கில்லாடி.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச உயிரோடு இருந்த போது அவரைப் புகழப் போட்டியிட்டவர்கள் பட்டியல் மகா நீளம்.

இப்போது அவரது கட்சியினரே அவரை மெல்ல மறந்து வருகிறார்கள்.

'விமல் சிறிபுர' என்னும் இடத்தில் பிரேமாவின் சிலை உடைந்து சரிந்து கிடக்கும் காட்சி தான் படத்தில் இருக்கிறது.

கொலைக்கு காரணம் யார் என்று கண்டுபிடிப்பது இருக்கட்டும். முதலில் இந்தச் சிலையையாவது கண்டு கொள்ள மாட்டார்களா?

படப்பிடிப்பு: வின்சன்-வவுனியா.
அனுப்பியது-குலம்.